பக்கங்கள்

விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 098 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 20 திங்கட் கிழமை (04/03/2013) UTHAYAN - A Lively National Tamil Daily


# இலங்கை மீதான பிரேரணை ஜெனிவாவில் இன்று தாக்கல்

## பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே

ஜெனிவா, மார்ச் 4

தமிழ் மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இலங்கை அரசுக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இன்று தாக்கல் செய்யப்படும் என்று ஜெனிவாத் தகவல்கள் கூறுகின்றன.

இலங்கை மீது கடந்த ஆண்டு [2012 மார்ச்] அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறிய நிலையில் இந்தப் பிரேரணை கொண்டுவரப்படுகின்றது.

இலங்கை அரசினால் நியமிக்

பார்க்க பக்கம் 04

## பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும்

### கருணாநிதி வலியுறுத்து



சென்னை, மார்ச் 4

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை இந்திய மத்திய அரசு

பார்க்க பக்கம் 04


பக்கம் 24 விஜய், புஜாரா சதம்





பக்கம் 09 சிறுமியின் உயிரைக் காப்பாற்றிய நாய்





பக்கம் 08 இலங்கைத் தூதரகத்தை அகற்றுங்கள்





## இலங்கைப் போர் ஓர் இனஅழிப்பு; சர்வதேசம் அதை ஏற்கவேண்டும்

### ஐ.நாவில் ஈழத் தமிழர் மக்களவை வலியுறுத்து

ஜெனிவா, மார்ச் 4

"இலங்கையில் நடந்த தமிழின அழிப்புக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும், இலங்கையில் நடைபெற்ற போர் திட்டமிட்ட இன அழிப்பு அல்லது இன ஒழிப்பு என்பதை ஐ.நாவும் சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொள்ள வேண்டும், ஐ.நா.

பார்க்க பக்கம் 04



## ஓட்டோ - மோ.சைக்கிள் விபத்து: 5 பேர் படுகாயம்

### கோண்டாவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

கோண்டாவில் சந்திக்கு அருகில் நேற்றிரவு ஓட்டோ ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றிரவு யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ஓட்டோ ஒன்றின் மீது உரும்பிராய் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியது. இதன்போது ஓட்டோவில் பயணித்த மூவரும், மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி

பார்க்க பக்கம் 04

## சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கேற்ற மாணவி சாவு

கொழும்பு, மார்ச் 4

சிலாவத்துறை பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிக் கொண்டிருந்த சிறுமி ஒருவர் விபத்தின்போது பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தின்போது 10 வயதான சிறுமி ஒருவரே உயிரிழந்தார் என சிலாவத்துறை பொலிஸார்

பார்க்க பக்கம் 04

## ஊர்காவற்றுறை வெடி விபத்தில் கடற்படையினர் 6 பேர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

கடற்படையினருக்கான பயிற்சி நடவடிக்கையின் போது இடம்பெற்ற வெடிப்புச் சம்பவமொன்றில் படைச் சிப்பாய்கள் அறுவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த ஆறு பேரும் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சையின் பின்னர் ஐவர் அங்கிருந்து வெளியேறினர். ஒருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகிறார் என கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய உதயனுக்குத் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை, மண்கும்பான் என்ற இடத்தில் ஆர்.பீ.ஜி. குண்டு வெடித்த

பார்க்க பக்கம் 04

## வெலிஓயா சிங்களப் பிரிவுடன் தமிழ்க் கிராமங்கள் இணைப்பு

### அரசின் செயலுக்கு கூட்டமைப்பு கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 4

இலங்கை அரசால் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட 'வெலிஓயா' சிங்களப் பிரதேச செயலர் பிரிவில் சில தமிழ்க் கிராமங்களை இணைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ளடங்கியிருந்த 9 சிங்களக் கிராமங்களை ஒன்றிணைத்து வெலிஓயா என்ற புதிய பிரதேச செயலர் பிரிவு 2011 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 125 வாக்

பார்க்க பக்கம் 04


புதிய முகவரியில் EXPOAIR

மேலான சேவையினை வழங்க,
நாங்கள் இடம் மாறுகின்றோம்,
உங்களுக்கு வசதியான சூழலுக்கு...



CHANGE OF OFFICE LOCATION
To serve you better... We are moving to a more convenient location...

Expo Aviation (Pvt) Ltd,
40, Kandy Road, Chundikuli, Jaffna
Tel : 0212223891 / 0212226297/ 0212223790.
Email : jaffna@expoavi.com - Website: www.expoavi.com



ஸ்ரீலங்கா சுதந்திர ஆசிரியர் சங்கம் யாழ்.மாவட்டம்



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர ஆசிரியர் சங்கத்தில் அனைத்து ஆசிரியர்களும் இல 80 A, கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று இணைந்து கொள்ளுமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எஸ்.இராமநாதன்
T.P-0217200809

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர், அங்கஜனின் செயலாளர்.

# சர்வதேசத்தை நம்பியே உலகத் தமிழர் உள்ளனர்

## ஜெனிவாவில் மாவை சேனாதிராசா

கொழும்பு, மார்ச் 4

தமிழருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க ஐ.நா. உட்பட சர்வதேச சமூகம் பின்னிற்கக் கூடாது. ஐ.நாவையும் சர்வதேச சமூகத்தையும் நம்பியே உலகத் தமிழர் உள்ளார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா.

ஜெனிவாவில் நடைபெற்ற உலகத் தமிழர் உரிமை மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் 2009 இல் நடைபெற்றது இறுதி யுத்தம் அல்ல. அது தமிழின அழிப்புப் போர். இதற்கு சாட்சியாக முள்ளிவாய்க்கால் பேரவலம் உள்ளது.

இலங்கை இராணுவம் வன்னியில் கொத்துக்கொத்தாகக் குண்டுகளை அள்ளி வீசி அப்பாவி மக்களைக் கொன்றழித்தது. சரணடைய வந்தோரைக் கூட அங்கு இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர். சர்வதேச ஊடகங்கள் வெளியிடும் ஒளிப்படங்கள் இதற்கு ஆதாரமாக உள்ளன.

'சனல் 4' தொலைக்காட்சி இறுதியாக வெளியிட்டுள்ள விடியோ உலகத் தமிழரை மட்டுமல்ல சர்வதேச சமூகத்தைக் கூட அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

படையினரிடம் சரணடைந்த அந்த அப்பாவிப் பாலகன் பாலச்சந்திரனுக்கு நேர்ந்த அவலத்தை வார்த்தைகளில் சொல்ல கஷ்டமாக இருக்கின்றது. இதுவா இலங்கை அரசின் மனிதாபிமான நடவடிக்கை? எனவே, காலம் தாழ்த்தாது இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச சமூகம் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன்வரவேண்டும்.

வன்னி இறுதிப் போரின் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நிறைவடையவில்லை. தற்போதும் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரின் அடாவடிகள் தொடர்கின்றன. பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர்; கைதுசெய்யப்படுகின்றனர்.

அதேவேளை, தமிழரின் பூர்வீக நிலங்கள் நாளுக்கு நாள் இராணுவத்தினரால் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் வடக்கு, கிழக்கில் மூலை முடுக்கெல்லாம் புத்தர் சிலைகளை நிறுவுகின்றனர்.

மீள்குடியேறாமல் எத்தனையோ தமிழ் மக்கள் அகதி வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்க மறுபுறத்தில் அவர்களின் நிலப்பரப்புகள் இராணுவ ஆக்கிரமிப்பில் சின்னாபின்னமாகின்றன.

இதனை எதிர்த்து அமைதி வழியில் போராடும் தமிழ் மக்கள் மீது இராணுவப் புலனாய்வாளர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். இதனால் அங்கு தமிழ் மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் வாழ்கின்றனர். எனவே, தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு வேண்டும்; நீதி வேண்டும். ஐ.நாவும் சர்வதேச சமூகமுமே இதனைப் பெற்றுத்தரவேண்டும்'' - என்று தெரிவித்தார் மாவை சேனாதிராஜா.

# சிறுவர்கள் ஆயு... அரசியல் தீர்வே உடன...

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க இணைப்பாளர்

யாழ்ப்பாணம், மார்ச்.4

இன்றைய சிறுவர்கள் நாளை ஆயுதம் ஏந்தாமல் இருக்க வேண்டுமாயின் தமிழர்களுக்கு உடனடியாக அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும். அரசு தமிழ் மக்களுக்கு எல்லாவித அபிவிருத்தியும் மேற்கொண்டுவிட்டதாகக் கூறுகின்றது. இருந்தபோதும் இன்னமும் அகதி மக்களின் குழந்தைகள் பாடசாலைக்கு செல்ல முடியாத வறிய சூழலிலேயே வாழ்கின்றனர்.- இவ்வாறு தெரிவித்தார் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய இணைப்பாளர் டீ.ஏ.ஜேசுதாசன்.

தேசிய மீனவ ஒத்துழைப்பின் ஏற்பாட்டில் நலன்புரி நிலையங்களில் உள்ள பாடசாலைச் சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மருதனார்மட விவசாயக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட குறித்த இயக்கத்தின் தேசிய இணைப்பாளர் ஜேசுதாசன் உரையாற்றுகையில்,

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளின் நூற்றுக்கு ஐம்பது வீதமானவற்றை அரசு பூர்த்திசெய்துவிட்டதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஜெனிவாவில் வைத்துத் தெரிவித்துள்ளார். இந்தப் பரிந்துரைகளை அவர் தனது வீட்டுக்குள் வேண்டுமானால் பூர்த்தி செய்திருக்கலாம். ஆனால் உண்மையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களினதோ, நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களினதோ தேவைகளை அரசு பூர்த்தி செய்துள்ளதா என்பது கேள்விக்குறியே. வடக்கின் வசந்தம் கூட தமிழ் மக்களை கருத்தில் கொள்ளவில்லை.

இன்னமும் பாதிப்போடு வாழும் மக்களின் நிலையை சர்வதேசம் அறிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களில் வாழும் நிலை ஏற்பட வேண்டும். அதைவிட நிரந்தரமான அரசியல் தீர்வும் உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும் இல்லையேல் இன்றைய சிறுவர்களின் கரங்களிலும் நாளை ஆயுதங்கள் முளைக்கக்கூடும். அரசியல் தீர்வு தமிழர்களுக்கு மாத்திரம் தேவையான ஒன்றல்ல. அது இலங்கையின் சிறுபான்மையாகவுள்ள மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய அனைவருக்குமே அவசியமானது.-என்றார். (ங-13)

# 16 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது

இந்திய மீனவர்கள் 16 பேர் இலங்கைக்கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் எனக் கூறப்படும் இந்திய மீனவர்கள் 16 பேரை இலங்கைக் கடற்படையினர் நேற்று அதிகாலை கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், இவர்கள் பயணித்த 3 றோலர் படகுகளையும் கைப்பற்றியுள்ளனர் என கல்பிட்டி கடற்படையினர் தெரிவித்தனர்.

# சர்வதேச கண்காணிப்பாளர் வடக்குத் தேர்தலில் தேவை

## பிரிட்டன் வலியுறுத்து

வடக்கு மாகாணசபைத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் 07 ஆம் திகதி நடத்த அரசு முடிவெடுத்துள்ள நிலையில், வடக்குத் தேர்தலின் போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று பிரிட்டன் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாண்டு செப்ரெம்பரில் வடக்குத் தேர்தல் நடத்தப்படுவது உறுதி என்று கடந்த சில நாள்களுக்கு முன்னர் இந்தியாவின் 'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், வடக்கில் சுயாதீனமானதும், நீதியானதுமான முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என பிரிட்டிஷ் அமைச்சர் சயிடா வாராசீ தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரிட்டனில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதா, இல்லையா என்பதை இன்னமும் பிரிட்டன் தீர்மானிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேசத்தில் மஹிந்த அரசின் தோல்வியே இலங்கையின் வெற்றி

## இந்திய ஆதரவு ஒருபோதும் கிடைக்காது என்கிறது எதிரணி

கொழும்பு, மார்ச் 4

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு ஒருபோதும் கிடைக்காது. அதனை இலங்கை அரசால் பெறவும் முடியாது இவ்வாறு தெரிவித்துள்ளன பொது எதிர்க்கட்சிகள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவை மேற்கண்டவாறு தெரிவித்தன. இதன்போது மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச நாடுகள் இலங்கையை எதிரி நாடாகப் பார்க்கவில்லை. ஆனால் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தாவிட்டால் அதனை எதிரியாகப் பார்க்கவேண்டிய நிலை தோற்றம்பெறலாம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சிகள், சர்வதேசத்தில் மஹிந்த அரசுக்கு ஏற்படும் தோல்வியே இலங்கைக்கு கிடைக்கும் வெற்றியாகும்.

கடந்த முறை இடம்பெற்ற ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பிலான தமது நிலைப்பாட்டை இறுதித் தருணத்திலே இந்தியா எடுத்தது. ஆனால் இம்முறை கூட்டத் தொடரில் தமது நிலைப்பாடு என்ன என்பதை இந்தியா இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்காவிட்டாலும் இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு ஒருபோதும் கிடைக்காது. அதனை அரசு பெறவும் முடியாது என்றும் அவை தெரிவித்தன.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்துக்கும் அரசே முழுப் பொறுப்பு என்றார்.

இராணுவத்தினர் மனித உரிமை மீறல் செயற்பாட்டில் ஈடுபட்டனரா, இல்லையா என்பதை ஆராய இராணுவம் தலைமையிலேயே குழு நியமிக்கப்பட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் நாம் திருப்தியடைய முடியாது - என்றார் குமர குருபரன். (ஐ-சி)

# அரசியல் தீர்வு குறித்து தற்போது சந்திரிகா பேசுவதில் பயனில்லை

## விக்கிரமபாகு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசவேண்டாம் என்ற ஜே.வி.பியின் நிபந்தனையை ஏற்று, அதனைத் தம்முடன் இணைத்துக் கொண்டு ஆட்சியமைத்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இப்போது இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை என நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் குறித்தும், நாட்டின் நல்லாட்சி குறித்தும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தற்போது கருத்து வெளியிடுகிறார்.

11 வருடங்களாக ஆட்சியிலிருந்தபோது இனப்பிரச்சினைத்தீர்வு குறித்துப் பேசாத அவர், இப்போது அதைப் பற்றிப் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை. தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படவேண்டும் என்றும், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசு நடைமுறைப் படுத்தவேண்டும் என்றும் அவர் கூறுவாராயின், அவர் எம்முடன் இணைந்து அரசுக்கு எதிராக அழுத்தம் கொடுக்கலாம் - என்றார் பாகு.

# இனவாதக் குழுக்களுக்கு அரசு ஆதரவளிக்கிறதா?

## ஐ.தே.க. கேள்வி

கொழும்பு, மார்ச்4

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ராஜதானியான வீரகெட்டியவில் முஸ்லிம்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த அரசு இடமளித்துள்ளது. அவ்வாறெனில், நாட்டில் இன, மத பேதத்தை ஏற்படுத்தும் இனவாதக் குழுக்களுக்கு அரசு ஆதரவளிக்கிறதா என்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியது.

ஐ.தே.கவின் தொழிற்சங்கப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க் கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டில் அரசு மேற்கொள்ளும் அடக்குமுறைகள், அரசுக்கு எதிராக உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் வரும் எதிர்ப்புகள், பொருளாதார வீழ்ச்சி, ஜெனிவாக் கூட்டத் தொடரில் அரசுக்கு எதிரான சவால்கள் என்பவற்றால் அரசு பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

இந்நிலையில், ஹலால் பிரச்சினையை ஏற்படுத்தி சிங்கள, முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தவும் அரசு முயற்சிக்கிறது. ஹலால் தொடர்பில் பொது பலசேனா அமைப்பால் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டு நாட்டில் தற்போது சர்ச்சைக்குரிய நிலை தோற்றம் பெற்றுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகள் நாட்டில் அதிகரித்து வருகின்றன. இவ்வாறான நிலையிலும் அரசிலுள்ள முஸ்லிம் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைதியாக இருக்கின்றனர்.- என்றார்.

இலங்கைப் போர்க்குற்றங்கள்

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி இந்தியாவில் கைபேசி வழி பிரசாரம்

## சர்வதேச மன்னிப்புச் சபை முன்னெடுப்பு

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை இந்தியாவில் கைபேசி வழியாக பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது.

092121-98181 என்ற எண்ணுக்கு இலங்கை மனித உரிமை மீறல்கள் மீது சர்வதேச விசாரணை தேவை என்றால், ஆம் என்றும், தேவையில்லை என்றால் இல்லை என்றும் குறிப்பிட்டு எஸ்.எம்.எஸ். அனுப்ப வேண்டும். எஸ்.எம்.எஸ் மூலம் கருத்தைத் தெரிவிப்போருக்கு வாக்கெடுப்பு குறித்த விவரங்கள் அடங் கிய குறுந்தகவலை சர்வதேச மன்னிப்பு சபை அனுப்பிவைக்க உள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் தொடர்பாக இணையம் வழியாகவும் கருத்தைப் பதிவு செய்யலாம். இதற்காக http:-act.amnesty.org.indemandjusticeinsrilanka என்ற இணைய முகவரியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

சர்வதேச மன்னிப்புச் சபையுடன் சேர்ந்து இலங்கையில் நீதி கிடைப்பதை உறுதிப்படுத்த சர்வதேச விசாரணைக்கு பிரதமரை வலியுறுத்துங்கள். இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதைத் தடுக்க ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் கண் காணிக்க பிரதமர் குரல் கொடுக்க வேண்டும். அதற்கு மன்னிப்புச் சபையின் இந்த இயக்கத்தில் சேர 086880-01010 என்ற கைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை குறித்த எண்ணில் தொடர்பு கொண்டு தங்கள் கருத்தைப் பதிவு செய்தால், பிரதமருக்கு அனுப்பப்படவுள்ள மனுவில் அவர்கள் கையெழுத்திடப்பட்டதாகக் கருதப்படும் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# ஆசிரியர் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் மாணவர்கள்

## ஜெயபுரம் ம.வி.பெற்றோர் கவலை

*அக்கராயன்,மார்ச் 4*

*கிளிநொச்சி ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என்று பெற்றோர் தெரிவிக்கின்றனர்.*

480 மாணவர்கள் தற்போது இந்தப் பாடசாலையில் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு 30 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்க வேண்டிய நிலையில் 18 ஆசிரியர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். குறிப்பாக வரலாறு, தமிழ், புவியியல், சித்திரம், விவசாயம், நடனம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரிக் கல்விக் கோட்டத்தில் உள்ள பிரதான பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும்.

இந்தப் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக வலயக் கல்விப் பணிமனையில் மனுக்கள் கையளிக்கப்பட்ட போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து ஆசிரியர் பற்றாக்குறை நிலவுமானால் தமது பிள்ளைகளை வேறொரு பாடசாலையில் இணைப்பதைத் தவிர வேறு வழியில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-18)

# போக்குவரத்து நெருக்கடிக்குள் ஜெயபுரம் கிராம மக்கள்

அக்கராயன்,மார்ச் 4

கிளிநொச்சி ஜெயபுரம் கிராம மக்கள் தொடர்ந்து போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார்-பூநகரி வீதியில் பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஜெயபுரம் வடக்கு, தெற்குப் பகுதிகளுக்கு மக்கள் நடந்து செல்கின்றனர்.

ஜெயபுரம் மகா வித்தியாலயத்திற்கு வருகை தரும் வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும் போக்குவரத்து வசதியீனம் காரணமாக, நடந்து செல்வதைக் காண முடிகின்றது.

இதேவேளை பல்லவராயன் கட்டுச் சந்தியில் இறங்கும் பயனாளிகள் கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில் ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவலநிலை இங்கு மீள்குடியமர்வு இடம்பெற்ற காலத்தில் இருந்து தொடர்கின்றது.

தனியார் பஸ்கள் நீண்ட நேர இடைவெளியில் பயணிப்பதும் அரச பஸ்களின் சேவை இந்தப் பகுதியில் இல்லாமையும் மக்களின் போக்குவரத்தில் இடர்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

துணுக்காயில் பிரதேச செயலர் பிரிவில்

# மூன்றாவது கட்டத்தில் 300 இந்தியன் வீடுகள்

*அக்கராயன்,மார்ச் 4*

*துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆம் கட்டத்தில் 300 இந்தியன் வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்று துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.*

*அனிஞ்சியன்குளத்தில் 90, யோகபுரம் மத்தியில் 50, கல்விளானில் 60, தேறாங்கண்டலில் 60, கோட்டைகட்டியகுளத்தில் 40 என்ற அடிப்படையில் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.*

*மேலும் முதலாவது கட்டத்தில் வழங்கப்பட்ட 115 வீடுகளில் 25 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்த அவர் இரண்டாவது கட்டத்தில் வழங்கப்பட்ட 436 இந்தியன் வீடுகளில் 5 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*மேலும் யூ.என்.கபிராற் நிறுவனத்தினால் இங்குள்ள எட்டுக் கிராமங்களில் 135 வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.*

*இதேவேளை பாரதி நகரில் 11 வீடுகளும், புகழேந்தி நகரில் 8 வீடுகளும், யோகபுரம் மத்தியில் 15 வீடுகளும், துணுக்காயில் 39 வீடுகளும், உயிலங்குளத்தில் 25 வீடுகளும், அம்பலப்பெருமாள் குளத்தில் 17 வீடுகளும், பழைய முறிகண்டியில் 7 வீடுகளும், புத்துவெட்டுவானில் 9 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் விவரித்தார்.*

*(க-18)*

# சரியான தரவுகள் வழங்கப்பட்டால் உரிய வேளையில் உர விநியோகம்

## கூறுகிறார் கிளி.பெரும்பாக உத்தியோகத்தர்

கிளிநொச்சி,மார்ச் 4

கமக்கார அமைப்புகள் சரியான தரவுகளை உரிய நேரத்தில் வழங்குமேயானால் மானிய உர விநியோகத்தை தாமதமின்றி மேற்கொள்ள முடியுமென கிளிநொச்சி பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். கதிர்காமநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் மானிய உரத்தை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக விவசாயிகள் தெரிவித்தமை தொடர்பாகக் கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒவ்வொரு பயிர்ச் செய்கையின் போதும் கமக்கார அமைப்புகள் சரியான தரவுகளை உள்ளடக்கிய முழுமையான உர விநியோக பட்டியல்களை வழங்குவதில்லை. இதனால் உர விநியோகத்தை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

எனவே எதிர்வரும் சிறுபோகச் செய்கையின் போது விவசாயிகளின் பெயர் விவரப் பட்டியலை தாமதமின்றிச் சமர்ப்பிக்கும் போது மானிய உர விநியோகத்தை தாமதமின்றி வழங்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-6)

# சட்டவிரோத செயற்பாடுகளுக்காக 48 பேருக்கு தண்டம் 466, 500 ரூபா

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

கிளிநொச்சி, மார்ச் 4

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 48 பேர் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டமைக்காக கடந்த மாதம் 4 இலட்சத்து 66 ஆயிரத்து 500 ரூபா தண்டமாகச் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பொறுப்பான மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி றொகான் சஞ்சேராஜ் தலைமையிலான மதுவரி நிலைய உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனைகளின் போது அகப்பட்டவர்களுக்கே நீதிமன்றங்களினால் இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டது.

இவர்களில் கசிப்பு வைத்திருந்த ஐந்து பேரும், அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த ஒருவரும், அனுமதிப்பத்திரமின்றி வீடுகளில் கள் வைத்திருந்த 20 பேரும், 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த 26 வர்த்தகர்களுமாக மொத்தம் 48 பேருக்கு 4 இலட்சத்து 66 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக மதுவரி நிலையத்துக்கு தகவல் வழங்குவதால் குற்றச் செயல்கள் தடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-9)



*புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டு வரும் உடையார்கட்டு பொதுச் சந்தை.* (க-6)

# தரிசு நிலங்களிலும் பயிர்ச் செய்கை

கிளிநொச்சி பிரமந்தனாறு குளத்தின் கீழான தரிசு நிலங்களிலும் பயிர்ச் செய்கை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரமந்தனாறு மேட்டுப் பயிர்ச் செய்கைக்கான கூட்டம் கடந்த 26 ஆம் திகதி கண்டாவளைப் பிரதேச செயலர் தி.முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தரிசு நிலங்களாக உள்ள காணிகள் நீண்டகாலமாக பெரும் இடையூறாகக் காணப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கமநல அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழும் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வு எழுச்சித் திட்ட சட்டங்களுக்கு அமைவாகவும் பிரமந்தனாறு மேட்டு பயிர்ச் செய்கைப் பரப்பில் உள்ள தரிசு நிலங்களை பயிர்ச் செய்கைக்கு வழங்குவதென முடிவு எடுக்கப்பட்டது.

சுமார் 450 ஏக்கர் நிலப் பரப்பில் மேட்டுப் பயிர்ச் செய்கை இடம்பெறவுள்ளது. இதில் மரக்கறி, பழவகைகள் தானிய வகைகள் என்பன பயிரிடப்படவுள்ளன.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி அரச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சு.செல்வராஜா, கிளிநொச்சி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சி.விகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# பளைப் பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் புனரமைப்பு

பளை,மார்ச் 4

பளைப் பிரதேச சபையினர் இங்கு அமைந்துள்ள சனசமூக நிலையங்களைப் புனரமைப்பதுடன் புதிய இலக்கங்களை வழங்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இங்குள்ள மீள் குடியமர்ந்த கிராமங்களில் இயங்கும் சனசமூக நிலையங்கள் ஊடாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கு ஏதுவாக அவற்றின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், புதிய நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். மேலும் கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையூடாகப் பெறப்பட்ட புதிய இலக்கங்களும் வழங்கப்படுகின்றன.

பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் வெ.சுப்பிரமணியம் சனசமூக நிலையங்களின் புனரமைப்புப் பணிகளை அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை தற்போது இயங்கி வருகின்ற சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கென மண்வெட்டி, குப்பைவாளி, மூன்று சில்லு தள்ளுவண்டி போன்றன தலா இரண்டு வீதம் வழங்கப்பட்டு வருகின்றன.

**கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையூடாகப் பெறப்பட்ட புதிய இலக்கங்களும் வழங்கப்படுகின்றன.**

இடப்பெயர்வுக்கு முன்னர் 23 சனசமூக நிலையங்கள் இங்கு இயங்கி வந்தன. தற்போது மீள் குடியமர்வு இடம்பெற்ற அந்தப் பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களை மீளச் செயற்பட வைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# தொழில்தர அனுமதியின் பின்னரே இனி தொழில்நுட்பப் பயிற்சிகள்

## கிளி. அரச அதிபர் தெரிவிப்பு

அக்கராயன்,மார்ச் 4

தொழில் நுட்பப் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் தேசிய தொழில் தர அனுமதியைக் கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற தொழிற் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களுடனான மீளாய்வுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் மீது பொருத்தமான கண்காணிப்பை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழில் பயிற்சிகளை வழங்கும்போது மரபு ரீதியான பயிற்சிகளை மட்டும் வழங்காது புதிய தொழில் நுட்பம் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் மிகுந்த பயிற்சிகளையும் வழங்க வேண்டும். தொழில் பயிற்சிகள் அனைத்தும் தொழில் வாழ்க்கைத்திறன் அபிவிருத்தி அமைச்சின் அனுமதியுடனான தேசிய சான்றிதழ்களைக் கொண்ட பயிற்சிகளாக அமைய வேண்டும்.

இடை விலகிய மாணவர்களும் பல்கலைக்கழக மட்டத்திலான தொழில் பயிற்சிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் தற்போது உண்டு.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜேர்மன் அரசு அமைத்து வரும் தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ளூர் மாணவர்களை இணைக்கும் போது தேசிய தொழில் சான்றிதழ் வழங்கப்படுவது முதன்மையானது எனவும் அவர் மேலும் கூறினார். (க-18)

# தமிழர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு தனிநாடே

## தமிழர் உரிமை மாநாட்டில் ம.தி.மு.க. வலியுறுத்து

சென்னை, மார்ச் 4

ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு தனிநாடு காண்பதுதான். சுதந்திரமான தனிநாடு அடைய வேண்டும் என்பதற்காகத்தான் இலட்சக்கணக்கான தமிழர்கள் இரத்தம் சிந்தி தங்கள் இன்னுயிரை இழந்தார்கள். ஜெனிவா பிரகடனத்தின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமை ஒரு தேசத்தின் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ள போது, தமிழர்கள் வடக்கு, கிழக்கு பகுதிகள் அடங்கிய தங்கள் சுதந்திர நாட்டை அடைய விரும்புவது, கேட்பது நியாயம் தானே.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி.

சுவிட்ஸர்லாந்து மக்கள் பேரவையும் கனேடிய மக்கள் பேரவையும் இணைந்து ஜெனிவாவில் மார்ச் 2 ஆம் திகதி தமிழர் உரிமைகளுக்கான மாநாட்டை நடத்தியது. அம் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே கணேசமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு -

இலங்கையில் தமிழர்கள் தனி தேசத்திற்குச் சொந்தக்காரர்கள். அந்த தேசம் சிங்கள தேசத்திலிருந்து வேறுபட்டது என்றும், சுதந்திரமான, மதச் சார்பற்ற சமத்துவச் சமுதாயமாக சுதந்திரத் தமிழ் ஈழம் மலர வேண்டும் என்ற அந்தத் தீர்மானம்தான் தமிழ் ஈழத்தின் 'மாக்ன கர்ட்டாவாக' கருதப்படுகின்றது. 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை பொதுத் தேர்தல் தமிழ் மக்கள் மத்தியில் நடந்த பொது வாக்கெடுப்பாகும்.

அந்தத் தேர்தலில் சுதந்திரத் தனித் தமிழ் ஈழம்தான் தீர்வு என்று மக்கள் தீர்ப்பு அளித்தார்கள். எல்லா வகையிலும் பலம் பொருந்திய நிலையில் இருந்த தமிழர்களின் பிரதிநிதியாக இருந்த விடுதலைப் புலிகள் தாமாகவே முன்வந்து 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் திகதி 30 நாள்களுக்குப் போர்நிறுத்த அறிவிப்பை வெளியிட்டார்கள். அந்த தன்னிச்சையான போர்நிறுத்த அறிவிப்பு மேலும் 30 நாள்களுக்கு 2002 ஆம் வருடம் ஜனவரி 24 ஆம் திகதியிலிருந்து மேலும் நீட்டித்தார்கள்.

போர் நிறுத்த அறிவிப்புக்குப் பிறகும் வேண்டுமென்றே இலங்கை அரசு அந்த ஒப்பந்தத்தைக் காற்றில் பறக்கவிட்டு, ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தையும் பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற கொடிய எண்ணத்தோடு செயற்பட்டது. 3 இலட்சத்து 30 ஆயிரம் தமிழர்கள் தாக்குதல் இல்லாப் பகுதிகள் என்ற அடைப்புகளில் அடைக்கப்பட்டார்கள். அவ்வாறு அடைக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படவில்லை. தமிழர்களும், இளைஞர்களும் சொல்லொணாக் கொடுமைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

தமிழ்ப் பெண்களோ இளம் நங்கைகள், பெண்கள் எனப் பிரிக்கப்பட்டு, அவர்களது குடும்பத்தையும் பிரித்து சித்திரவதைக்கு உள்ளாக்கி, கற்பழித்து படுகொலை செய்தார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் மூவர் குழு தனது அறிக்கையில், மனித உரிமைப் பேரவை தனது சிறப்பு அமர்வில் மே 2009 இல் இயற்றிய சிறப்புத் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியது. ஆனால், அது நிறைவேற்றப்படவில்லை.

இலங்கை இராணுவம் இதயத்தைப் பிளக்கக் கூடிய ஈவு இரக்கமற்ற கொடூர வன்முறையின் மூலமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரனைச் சுட்டுக் கொன்றுள்ளது. சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோ காட்சி அந்தச் சம்பவத்தை உறுதிப்படுத்துகிறது. பாலச்சந்திரனின் கண் முன்பாக ஐந்து தமிழ் இளைஞர்கள் - விடுதலைப்புலிகள் தங்கள் கைகள் கட்டப்பட்டு, ஆடைகள் அவிழ்க்கப்பட்டு, அவர்கள் தலைமையில் அருகில் இருந்து குறிபார்த்துச் சுட்டுக் கொன்று அவர்கள் உடல்களை மைதானத்தில் வீசியது.

சனல் - 4 தொலைக்காட்சி, சிறுவன் பாலச்சந்திரன் 2 அல்லது 3 அடி தூரத்தில் இருந்து சுடப்பட்டுள்ளான். ஐந்து துப்பாக்கி ரவைகள் அவரது நெஞ்சில் பதிந்து உள்ளன என்று குறிப்பிட்டுள்ளது.

### மனித உரிமை கண்காணிப்பகத்தின் அறிக்கை

மனித உரிமை கண்காணிப்பகம் தனது அறிக்கையில், நடுங்க வைக்கின்ற பாலியல் வன்முறை, கற்பழிப்புச் செயல்களை மனம் பதறச் செய்யும் வகையில் விவரிக்கின்றது. இலங்கை இராணுவம், விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றவர்களையும் கற்பழிப்பு மற்றும் பிற பாலியல் வன்முறை நடவடிக்கைகளை ஆயுதமாகப் பயன்படுத்தி கொடுந் துயரத்திற்கு உள்ளாக்குகின்றது.

இலங்கையில் நடைபெற்ற பல்வேறு அடையாள அழிப்பு சம்பவங்கள் பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், மத வழிபாட்டு அடையாளங்களை அழித்தல், கலாசாரத் தாக்குதல் போன்றவைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்த மாநாட்டின் வாயிலாக மனித உரிமைப் பேரவையை கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்ற வலியுறுத்த வேண்டும்.

தன்னிச்சையான பன்னாட்டு விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட்டு, அதன் வாயிலாக இலங்கை அரசு தமிழர்களின் மீது நடத்திய இனப்படுகொலையை தீர விசாரிக்க வேண்டும். மனித உரிமை ஆர்வலர்களும், மனித உரிமையைப் போற்றுகின்ற சுதந்திரத்தை நேசிக்கின்ற ஜனநாயக நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபை விரைந்து இலங்கை ஜனாதிபதி மீது பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டும்.

கிழக்கு தைமூர் விடுதலை பெறுவதற்கு, தனிநாடாக உருவாவதற்கு பொது வாக்கெடுப்பு நடத்தப்படுமேயானால், தெற்கு சூடான் சுதந்திர நாடாவதற்கு பொது வாக்கெடுப்பு நடத்தும்போது ஏன் தமிழ் ஈழம் சுதந்திர நாடாவதற்கு பொதுவாக்கெடுப்பு நடத்தக்கூடாது?

1976 இல் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் பன்னாட்டு பார்வையாளரின் கண்காணிப்பில் பொது வாக்கெடுப்பு நடத்தி இலங்கையில் தமிழர்களுக்கு தனிநாடு உருவாவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க உங்கள் அனைவரையும் வேண்டுகிறேன்.

மனித உரிமைப் பேரவை தனது 22 ஆவது அமர்வில் கீழ்காணும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்:

1. தமிழர்களின் பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும்.
2. இலங்கையில் நடைபெறும் சித்திரவதை, அக்கிரமமான கொடூர தாக்குதல்கள், கற்பழிப்பு மற்றும் கொலைகளை உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. அரசின் முகாம்களில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாகும் தமிழர்களை உடனடியாக அவர்களுடைய வாழ்விடங்களை சீரமைத்து அங்கு குடியமர்த்த வேண்டும்.
4. பாதிக்கப்பட்ட தமிழர் வாழும் பகுதிகளுக்கு பன்னாட்டு சேவை அமைப்புகள், செஞ்சிலுவை அமைப்பு போன்றவைகள் சென்று அமைதியும், ஆறுதலும் தருவதற்கு வழி வகுக்க வேண்டும்.
5. தமிழர்களின் தொன்மையான பகுதிகளில் சிங்கள காலனித்துவ ஆதிக்கத்தை உடனடியாகத் தடுத்து, அப்படி தமிழர் வாழ்ந்த பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்களை அப்புறப்படுத்த வேண்டும்.
6. முகாம்களில் சிறைக்காவலில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்.
7. தமிழர்களின் இனப்படுகொலைக்குக் காரணமான இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் உடந்தையாக செயற்பட்ட அனைவரும் ஐக்கிய நாடுகள் சபை நிர்மாணிக்கின்ற போர்க்குற்ற தீர்ப்பாயத்தின் முன் பாக விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.
8. ஈழத்தமிழர்களுக்கென இலங்கையில் தனிநாடு உருவாவதற்கு பன்னாட்டு பார்வையாளர்களின் மேற்பார்வையில் புலம்பெயர்ந்த தமிழர்களும் பங்கேற்கின்ற வகையில் பொது வாக்கெடுப்பு நடைபெற வேண்டும்.

- இப்படி தனது உரையில் வலியுறுத்தினார் கணேசமூர்த்தி. (சி)

## சைக்கிள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தெரிவித்தனர். விளையாட்டு மைதானத்தில் அலங்கார வேலைப்பாடுகளுக்காக வைக்கப்பட்டிருந்த இரும்புக்குழாய் ஒன்று சிறுமியின் மீது விழுந்தமையால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். (சி)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்படியும் அதற்கான ஆலோசனைகள் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளும்படியும், 2012 மார்ச் தீர்மானம் இலங்கை அரசை வலியுறுத்தியிருந்தது.

அதனை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை என்று அமெரிக்காவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளையும் (நவநீதம்பிள்ளை) இந்தக் கூட்டத் தொடரின் போது காட்டமாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் அமெரிக்காவின் புதிய பிரேரணை இன்று தாக்கல் செய்யப்பட உள்ளது. கடந்த ஆண்டுத் தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதற்கான சர்வதேசக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என இந்தப் பிரேரணையில் வலியுறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதாவது சர்வதேச கண்காணிப்புக்குழு ஒன்றின் கீழ் மனித உரிமைகள் மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு விசாரிக்க வேண்டும் என்று பிரேரணை கோரும் என ஜெனிவாத் தகவல்கள் கூறுகின்றன.

மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவு மிகக் குறைவு என்பதனால் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படாமலேயே நிறைவேற்றப்படும் என்று தெரிகின்றது. இலங்கையும் அத்தகைய நிலையை ஏற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-10)

## ஊர்காவற்றுறை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது என்றும், ஏவப்பட்ட குண்டு பனை மரத்தில் வீழ்ந்து வெடித்துள்ளது என்றும் கடற்படைப்பேச்சாளர் தெரிவித்தார்.

இதன்போது காயமடைந்த படையினரின் ஐவரின் விவரங்கள் வருமாறு:-

ஏ.எச்.எஸ்.எம். திலகரட்ண (வயது - 27), எஸ்.எம்.வன்னிநாயக்க (வயது -24), எஸ்.எஸ்.பனவெல (வயது -26), ஏ.எம்.சி.பி.அபயவர்த்தன (வயது -23), ஏ.எம்.என். எஸ். குமார (வயது -25).

காயமடைந்த படையினரின் ஐவர் சிகிச்சையின் பின்னர் திரும்பி விட்டதாகவும் ஒருவர் மாத்திரமே யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் நேற்றிரவு கிடைத்த தகவல் தெரிவித்தது. (ந-78)

## ஓட்டோ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
னர். காயமடைந்தவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ந)

## பிரேரணையை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஆதரிக்க வேண்டும் என்று திமுக தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினின் மணி விழா மலர் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது. மணிவிழா மலரை வெளியிட்டுப் பேசிய கருணாநிதி,

''இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக மத்திய அரசிடம் தொடர்ந்தும் வலியுறுத்துவோம் என்றார். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக இந்தியா தனியே பிரேரணை கொண்டு வரத் தேவையில்லை. அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும். இது தொடர்பான இந்தியாவின் முடிவை எதிர்பார்க்கிறோம்.எங்களது உணர்வுகளை மத்திய அரசு புரிந்து கொண்டு செயல்படும் என நம்புகிறோம்'' என்றார் அவர். (உ-10)

## இலங்கைப் போர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வின் மேற்பார்வையில் ஈழத் தமிழரின் விருப்புகளை அறிய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.''

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் உள்ளடங்கலாக பல கோரிக்கைகளை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனிடம் அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை மனு ஒன்றை கையளித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜெனிவா அனைத்துலக மாநாட்டு மண்டபத்தில் மனித உரிமை மீறல்கள் பற்றி ஐ.நா. சபையின் செயலாளர் பான் கீ மூன் பல்லின மக்கள் முன் உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் புலம்பெயர் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், கனடா நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கையில் நடந்த இன அழிப்பிற்கு சர்வதேச சுயாதீன விசாரணையை ஐ.நாவும் சர்வதேச சமூகமும் விரைவுபடுத்தி பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு தீர்வு வழங்க காலம் தாழ்த்தாது விரைந்து செயற்பட வேண்டும் என வலியுறுத்தி அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை சார்பாக ஐ.நா. செயலாளரின் முன்பாக அவரது பேச்சாளர் மார்டின் நெர்ஸ்கியிடம் மனு கையளிக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கைத்தீவில் இடம்பெற்ற இன அழிப்புக் குறித்து விளக்கமளிக்கும் வகையில் அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட உலகத்தமிழர் உரிமை மாநாடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஜெனிவா நகரில் ஆரம்பமாகியுள்ளது.

ஏற்கனவே ஐ.நா மனித உரிமைகள் சபையின் 22ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பாமாகியுள்ள நிலையில், இலங்கை அரசு மீதான சர்வதேசத்தின் அழுத்தத்தை மேலும் அதிகரிக்கும் முகமாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (சி)

## வெலிஓயா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
காளர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். தற்போது இந்தப் பிரதேச செயலர் பிரிவுடன் ஐந்து தமிழ்க் கிராமங்களை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவினுள் அடங்கும் கிராமங்களை வெலிஓயாவுடன் இணைப்பதில் பிரதேச செயலர் மும்முரமாகப் பணியாற்றி வருகிறார்.

அரசின் இந்த முயற்சி இனவாத நோக்கம் கொண்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குற்றஞ்சாட்டியுள்ளார். ''முல்லைத்தீவு மாவட்டம் தனித்தமிழ் மாவட்டமாக இருக்கக் கூடாது என்பதற்காகவே திட்டமிட்டு வெலிஓயாப் பிரதேச செயலகத்தை அரசு உருவாக்கியுள்ளது'' என்று அவர் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 6 கிராம சேவகர் பிரிவுகளில் தற்போது சிங்கள மக்கள் சிறிய அளவில் குடியேறியுள்ளனர். கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் கிழக்கு, கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டாங்கேணி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலேயே சிங்கள மக்கள் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ளனர். மீன்பிடித் தொழிலின் நிமித்தமாக அவர்கள் இங்கு தங்கியுள்ளனர்.

இந்தக் கிராமங்களை வெலிஓயாப் பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன என்று நம்பகமான வட்டாரங்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையோரம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கிய இலங்கை அரசு இப்போது அவர்களை முல்லைத்தீவு நகர் நோக்கி நகர்த்தி அங்குள்ள இனப்பரம்பல் விகிதாசாரத்தை மாற்ற முயல்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குற்றஞ்சாட்டுகிறார். (உ-5)

உதயன்
நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஓட உறுமீன் வரும்வரை வாடி இருக்குமாம் கொக்கு....

இலங்கை அரங்கத்தை, அனைத்துலக மனித உரிமைகள் அமைப்புகள் விட்டு வைப்பதாக இல்லை. வன்னிப் பிரதேசத்தில் நடந்த இறுதிப் போரின் போது, அரச தரப்பு, அதன் ஆயுதப்படைகள் நிகழ்த்தியதாகக் கருதப்படும் போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்று பெரும் குரல் எழுப்புகின்றன.

அது குறித்தான இறுதி முடிவு எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில், அனைத்துலக நாடுகளை மேலும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பன்னிரண்டு வயதான சிறுவன் பாலச்சந்திரனின் கொலை விவகாரம்.

பிரிட்டனின் "சனல்-4" தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்ட பாலகனின் கொலை தொடர்பான காணொளி, இலங்கை அரசு மேற்கொண்ட பெரிய போர்க்குற்ற ஆதாரம் என்று மேற்குலகம் தெரிவித்துள்ளது; கருதுகிறது.

அதன்பால் உண்டாகக் கூடிய விளைவுகள் இலங்கை அரசுக்குப் பெரும் பாதிப்பை உண்டாக்கும் என்று உணர்ந்து கொண்ட அதன் தலைமைத்துவம், பாலகன் பாலச்சந்திரனை, இராணுவம் கொல்லவில்லை என்று மறுத்துள்ளது.

பாலச்சந்திரனின் கொலை நடந்திருப்பின் எனக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்; யாராவது அதனைச் செய்திருப்பின் நானே அதற்குப் பொறுப்பேற்றாக வேண்டும். ஆனால் நாங்கள் அதனை முற்றாக மறுக்கிறோம். அவ்வாறு நிகழ்ந்திருக்கவே முடியாது - என்று சென்னையில் இருந்து வெளிவரும் "இந்து" பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி அறுத்து, உறுத்துக் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் இப்போது ஜெனிவாவில் நடந்துகொண்டிருக்கும் சூழ்நிலையில், இலங்கை அரச தலைவரின்-ஜனாதிபதியின்-இந்தக் கருத்து வெளிப்பட்டுள்ளதால், அந்தக் கூட்டத் தொடரில் பேசப்படும் விடயங்களின் போதும் இது கவனத்துக்குள் எடுக்கப்படுமென எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் இறுதிப்போர் நடைபெற்ற காலப் பகுதியில், கணிசமான அளவில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருப்பதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும் தொடர்ச்சியாகவே குற்றஞ்சாட்டி வருகின்றன.

அண்மையில் பாலச்சந்திரனின் இறுதிக் கணங்களைப் படம்போட்டுக்காட்டிய சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம், அந்தப் படங்கள் உண்மையானவையே என அடித்துக்கூறி போர்க்குற்றச்சாட்டுக்கான மற்றுமொரு ஆதாரமாக அவற்றைக் காட்டியிருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிகழ்வுகளின் உண்மைத் தன்மைகளைக் கண்டறிய சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று அவசியம்; எந்த வகையிலும் தவிர்க்க முடியாதது எனப் பல்வேறு மட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அதுதொடர்பில், ஐ.நா. கண்காணிப்பின் விசேட விசாரணையாளர்களை இலங்கை வர அனுமதிப்பதா இல்லையா என்பது தொடர்பில் இலங்கை அரசு தடுமாற்றத்தில் இருக்கிறது.

அரசின் பங்காளிக் கட்சிகளில் உள்ள சிங்கள அடிப்படைவாதிகளான அரசியல் தலைவர்கள், சர்வதேச விசாரணையாளர்களோ, விசாரணைக்குழுவோ இலங்கைக்குள் அனுமதிக்கப்படக்கூடாது என்றே குரல் கொடுத்து வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் ஜனாதிபதி மஹிந்த, பாலச்சந்திரன் விவகாரம் தொடர்பில் தெரிவித்திருக்கும் கருத்துகள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

பாலச்சந்திரனின் கொலைக்குப் படையினர் எந்தவித பொறுப்பும் இல்லையென்று ஜனாதிபதி கூறியிருப்பதும், பாலச்சந்திரனின் உயிரற்ற உடல்தான் படையினரிடம் கிடைத்ததாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குக் கூறியிருப்பதும் புதிதாகச் சுமத்தப்பட்டிருக்கும் போர்க் குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிக்கின்றன.

அவ்வாறாயின், இலங்கைப் படையினரோ அல்லது அதிகாரிகள் மட்டத்திலோ எவருமே போர்க்குற்றத்தில் ஈடுபடவில்லையென இலங்கை அரசு ஆணித்தரமாகக் கூறுமாயின், அனைத்துலக விசாரணையாளர்கள் இங்கு வரத் தாராள அனுமதியை, அது இனி வழங்கலாமே. இலங்கையர் எவருமே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்று அடித்துக் கூறுவதால், நடுநிலை ஐ.நா. விசாரணையாளர்களுக்கு இலங்கை அரசு அனுமதி அளித்தாக வேண்டிய சூழ்நிலை இப்போது உருவாகி இருக்கிறது.

மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயம் இருக்கும். மடியில் கனம் இல்லையென்று கூறும் இலங்கை அரசு வழியில் பயப்படாமல் செல்லவேண்டும்.

போர்க் காலத்தில், அதில் ஈடுபடும் தரப்புகள், அனைத்துலக மட்டத்தில் போர்க் குற்றங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள செயல்களில் தான்தோன்றித்தனமாக ஈடுபடக்கூடாது. உடனடியாக இல்லாவிடினும், தாமதமாக ஏதோ ஒரு காலத்தில் உண்மை வெளிப்பட்டே ஆகும். என்பதனையும் மறந்துவிடலாகாது.

தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; மறுபடியும் தர்மமே வெல்லும் என்று மகாபாரதக் கண்ணன் கூறியதை அரசோச்சுபவர்கள் மறந்து விடலாகாது.

ஓடுமீன் ஓட உறுமீன் வரும் வரையும் வாடி இருக்கும் கொக்குப் போன்றது தர்மம்.

மனதில், செயலில் உண்மையும் நேர்மையும் ஒன்றிணைந்தால் அச்சம் கொள்வதற்கு ஏதும் இருக்காது. பாலகன் பாலச்சந்திரன் விடயத்தில் அரசு இதனை உணர்ந்து கால்பதிக்குமா?

# புலிகளின் தகவலைப் பெற படையினர் பாவித்த ஆயுதம் பாலியல் வன்முறை

### இலங்கை அரசு இதை மறுப்பது அவநம்பிக்கை தருகிறது என்கிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

யாழ்ப்பாணம், மார்ச்.4

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு படையினர் பாலியல் வன்முறையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளனர் என்று ஆதாரங்களுடன் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்ட அறிக்கையை, இலங்கை அரசு எடுத்த எடுப்பிலேயே நிராகரித்துள்ளது. இது எமக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி தெரிவித்துள்ளார்.

கொழும்பைத் தளமாகக் கொண்ட ஆங்கில இணையத் தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படையினர், தமிழீழ விடுதலைப் புலிகள் என்று சந்தேகிப்பவர்களிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பாலியல் வன்முறையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தினர். இது தொடர்பில் 75 பேரிடம் பதிவு செய்யப்பட்ட சாட்சிகள் அடங்கிய அறிக்கை மனித உரிமை கண்காணிப் பகத்தால் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை பொய்யானது என்று இலங்கை அரசு எடுத்த எடுப்பிலேயே வழமை போன்று மறுதலித்திருந்தது.

அரசின் இந்தப் பதில் எமக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நாம் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் இலங்கை அரசு தனது படைகளுக்கு ஓர் உறுதியான செய்தியைச் சொல்லுமென்று நம்பியிருந்தோம் என்று மேலும் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் காரியவசம், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் வெளியிடப்பட்டவை சோடிக்கப்பட்ட கதைகள் என்றும் இவை வெளிநாடுகளில் தஞ்சம் கோருவதற்காகவே உருவாக்கப்பட்டவை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையிலுள்ள மருத்துவ அறிக்கை எல்லாவற்றையும் தெளிவு படுத்துகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றிருப்பின் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு சொல்கின்றனர். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே பொலிஸார் இருக்கின்றனர்.

எனவே அவர்கள் இராணுவத்துக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளமாட்டார்கள்.

ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய, 75 பேர் தொடர்பான விவரங்களைக் கோரியிருந்தபோதும், அவர்களின் உறவினர்கள் இன்னமும் இலங்கையில் இருப்பதால் அந்த விவரங்களை மனித உரிமைகள் கண்காணிப்பகம் வழங்கவில்லை.- என்று மேலும் தெரிவித்தார். (ம-5)

## கரவெட்டி இராஜ கிராம மக்களின் பிரச்சினைகளுக்குத் தனியாகத் தீர்வு

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வடமராட்சி, மார்ச் 4

கரவெட்டி, இராஜ கிராம மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு தனியான கூட்டம் ஒன்று கூட்டப்படும் என்று கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கிராம மக்களின் முக்கிய பிரச்சினைகளான மழை காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு, துன்னாலை வேருண்டை மயானத்தில் கொல்களம் அமைக்கப்பட்டமை என்பன உள்ளன.

இவை உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும் என பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தெரிவித்தார்.

துன்னாலை வேருண்டை மயானத்தில் கொல்களம் அமைக்கப்பட்டதை இராஜ கிராமத்தின் பொது அமைப்புப் பிரதிநிதிகள் கண்டித்தனர். அத்துடன் அதனை அகற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு, உறுப்பினர் கே.பரஞ்சோதி ஆகியோர் நீண்ட விளக்கத்தைக் கொடுத்தும் அதனை அந்தப் பிரதிநிதிகள் ஏற்க மறுத்துள்ளனர். தமது கோரிக்கையை நிறைவேற்றுமாறே அவர்கள் கேட்டிருந்தனர்.

இந்த நிலையில் கொள்களம் அமைக்கப்பட்டமை, வெள்ளப் பெருக்கால் ஏற்படும் அவல நிலைமைகளைச் சீர்செய்தல் என்பன தொடர்பாக தனியான கூட்டம் ஒன்றைக் கூட்டி ஆராய்ந்து தீர்மானம் எடுக்கலாம் என பிரதேச செயலர் ஆலோசனை தெரிவித்தார். (ம-8)

## வடமராட்சியில் அறுவடை மும்முரம்

வடமராட்சி, மார்ச் 4

வடமராட்சிப் பிரதேசத்தில் வயல்களில் தேங்கியுள்ள நீருக்கு மத்தியில் நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை வயல்களுக்கு அருகில் உள்ள வரம்புகள், வீதிகளில் காயவைத்துவிட்டு அவற்றை வாகனத்தில் ஏற்றிச் சென்று வீடுகள், வளவுகளில் வைத்து சூடு அடித்து வருகின்றனர். (ம-8)

## நீரிழிவு பரிசோதனை நடத்த ஏற்பாடு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்து மட்டுவில் சரசாலைப் பிரதேச மக்களுக்கு இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாமை நடத்தவுள்ளன.

மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் இதை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பரிசோதனை முகாமில் நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் பரிசோதனை முகாமில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் தி.ஸ்ரீகரன் கலந்து கொண்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

நீரிழிவு தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறும் என்றும் கூறப்பட்டது. (ம-9)

## கற்கடதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா சனி ஆரம்பம்

கற்கடதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி மறுநாள் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலி, இறுதிச் சுற்றுப் பிரகாரத்துடன் நிறைவடையும்.

நெடுந்தீவு பங்குக்கு உட்பட்ட இந்த ஆலய திருவிழாவில் நெடுந்தீவு மக்களுடன் யாழ்ப்பாணம்,மன்னார் பகுதிகளைச் சேர்ந்த மக்களும் கலந்து கொள்வது வழமை. நெடுந்தீவு பங்குத் தந்தை திருவிழாவை நடத்தி வைப்பார்.

திருவிழாவில் கலந்து கொள்வதற்காக 9 ஆம் திகதி சனிக்கிழமை நெடுந்தீவிலிருந்து மக்கள் கற்கட தீவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## முன்னாள் போராளிகளில் அங்கவீனமுற்ற 156 பேரே வீட்டு நிதிக்காக விண்ணப்பம்

### ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இருந்தும் ஆர்வம் காட்டவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச் 4

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளில்,அங்கவீனமுற்ற 156 பேரே இதுவரையில் வீட்டு நிதிக்காக சமூக சேவைகள் அமைச்சுக்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட அங்கவீனமுற்ற முன்னாள் போராளிகள் வடக்கில் உள்ளபோதும் பெரியளவில் எவரும் இந்த நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கவில்லை என்று சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

சமூக சேவைகள் அமைச்சால் மாற்று வலுவுடையவர்களுக்கு வீடமைப்பதற்கு இரண்டரை இலட்சம் ரூபா நன்கொடை வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ஊடாகவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் போரால் பாதிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையான மாற்று வலுவுடையவர்கள் உள்ளனர்.

குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த முன்னாள் போராளிகளில் ஆயிரக் கணக்கானோர் உள்ளனர்.

இருப்பினும் இதுவரையில் 156 முன்னாள் போராளிகளே இந்த இரண்டரை இலட்சம் ரூபா நன்கொடை நிதி பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்தே அதிகளவான விண்ணப்பங்கள் சமூக சேவைகள் அமைச்சுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் சமூக சேவைகள் அமைச்சின் செயலர் மேலும் கூறினார். (ம-5)


## கற்சிலைமடு கிராமத்துக்கு புதிய பதிவாளர்

முல்லைத்தீவு,மார்ச் 4

முல்லைத்தீவு கற்சிலை மடுக் கிராமத்தில் புதிய பிறப்பு, இறப்பு பதிவாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் பதிவுதாரராகக் கடமையாற்றிய ப.நவரத்தினம் என்பவர் கடந்த போரின் போது சாவடைந்து விட்டார். இவரது வெற்றிடம் நீண்ட காலமாகவே நிரப்பப்படாமல் இருந்தது. இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது பதிவுகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் திருமதி யோகேஸ்வரி சிறீதரன் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் புதிய பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (க-500)



முல்லைத்தீவு மாவட்டம் இரணைப்பாலை குடியிருப்பு பிரதான வீதியில் பாலம் அமைக்கப்படாததால் தேங்கியுள்ள வெள்ளத்தினூடாகச் செல்வதில் சிரமப்படும் சிறுவன் ஒருவன். (க-6)

## உரிய நேரத்தில் ... கிடைக்காததால் பசு இறப்பு

### 5 நாள்கள் சென்றும் ஊசி மருந்தில்லை

முல்லைத்தீவு,மார்ச் 4

உரிய வேளையில் சிகிச்சை வழங்கப்படாமையால் பசு ஒன்று இறந்த சம்பவம் கற்சிலைமடுக் கிராமத்தில் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கற்சிலைமடுக் கிராமத்தில் அண்மையில் பசு ஒன்று இனந்தெரியாத நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. அதன் உரிமையாளர் உடனடியாக ஒட்டுசுட்டான் கால்நடை மருத்துவமனைக்குச் சென்று அறிவித்தார்.

அங்கு இருந்தவர்கள் அடுத்தநாள் காலையில் வருவதாகவும், அந்தப் பசுவுக்கு ஊசி மருந்து ஏற்ற வேண்டும் எனவும் தெரிவித்தனர். அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் கிராமவாசி வீடு திரும்பினார். மறுநாள் எவரும் வரவில்லை. காத்திருந்தார் அவர். ஐந்து நாள்கள் கடந்துவிட்டன.

எவரும் வராத நிலையில், சிகிச்சையின்றி அந்தப் பசு இறந்துவிட்டது.

இதனால் கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்படும் போது என்ன செய்வதென்று தெரியாத நிலையில் அந்தப் பிரதேசத்தின் கால்நடை வளர்ப்பாளர்கள் உள்ளனர். (க-500)

ஒட்டுசுட்டானில் இயங்கும்

# ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு ரூ.3 லட்சத்துக்கு மருந்து

கிளிநொச்சி,மார்ச் 4

ஒட்டுசுட்டான் ஆயுள்வேத மருத்துவமனைக்கென ஒவ்வொரு காலாண்டுக்கும் சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் வழங்கப்படுவதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் ஆயுள்வேத வைத்தியசாலையில் தினமும் 30 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் ஒவ்வொரு காலாண்டுக்கும் 3 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் தேவைப்படுவதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள ஒலுமடு ஆயுள்வேத வைத்தியசாலை இதுவரை இயங்காத நிலையில் காணப்படுகின்றது. இதனால் இந்தப் பிரதேச சபையின் கீழ் உள்ள ஒட்டுசுட்டான் ஆயுள் வேத வைத்தியசாலையை நோயாளர்கள் நாடிச் செல்கின்றனர்.

இதனால் இந்த வைத்திய சாலையில் தினமும் 30 இக்கும் மேற்பட்ட நோயாளர்கள் பல்வேறு வியாதிகளுக்கும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர் எனவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## விசுவமடுவில் மாட்டு வண்டிச் சவாரி

முல்லைத்தீவு, மார்ச் 4

விசுவமடு விவசாயிகளால் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

விசுவமடுப் பிரதேச விவசாயிகள் ஒன்றிணைந்து எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு விசுவமடு சவாரித் திடலில் மாட்டு வண்டி சவாரிப்போட்டி ஒன்றை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து பெருமளவான போட்டியாளர்கள் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## அரைகுறையான நிலையில் பிரதேச செயலக கட்டம்

### பூநகரி மக்கள் தொடர்ந்து அவலத்தில்

பூநகரி,மார்ச் 4

பூநகரிப் பிரதேச செயலகக் கட்டட வேலைகள் அரைகுறையான நிலையில் காணப்படுவதால் இந்தப் பகுதி மக்களின் அவல நிலை நீடிப்பதாகத் தெரிய வருகின்றது.

சுமார் 45 மில்லியன் ரூபா மதிப்பீட்டிலான இந்தக் கட்டட வேலைகள் ஒரு வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அதன் பணிகளில் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை.

பரந்த பூநகரிப் பிரதேசத்தில் சுமார் 6 ஆயிரத்து 350 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களின் நன்மை கருதி வாடியடிச் சந்தியில் பிரதேச செயலகத்துக்கான கட்டடம் அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. ஆனால் இதுவரை பூர்த்தியாகாத நிலையில் அரைகுறையான தோற்றத்துடன் காணப்படுகின்றது.

> சுமார் 45 மில்லியன் ரூபா மதிப்பீட்டிலான இந்தக் கட்டட வேலைகள் ஒரு வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது இங்கு வசிக்கும் மக்கள் வாடியடிச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வீதியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தமது பிரதேச செயலகத்துக்கான சேவைகளைப் பெற்று வருகின்றனர்.

வாடியடிச் சந்தியில் பஸ் தரிப்பிடம் இல்லாததால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## வாழைக்குட்டிகளால் எமக்குப் பயனில்லை

### கண்டாவளை பயனாளிகள் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச் 4

கண்டாவளைப் பகுதியில் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட வாழைக் குட்டிகளால் தமக்கு பயன் கிடைக்காதென இவற்றைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த முரசுமோட்டை விவசாய போதனாசிரியர் பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு விவசாயத் திணைக்களத்தினூடாக ஆயிரம் வாழைக்குட்டிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த வாழைக்குட்டிகள் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் தனியார் வீடொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டு, கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

குறித்த வாழைக்குட்டிகளின் விநியோகத்தின் போது கைகலப்பும் ஏற்பட்டது.

ஆனால் இவ்வாறு வழங்கப்பட்ட வாழைக்குட்டிகள் இதுவரை போதிய வளர்ச்சியின்றிக் காணப்படுவதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர். பழுதடைந்த நிலையில் இந்த வாழைக்குட்டிகள் வழங்கப்பட்டமையே இதற்கான காரணம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## கசிப்பு உற்பத்தியாளருக்கு ரூ. 4½ லட்சம் அபராதம்

### கிளிநொச்சியில் அதிக பட்ச தண்டம்

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் கோடா மற்றும் உபகரணங்களை வைத்திருந்த ஒருவருக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் சுமார் 147 போத்தல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பவற்றை வைத்திருந்த ஒருவரைக் கடந்த 15 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்தனர். பின்னர் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் குறித்த நபர் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்த நபருக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இதனைச் செலுத்தத் தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகளில் ஈடுபட்ட தனிநபர் ஒருவருக்கு மிக அதிகமான தண்டம் விதிக்கப்பட்டமை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (க-6)

## உடைந்து விழும் நிலையில் பூங்காவனச் சந்தி மின்கம்பம்

கிளிநொச்சி,மார்ச் 4

கிளிநொச்சி ஏ-35 வீதியின் பூங்காவனச் சந்தியில் நடப்பட்ட மின்கம்பம் ஒன்று உடைந்த நிலையில் ஆபத்தை விளைவிக்கும் வகையில் காணப்படுவதாக இந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதான மின் விநியோகக் கம்பம் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக முறிந்து விழும் நிலையிலேயே காணப்படுகின்றது.

இந்தக் கம்பத்துக்கு அருகில் இரு வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளன. மேலும் பஸ்களில் பயணிக்கும் பெரும் எண்ணிக்கையானோர் இந்த இடத்தில் தரித்து நிற்பதும் வழக்கமாகும்.

இந்த நிலையில் இந்த மின்கம்பம் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதால் பெரும் ஆபத்து ஏற்படக் கூடிய வாய்ப்பும் உள்ளது. எனவே இந்த மின்கம்பத்தை அகற்றி புதிதாக ஒன்றை நடுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)



# முழங்காவில் பகுதி கடைகளுக்கும் மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி,மார்ச் 4

முழங்காவில் மருத்துவமனைக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ள மின்சாரத்தை இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கும் வழங்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 12 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முழங்காவிலுக்கு வருகை தந்து மருத்துவமனைக்கான மின்சாரத்தை வழங்கியதுடன் புதிய கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

இந்தப் பகுதியில் உள்ள வணிக நிலையங்கள், முழங்காவில் மகா வித்தியாலயம் ஆகியன இதுவரை மின்சார வசதியைப் பெறாத நிலையிலேயே காணப்படுகின்றன.

இதைப் போன்று ஓர் ஆண்டுக்கு முன்னர் அக்கராயன் மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் மருத்துவமனையின் சூழலில் உள்ள கெங்காதரன் குடியிருப்பு, அக்கராயன் மகாவித்தியாலயத்தை அண்மித்த ஸ்கந்தபுரம் உட்பட பல பகுதிகளுக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் முழங்காவில் பகுதி மக்கள் தமக்கும் மின்சாரத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

# ழ்.மத்திய ரயில் நிலையத்தின் கட்டுமானப் பணி துரித கதியில்

## ரயில்வே திணைக்கள அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். மத்திய ரயில் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் அடுத்து வரும் நாள்களில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று ரயில்வே திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை வங்கியின் நிதி உதவியுடன் இந்த ரயில் நிலைய கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நிர்மாணப் பணிகளுக்கு முன்னோடியாக இந்த ரயில் நிலைய வளாகம் கடந்த வாரத்தில் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

பலாலி வீதியில் ஆரிய குளம் சந்திக்கு அண்மையில் உள்ள ரயில் கடவை பாதை உயர்த்தப்படவுள்ளது.

இந்த ரயில் பாதை உயர்த்தப்பட்ட வீதியில் அகலிப்பு பணிகள் இடம்பெறும்.

அத்துடன் நாவற்குழி கடல் பகுதியை ஊடறுத்துச் செல்லும் ரயில் பாதைக்கு உரிய இரும்பிலான மேம்பாலம் கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த இரும்புப் பாலத்தை கனரக வாகனம் மூலம் இங்கு எடுத்து வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனைவிட ரயில் பாதைக்கான தண்டவாளங்களும் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் மாங்குளம் வரைக்கும் ரயில் சேவையை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், திடீரென தற்போது கிளிநொச்சிவரைக்கும் தொடர்ச்சியாக தண்டவாளங்களை அமைத்துப் பாதையைச் சீர் செய்யுமாறு ரயில்வே திணைக்களத்தை அரசு கேட்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி வரைக்குமான ரயில் பாதைக்காக நிர்மாணப் பணிகள் முழுவீச்சில் இடம்பெறவுள்ளன.

ஜூன் மாதத்துக்கு முன்னர் கிளிநொச்சி வரைக்கும் முதலில் ரயில் சேவையை நடத்த வேண்டும் என்ற நோக்கில் அதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் துரிதப் படுத்தப்படவுள்ளன.

இதற்கான ரயில்வே திணைக்களத்தில் உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அடுத்த வாரத்தில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து பணிகளைப் பார்வையிடவுள்ளது.- என்று அவர் கூறினார். (ம-17)


## எப்போது இயங்கும் இந்தக் கடிகாரம்?

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுர கடிகாரம் தொடர்ந்து இயங்காத நிலையிலேயே காணப்படுகின்றது. பழுதடைந்த நிலையிலுள்ள இந்தக் கடிகாரத்துக்குப் பதிலாகப் புதிய டிஜிற்றல் கடிகாரம் பொருத்தப்படும் என்று யாழ்.மாநகர சபை முதல்வர் ஒரு மாத காலத்துக்கு முன்னரே தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இதுவரை எதுவும் பொருத்தப்படவில்லை. குறித்த மணிக்கூட்டைச் சீர் செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த விடயத்தில் உரிய நடவடிக்கையை யாழ். மாநகர சபை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)



## அச்சுவேலியில் தனியார் பஸ்கள் தரிக்க இடவசதி

யாழ்ப்பாணம், மார்ச் 4

அச்சுவேலியில் தனியார் பஸ்கள் தரித்து நிற்பதற்கான இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வலி.கிழக்குப் பிரதேச சபை விரைவில் மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி மத்திய பஸ் தரிப்பு நிலைய வளாகத்தில் தனியார் பஸ்கள் தரித்து நிற்பதால் அங்கு இட நெருக்கடி ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டது.


இந்த நெருக்கடியைப் போக்கும் வகையில் இதற்காகத் தனியான இடவசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ம-17)

## விபத்தில் காயம்

தென்மராட்சி, மார்ச் 4

ஒழுங்கையில் இருந்து ஏ-9 வீதிக்குள் வந்த சைக்கிளை, வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த கொடிகாமம் வர்த்தகருக்கு காலில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை நுணாவில் கிழக்கு ஏ-9 வீதியில் இடம்பெற்றது. கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் சங்கரப்பிள்ளை (வயது-53) என்பவரும் காலில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)




யாழ்.நகரில் வேம்படிச் சந்தியில் அங்காடி வியாபாரிகளுக்கென அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதிகள். நேற்றுமுன்தினம் இவை வியாபாரிகளிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## ஆறு வருடங்களின் பின்னர் மக்கள் பாவனைக்கு வீதி திறப்பு

தென்மராட்சி, மார்ச்.4

ஆறு வருடங்களின் பின்னர் வடமராட்சி கிழக்கின் ஆழியவளைக்கு மருதங்கேணி சந்தி ஊடாகச் செல்லும் வீதி கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

மருதங்கேணி சந்தியிலிருந்து ஆழியவளை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, கேவில் போன்ற பகுதிகளுக்கு செல்லும் பிரதான வீதியாக காணப்பட்ட இந்த வீதி 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் வேளையில் மூடப்பட்டு பொது மக்கள் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மருதங்கேணி வைத்தியசாலைக்கு அருகில் உள்ள வீதியாலும் கடற்கரை வீதியாலும் பல சிரமங்களுக்கு மத்தியில் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வீதி மூடப்பட்டிருந்த காரணத்தால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்கின்றன என்று பிரதேச பொது அமைப்புகளால் வடமராட்சி கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை பொது மக்களின் பாவனைக்கு படையினரால் இந்த வீதி திறந்து விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## யாழ். ஆஸ்பத்திரி புதிய மாடிக் கட்டடத்தில் அவசர மருத்துவப் பிரிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். போதனா வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்ட புதிய மாடிக் கட்டடத்தில் வைத்தியசாலையின் அவசர மருத்துவப் பிரிவுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கட்டடத்தின் கீழ்த் தளத்தில் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களின் வசதி கருதி எக்ஸ்ரே கதிர்வீச்சு படம் எடுக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதற்கென நான்கு புதிய எக்ஸ்ரே படப்பிடிப்பு இயந்திரங்கள் அங்கு பொருத்தப்பட்டுள்ளன. இதில் ஓர் எக்ஸ்ரே கதிர்வீச்சு இயந்திரம் பல் சம்பந்தமாக எக்ஸ்ரே எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதனை விட இந்தத் தளத்தில் ஈ.சி.ஜீ. மற்றும் மூளைப் பகுதிக்கான ஸ்கானிங் போன்ற பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய கட்டடத்தில் இரண்டாம் மாடியில் ஆய்வு கூடத்தின் பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் முதலாம் மாடித் தொகுதியில் சத்திர சிகிச்சைப் பிரிவும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## மின்சார சேவை நிலையம் வேலணையில் அமையும்

யாழ்ப்பாணம், மார்ச் 4

மின்சார சபையால் வேலணைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டு இருக்கும் மின்சார சேவை நிலைய கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

மின்சார சபையின் நிதி உதவியுடன் இந்த சேவை நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டது.

இந்த நிலையத்தை விரைவாக திறந்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-17)

## நுணாவில் மத்திய பகுதிக்கும் குழாய் மூலம் தண்ணீர் வழங்குக

### அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, மார்ச் 4

சாவகச்சேரி நகர சபை எல்லைக்கு உட்பட்ட நுணாவில் மத்திய பகுதிக்கு தினமும் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குமாறு சாவகச்சேரி நகர சபையிடம் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த நிலையில் அங்குள்ள கிணறுகள் உவர்த் தன்மையாக உள்ளன.

இதனால் நுணாவில் மேற்கில் உள்ள குடிதண்ணீர்க் கிணறுகளுக்குக் கொள்கலன்களுடன் காலை, மாலை வேளைகளில் செல்ல வேண்டியுள்ளது.

ஏ-9 வீதி அகலிப்பின் பின்னர் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் கொள்கலன்களில் குடிதண்ணீர் கொண்டு வருவதில் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது நுணாவில் கிழக்குவரையுள்ள குழாய் மூலமான குடிதண்ணீர் சேவையை நுணாவில் மத்தி வரை நீடித்து தருமாறு மக்கள் கோரியுள்ளனர்.

வருடம் தோறும் மார்ச் மாதம் தொடக்கம் குடி தண்ணீருக்கு அலையும் அவலம் தொடர்கிறது. இந்த நிலையில் கோடை காலத்தில் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## கோப்பாய், இருபாலை வீதிகள் ஊடாக 811 மார்க்க பஸ் சேவையை நடத்துக

### கல்வியியற் கல்லூரி, கலாசாலை சமூகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 4

கோப்பாய், இருபாலையில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி 811 மார்க்க பஸ் சேவையை இவை அமைந்துள்ள வீதிகளூடாக சேவையில் ஈடுபடுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

தினமும் காலை 6.45 மணிக்கு கொடிகாமத்தில் இருந்து புறப்படும் 811 மார்க்க பஸ்ஸில் பயணிக்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் போன்றோர் கோப்பாய் சந்தியில் இறங்கி பின்னர் அங்கிருந்து இருபாலைச் சந்திக்கு வாகனத்தில் சென்று பின்னர் நடந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் வார நாள்களில் காலையில் கொடிகாமத்தில் இருந்து புறப்படும் பஸ்ஸையும் மாலையில் மானிப்பாயில் இருந்து புறப்படும் பஸ்ஸையும் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அமைந்துள்ள வீதிகள் வழியாகச் சேவையில் ஈடுபடுத்துமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபை வட பிராந்தியப் பொது முகாமையாளரைக் கோரியுள்ளனர். (ம-9)



டில்லியில் இந்திய இராணுவத்தின் மூன்றாவது பட்டாலியன் அமைக்கப்பட்டு தன் 200 ஆவது ஆண்டை சிறப்பிக்கும் வகையில் நினைவுத் தபால் தலை வெளியிடப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, இராணுவத் தளபதி விக்ரம் சிங்.

## அல்குவைதாவின் 'ஹிட்' பட்டியலில் சர்ச்சைக்குரிய சல்மான் ருஷ்டியின் பெயரும்

டில்லி, மார்ச்.4

சர்ச்சைக்குரிய எழுத்தாளர், சல்மான் ருஷ்டியின் பெயர், அல்குவைதா அமைப்பின் கொலைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் சல்மான் ருஷ்டி. தற்போது, பிரிட்டனில் வசித்து வருகிறார். பிரபல எழுத்தாளராகிய இவர் எழுதிய, 'சாத்தானின் வேதங்கள்' என்ற நூல், சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதில், இஸ்லாமுக்கு எதிரான விடயங்கள் இடம்பெற்றிருப்பதாகக் கூறி, அவருக்கு எதிராகக் கடும் போராட்டங்கள் நடைபெற்றன.

ஈரான் தலைவர் கொமேனி, சல்மான் ருஷ்டிக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்தார். இந்த நிலையில், அல்குவைதா அமைப்பு சார்பில்,



ஆங்கில இணைய இதழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில், 'இஸ்லாமுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தவர்கள் உயிருடனோ, பிணமாகவோ தேவை' என்ற தலைப்பில், ஒரு பட்டியல் இடம் பெற்றுள்ளது.

அதில், சல்மான் ருஷ்டியின் பெயரும் இடம் பெற்றுள்ளது. அவர் தவிர, அமெரிக்க பாதிரியார், டெர்ரி ஜோன்ஸ் மற்றும் மொல்லி நோரிஸ், பிளெமிங் ரோஸ் உள்ளிட்ட, 11 பேரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (வ)

## காஷ்மீரில் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு

### பொலிஸார் இருவர் சாவு

ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் பொலிஸ்காரர்கள் இருவர் உயிரிழந்தனர்.

வடக்கு காஷ்மீரின், ஹந்த்வாரா சந்தைப் பகுதியில் திடீரென புகுந்த தீவிரவாதிகள் அந்தப்பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலில் பொலிஸார் இருவர் உயிரிழந்தனர். (வ)

## இரும்பாலையில் குண்டுவெடிப்பு

### ஒரிசாவில் 3 பேர் சாவு

ஒரிசா, மார்ச்.4

ஒரிசா மாநிலத்தில் 'போஸ்கோ' இரும்பு உருக்காலைக்கான திட்டப் பணிகள் நடைபெற்று வந்த இடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும் இருவர் பலத்த காயத்துடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தி வரும் நிலையில் வெடித்த குண்டு நாட்டு வெடிகுண்டு என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

போஸ்கோ இரும்பு உருக்காலைத் திட்டத்தை ஆதரிக்கும் குழுவினர் எங்கள் மீது வெடிகுண்டை வீசினர் என்று போஸ்கோ திட்ட எதிர்ப்புக் குழுக்கள் குற்றம் சாட்டுகின்றன. இதுகுறித்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். (வ)

# இலங்கைத் தூதரகத்தை உடனடியாக சென்னையிலிருந்து அகற்ற வேண்டும்

## நாம் தமிழர் கட்சி பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

சென்னை, மார்ச்.4


தமிழகத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சியின் இரண்டாவது பொதுக்குழுக் கூட்டம், சென்னையில் உள்ள கட்சியின் தலைமை மையகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. அந்தக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நடைபெற்ற மேற்படி பொதுக்குழுக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவற்றில் முக்கியமானவை வருமாறு:-

★ ஜெனிவாவில் நடைபெற வுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத்தில், இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போரில் இலங்கை அரசு மேற்கொண்ட படுகொலைகள் பற்றிய உண்மைகளை முழுமையாக விசாரணை மேற்கொள்ள வேண்டும். அந்தக் குற்றங்களுக்கு சூத்திரதாரியாக இருந்து செயற்பட்டவர்களை அடையாளம் கண்டு தண்டிக்க வழி கோலும் தீர்மானத்தை இந்திய அரசின் பிரதிநிதி முன்மொழிய வேண்டும்.

★ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனை ஈவிரக்கமின்றி, மிருகத்தனமாக சுட்டுக்கொன்ற இலங்கை இராணுவம் மனிதாபிமானமற்ற ஒரு நாட்டின் வெறித்தனமான வெளிப்பாடாகும். பாலசந்திரனின் படுகொலை சிங்கள பௌத்த இனவாத வெறித்தனத்தின் அப்பட்டமான அத்தாட்சியாகும். இவ்வாறு சிறுவன், சிறுமியர் என்றோ, வயதான பெரியவர்கள் என்றோ பாகுபாடு பாராமல் தமிழர் அனைவரையும் படுகொலை செய்த இனவாத அரசுக்கு தாய் தமிழ் மண்ணான தமிழ்நாட்டில் தூதரகம் எதற்கு?



★ சிங்கள வீரர்கள் விளையாட்டுகளில் பங்கேற் பார்கள் என்கிற ஒரே காரணத்துக்காக ஆசிய தடகளப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த மறுத்த தமிழக முதல்வர் தமிழ்நாட்டில் இலங்கை அரசின் தூதரகத்தை தமிழர்கள் இதற்கு மேலும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும். அதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களை வேவு பார்ப்பதைத் தவிர, வேறு எந்த வேலையும் அற்ற இலங்கை அரசுக்குத் தமிழ்நாட்டில் துணைத் தூதரகம் செயற்படுவது தமிழினத்துக்கு அவமானமாகும்.

சென்னையிலிருந்து இலங்கை அரசின் துணைத் தூதரகத்தை அகற்றும் அமைதி வழி தொடர் போராட்டத்தில் நாம் தமிழர் கட்சி ஈடுபடும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வ)

## கேரளா பட்டாசு தொழிற்சாலையில் தீ; 5 பேர் சாவு



கேரளாவிலுள்ள பாலக்காடு மாவட்டம், பன்னியன் குறிச்சியில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளும் வெடித்துச் சிதறின.

இதனால் காயமடைந்த தொழிலாளர்கள் அலறியடித்துக்கொண்டு வெளியேற முயன்றபோதும் இந்த பயங்கர தீ விபத்தில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததோடு பலத்த தீக் காயமடைந்த 7 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (வ)

## சென்னையில் உள்ள இலங்கை தூதரகம் இன்று முற்றுகை

சென்னை, மார்ச்.4

சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் இன்று நடைபெறும் என்று தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு இயக்க ஒருங்கிணைப்பாளர் கண.குறிஞ்சி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

ஐ.நா. சபை மனித உரிமைக் குழு கூட்டம் இன்று திங்கட்கிழமை ஜெனிவாவில் நடைபெற உள்ளது. புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து 'ஈழத்தோழமை நாள்' என்று அறிவித்து மாவட்ட தலைநகரங்களில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தல், சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகை யிட்டுப் போராட்டம் நடத்தல் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (வ)

## மகா கும்பமேளா நிகழ்வில் காணாமற்போன 1.65 லட்சம் பேர் மீட்பு

மகா கும்பமேளாவில் இதுவரை 2 லட்சம் பேர் காணாமற்போயுள்ளதாகவும் அவர்களில் 1.65 லட்சம் பேர் மீட்கப்பட்டு மீண்டும் தங்களின் குடும்பத்தினருடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவின் மிகப் பெரிய மக்கள் ஒன்று கூடலான மகா கும்பமேளா உத்தரப்பிரதேச மாநிலம் அலகாபாத்தில் கடந்த ஜனவரி 14ஆம் திகதி ஆரம்பமாகியது. எதிர்வரும் 10 ஆம் திகதி வரை கும்ப மேளா நிகழ்வுகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றுப் புனித நீராடி வருகின்றனர்.

சனத் திரள்களுக்கிடையே புனித நீராட வரும் பலர், தங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்து காணாமற் போகும் சம் பவங்கள் அதிகமாக இடம் பெறுகின்றன.

பெரும்பாலும் குழந்தை



களே அதிகம் காணாமல் போகின்றனர். காணாமல் போனவர்களை கண்டறிவதற்காக பாரத் சேவா தளம் சார்பில் செக்டர்-4 இல், சிறப்பு உதவி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

காணாமற் போனவர்கள் குறித்து ஒலிபெருக்கி மூலம் அவ்வப்போது அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

கும்பமேளாநடைபெறும் பகுதியில் ஒன்பது இடங்களில் பிரமாண்டமான தொலைக் காட்சித் திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் காணாமல் போனவர்களின் புகைப்படங்கள் ஒளிபரப்பாகின்றன.

இது குறித்து அதிகாரிகள் தரப்பில் கூறியதாவது: கும்பமேளா ஆரம்பமாகியதிலிருந்து இதுவரை 2 லட்சம் பேர் காணாமல் போயுள்ளனர்.

அதிகபட்சமாக கடந்த மாதம் 10 ஆம் திகதி மட்டும் 39 ஆயிரம் பேரை காண வில்லை. காணாமல் போனவர்களில் 1.65 லட்சம் பேர் மீட்கப்பட்டு திரும்பவும் தங்களின் குடும்பத்தினருடன் இணைந்துள்ளனர். மற்றவர்களை பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன-என்றனர்.

## அரபிக் கடலில் இந்திய கடற்படை போர்ப்பயிற்சி



டில்லி, மார்ச்.4

இந்திய கடற்படையின் மேற்கு மற்றும் கிழக்கு இரு பிரிவினரும் சேர்ந்து கடந்த 30 தினங்களுக்கு மேலாக அரபிக் கடலில், போர் பயிற்சி தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

50 புதிய ஸ்டெல்த் போர் கப்பல்கள் மற்றும் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கி ஐ.என்.எஸ், சக்ரா, அதே போல் 75 போர் விமானங்கள், ரேந்து விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள், இதில் பங்கேற்றன.

அதிகாரி ஒருவர் இது குறித்து மேலும் குறிப்பிட்டதாவது:-

கடற்கொள்ளை எதிர்ப்பு பயிற்சிகளில் முழுமையான போர் நடவடிக்கைகளில் இருந்தும் சாத்தியமான காட்சிகள், நடை முறையில் இருந்தன. இந்தப்பயிற்சிகள் கடற்படை சார்ந்த ஒரு குறுகியதாகவும் துரிதமாகவும் மற்றும் உயர் வேகம் மோதல்களில் நிலம், காற்று சூழல்களிலும் போரின் விளைவு பாதிக்காது திறன் உறுதியுடன் வடிவமைக் கப்பட்டுள்ளது.

10 ஆயிரம் வீரர்கள் கொண்ட இராணுவம் மூன்று பிரிவாக, மேற்கு இந்தியா, தென்னிந்தியா மற்றும் அந்தமான் மற்றும் நிக் கோபார் தீவுகளை உள்ளடக்கியுள்ளது- என்றார். (வ)

# ந்தியாவுடனான நட்புறவு சீனாவுக்கு எதிரானதல்ல

## விளக்கமளிக்கிறது அமெரிக்கா

நியூயோர்க், மார்ச் 4

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக அமெரிக்கா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள், அந்தப் பிராந்தியத்தில் சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அல்ல-என்று கூறியுள்ளது அமெரிக்கா.

தற்போதைய அமெரிக்க அரசு இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பாக மேற்கொண்டு வரும் நடவடிக்கை குறித்து சீனா அதிருப்தி வெளியிட்டிருந்தது. சீனாவுடன் பல்வேறு விடயங்களில் முரண்பாடு உடைய ஜப்பான், பிலிப்பைன்ஸ், வியட்நாம், இந்தியா ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா நெருங்கிய உறவைப் பேணுகிறது. ஆசியாவில் மிகப்பெரிய சக்தியாக உருவெடுத்து வரும் சீனாவைக் கட்டுப்படுத்துவதற்காகவே அமெரிக்கா இது போன்ற செயல்களில் ஈடுபடுகிறது என்றும் குற்றஞ்சாட்டியிருந்தது.

> சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக நாங்கள் இது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகக் கூறுவது தவறு. இன்னும் சொல்லப்போனால் சீனாவுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த விரும்புகிறோம்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு விவகாரங்களுக்கான உயர் அதிகாரி மார்க் லிப்பர்ட் கூறியதாவது:-

முன்னாள் ஜனாதிபதிகளான பில் கிளிண்டன் மற்றும் ஜோர்ஜ் புஷ் ஆகியோர் இந்தியாவுடன் நட்புறவு மேம்பட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். தற்போது ஒபாமா தலைமையிலான அரசும், இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அந்தப் பிராந்தியத்தில் சமநிலையை ஏற்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டு வருகிறோம். சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக நாங்கள் இது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகக் கூறுவது தவறு. இன்னும் சொல்லப்போனால் சீனாவுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த விரும்புகிறோம். அதன் மூலம் தான் அந்தப் பிராந்தியத்தில் சமநிலையை எட்ட முடியும்.

வடகிழக்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா, பசுபிக் ஆகிய பகுதிகளில் உள்ள நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்படவுள்ளோம். அதனால், 2020ஆம் ஆண்டில் அமெரிக்க கடற்படையின் 60 சதவீத கப்பல்கள் அந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் நிறுத்திவைக்க வாய்ப்புள்ளது- என்றார். (ற)

## இலக்குத் தவறிய தாக்குதல் மன்னிப்புக் கேட்டது நேட்டோ



காபூல், மார்ச் 4

ஆப்கனில் நேட்டோ படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு சிறுவர்கள் உயிரிழந்ததை அடுத்து நேட்டோ படையினர் மன்னிப்பு கோரியுள்ளனர்.

நேட்டோ படையினர் ஹெலிகொப்டர்கள் மூலம் நடத்திய தாக்குதலில் ஏழு வயதுக்கும் குறைவான இரண்டு சிறுவர்கள் உயிரிழந்தனர். அதையடுத்தே ஆப்கனில் உள்ள நேட்டோ படையினர் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

குறித்த சிறுவர்கள் போராளிகள் போல தோற்றமளித்தனர். அதனாலேயே தமது படையினர் இந்தத் இலக்குத் தவறிய தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றனர் என்று நேட்டோ படையினரின் ஆப்கனுக்கான இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த மாதம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் 10இக்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்தனர். அதனைத் தொடர்ந்து வெளிநாட்டு படையினரை வான் தாக்குதல்களில் ஈடுபடுத்த வேண்டாம் என்று ஆப்கன் படைகளுக்கு அந்த நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## அசாத் பதவி விலக வேண்டும்

### வலியுறுத்துகிறது அமெரிக்கா

வோஷிங்டன், மார்ச் 4

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத் பதவி விலக வேண்டும் என்று அமெரிக்கா மீண்டு வலியுறுத்தியுள்ளது.

சிரிய ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்குரிய அனைத்து சட்டபூர்வமான உரிமைகளையும் அசாத் இழந்துவிட்டார். எனவே அவர் பதவியில் இருந்து தாமாகவே விலகிக் கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜோன் கொர்ரி கூறுகையில்

சிரியாவை ஆள்வதற்கான அனைத்து சட்டபூர்வமான உரிமையையும் அதிபர் பஷார் அல் அசாத் இழந்துவிட்டார். அவர் பதவி விலக வேண்டும். இந்த விவகாரத்தில் நாங்கள் சிரியா நாட்டு மக்களுடன் இருக்கிறோம். அந்த நாட்டு எதிர்க்கட்சிகளுக்கு தொடர்ந்து உதவி செய்வோம். எனினும், சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகவே வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் அசாத்துக்கு சில நாடுகள் ஆதரவளித்து வருவது கவலைக்குரிய விடயமாகும்.

சிரியாவில் ஜனநாயக ரீதியில் ஆட்சி மாற்றம் ஏற்படவும், அமைதி ஏற்படவும் உதவுவது என்பதில் ஜனாதிபதி ஒபாமா தலைமையிலான அரசு உறுதிபூண்டுள்ளது.- என்று தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி வியாழக்கிழமை சிரியாவின் எதிர்க்கட்சித் தலைவர்களை ரோமில் சந்தித்துப் பேசினார். அதன்போது ஆயுதங்கள் உள்படப் பல்வேறு உதவிகளை அமெரிக்கா வழங்கும் என்று உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ற)

## தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை பாகிஸ்தான் அர்சு அசமந்தப்போக்கு

### குற்றஞ்சாட்டுகிறார் அமெரிக்க செனட் உறுப்பினர்

நியூயோர்க், மார்ச் 4

பாகிஸ்தானில் இயங்கும் ஹக்கானி பயங்கரவாத அமைப்பு மீது நடவடிக்கை எடுப்பதற்கு பாகிஸ்தான் நிர்வாகம் தயங்குகின்றது. அதனால் அந்த அமைப்பைக் கட்டுப்படுத்துவது அமெரிக்காவுக்குப் பெரும் சவாலாக திகழ்கிறது- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க செனட் உறுப்பினர் ரொபர்ட் மெனெண்டஸ்.


அமெரிக்க செனட் அவையில் வெளிநாட்டுத் தொடர்புகள் குழுவின் தலைவராக உள்ள ரொபர்ட் மெனெண்டஸ் ஆப்கன் மற்றும் பாகிஸ்தானுக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டிருந்தார். அந்தப் பயணத்தின் போது பாகிஸ்தானில் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஹினா ரப்பானி மற்றும் இராணுவத் தலைமைத் தளபதி அஷ்பக் பர்வேஸ் கயானி ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். கலந்துரையாடல் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும்கூறியிருப்பதாவது:-

எனது சந்திப்புக்களின் போது ஹக்கானி பிரச்சினையை எழுப்பினேன். பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளின் புகலிடங்கள் குறித்தும், அந்தப் பிரச்சினைகளுக்குச் சிறந்த முறையில் எவ்வாறு தீர்வுகாண்பது என்பது குறித்தும் விவாதித்தேன்.

பாகிஸ்தானில் பழங்குடிகள் வசிக்கும் பகுதிகள் பயங்கரவாதிகளின் புகலிடமாக உள்ளன. அதனால் அவர்களை ஒடுக்க முடியவில்லை. மாற்று முறையை கையாண்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண பாகிஸ்தானுக்கு மனம் இல்லை. ஆப்கனும், பாகிஸ்தானும் ஓர் ஆக்கிரமிப்பாளராகவே அமெரிக்காவைக் கருதுகின்றன. அமெரிக்காவின் நோக்கமும், விருப்பமும் அதுவல்ல. ஆப்கனில் இருந்து படைகளை அமெரிக்கா விலக்கிக் கொள்ளத் தீர்மானித்த பின்னரும் அந்நாட்டுடனான உறவு தொடரும் என்பதைத் தெளிவுபடுத்தினேன்- என்றார். (ற)

## சார்வேஸின் உடல் நிலை தொடர்ந்து முன்னேற்றம்



கராக்கஸ், மார்ச் 4

வெனிசுவேலா ஜனாதிபதி ஹியுகோ சார்வேஸின் உடல் நிலையில் மேலும் முன்னேற் றம் ஏற்பட்டு வருவதாக அந்த நாட்டு உப ஜனாதிபதி நிக்கொலஸ் மதுரோ தெரி வித்துள்ளார்.

புற்றுநோய்க்காக சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டதை அடுத்து சார்வேஸின் உடல்நிலை குறித்து பல்வேறு மாறுபட்ட தகவல்கள் வெளியாகி வருகின்றன. இந்நிலையிலேயே வெனிசுவேலா உப ஜனாதிபதி நிக்கொலஸ் மதுரோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெனிசுவேலாவின் ஜனாதிபதியாக மீண்டும் ஹியுகோ சார்வேஸ் தெரிவாகியபோதிலும், உடல் நிலை காரணமாக அவர் இன்னும் பதவியேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## 'போப்' பதவி வெற்றிடம்: புதிய அஞ்சல் முத்திரை வெளியீடு



வத்திக்கான், மார்ச் 4

பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர் பதவி விலகியதை அடுத்து அந்தப் பதவி தற்போது வெற்றிடமாக இருக்கின்றது. அதைக் குறிக்கும் வகையில் வத்திக்கான் நகர தபால்துறை புதிய தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

2 திறப்புக்களைக் குறுக்காக வைத்து அதன் நடுவில் வெற்றிடம் இருப்பது போல் வடிவமைக்கப்பட்டுள்ளது அந்தத் தபால் முத்திரை.

புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்படும் வரை மட்டுமே அந்தத் தபால் முத்திரை விற்பனைக்கு விடப்படும் என்று வத்திக்கான் நகர தபால் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (ற)

## 3 வயதுச் சிறுமியின் உயிரை காப்பாற்றியது வளர்ப்பு நாய்

### போலந்து நாட்டில் விநோத சம்பவம்

வார்ஸோ, மார்ச் 4

மூன்று வயதுச் சிறுமியின் உயிர் அவரது வளர்ப்பு நாயால் காப்பாற்றப்பட்டது. இந்தச் சம்பவம் போலந்தின் மேற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

போலந்தின் மேற்குப் பகுதியில் உள்ள பயிர்ஸ்வின் கிராமத்தைச் சேர்ந்த 3 வயது சிறுமி ஜுலியா. ஜுலியா வீட்டின் பின்வாசல் அருகே விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாட்டில் கால்போன போக்கில் நடந்து புதர்கள் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்றுவிட்டாள்.

மாலையானதும் தாயார் சிறுமியைக் காணவில்லை என்று தேடத் தொடங்கியுள்ளார். சிறுமியைக் காணாததால் பொலிஸாருக்கு அறிவித்தார். அதைத்தொடர்ந்து, பொலிஸாருடன் இணைந்து 200 இக்கும் மேற்பட்டவர்கள் சிறுமியைத் தேடும் பணியில் இறங்கினார்கள். இரவு முழுவதும் தேடியும் ஜூலியாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தப் பகுதியில் பூச்சியத்துக்கும் கீழான உறைநிலை, காலநிலை நிலவுகின்றது. அதனால் சிறுமியின் நிலைகுறித்து மீட்புப் படையினர் நம்பிக்கை இழந்திருந்தனர்.

மறுநாள் காலையில் தேடுதலில் ஈடுபட்டிருந்த மீட்புப்படையினர் ஒதுக்குப்புறமான சதுப்பு நிலப் பகுதியில் இருந்து ஒரு சிறுமியின் முனங்கல் ஒலியைக் கேட்டனர். ஒலி வந்த திசைக்கு விரைந்துச் சென்ற மீட்புப் படையினர் ஆச்சரியத்தில் உறைந்து விட்டனர். குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த ஜுலியாவுக்கு கதகதப் பூட்டும் வகையில் தனது உடலால் அவளை அணைத்த படி அவர்களது வளர்ப்பு நாய் படுத்திருந்தது. அதனால் அந்தக் குளிரிலும் சிறுமியின் உடல் வெப்பம் இழக்காமல் காணப்பட்டது. உடனடியாக சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தற்போது நலமுடன் உள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து போலந்து முழுவதும் அந்த நாய் 'ஹீரோ' அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. அனைத்து ஊடகங்களிலும் அந்த நாயைப் பற்றிய செய்திகள் முதலிடத்தைப் பிடித்திருந்தன. (ற)

## கடும் உறைபனியின் காரணமாக விபத்தில் சிக்கியது புல்லட் ரயில்

டோக்கியோ, மார்ச் 4

கடும் பனி காரணமாக டோக்கியோவில் மிகை வேக ரயில் விபத்துக்குள்ளானது. எனினும் சாரதியின் விரைவான செயற்பாட்டால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

'புல்லட் ரயில்' என்று அழைக்கப்படும் மிகைவேக ரயில்கள் டோக்கியோவில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவை மணிக்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் பயணத்தை மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தற்போது டோக்கியோவில் கடும் பனியுடன் கூடிய காலநிலை நிலவுகின்றது. ரயில் தண்டவாளங்கள் உறைபனியால் மூடப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் காலை பயணத்தில் ஈடுபட்ட ரயில் உறைபனி காரணமாக தண்டவாளங்களில் இருந்து சறுக்கி தண்டவாளத்தை விட்டு விலகியது. முதலாவது ரயில் பெட்டி சரிந்ததைக் கண்ட சாரதி உடனடியாக வேகத்தைக் கட்டுப்படுத்தி மற்றைய ரயில் பெட்டிகளைக் காப்பாற்றினார்.

விபத்து இடம்பெற்ற போது 130 பயணிகள் ரயிலில் பயணித்தார்கள் என்று கூறப்படுகிறது. (ற)

# சேவை நலன் பாராட்டு



திருமதி
**ஈஸ்வரி தர்மலிங்கம்**
(ஆசிரியை,
யா/இணுவில் மத்திய கல்லூரி)

**சேவை விபரம்:**
10.09.92-14.09.92-
யா/இணுவில் மத்திய கல்லூரி
15.09.92-10.01.95-
யா/மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம்
11.01.95-30.04.2001
யா/அருணோதயாக் கல்லூரி
01.05.2001-01.03.2013
யா/இணுவில் மத்திய கல்லூரி

ஆசிரிய சேவையில் 20 வருடங்களைப் பூர்த்தி செய்து 01.03.2013 இல் ஓய்வு பெறும் ஆசிரியையின் சேவையை பாராட்டி ஓய்வுபெறும் காலத்தில் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/இணுவில் மத்திய கல்லூரி

(34000) (10.6.7)

## பிரபல நிதி நிறுவனத்திற்கு பணியாள்கள் தேவை

தொண்டமானாறு, வல்வெட்டித் துறை, அல்வாய், பருத்தித்துறை, கரவெட்டி, வரணி, குடத்தனை, ஆழியவளை பகுதிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.
தகைமை- A/L சித்தி OR O/L சித்தியுடன் 02 வருட தொழில் அனுபவம்.
விண்ணப்பிப்பவர்கள் பெயர், முகவரி, தொலைபேசி இல. என்பவற்றை கீழ்வரும் TP இலக்கத்திற்கு Sms செய்யவும்.
T.P-0777061545,
0758691674

(27777) (6.7.11)

## பாராட்டி வாழ்த்துகின்



முகமாலை, பளையைச் சே
செல்வி அழகையா நி
அவர்கள் 28.02.2013 அன்று
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற 28 ஆவது
பொது பட்டமளிப்பு விழாவில்
நுண்கலைமாணி
(BFA,2nd Upper) பட்டம்
பெற்றமையைப்
பாராட்டி வாழ்த்துவதுடன்,
இவர் மேன் மேலும் பல
பட்டங்கள் பெற்று சமூகத்துக்கு
சேவையாற்றும்
நல்லுள்ளம் கொண்டவராக மிளிர
வேண்டுமென

வாழ்த்துவோர்:
சமரக்கொடி
(சித்தப்பா குடும்பத்தினர்).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் 2013.02.28 அன்று நடைபெற்ற 28ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A) பட்டம் பெற்ற

**சிவராஜா ஜெயந்தன்**

அவர்களை மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாசிகசாலையடி தெற்கு,
உடுப்பிட்டி.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அன்ரா
சிவயோகநாதன் குடும்பம், சிவகுலநாதன் குடும்பம் (கனடா),
செல்வராசா குடும்பம் (கனடா), சுரேஸ் குடும்பம்,
ஜெயசங்கர் குடும்பம்.

(34102) (10.6.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வைத்தியசாலையில் கடமையாற்றும்

செல்வி **புஸ்பராணி செல்வராசா**

நுண்கலை மாணி (BFA) பட்டம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நியூ மெடிகெயர் வைத்தியசாலை, கச்சாய் றோட், சாவகச்சேரி.
உரிமையாளர், வைத்தியர்கள், ஊழியர்கள்.

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## தேசிய பாடசாலை

# வாழ்த்துகின்றோம்!



எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினருமாகிய

**திரு.த.பாலகுமார் அவர்கள்**

மிக நீண்ட காலம் ஆசிரியராகவும் முகாமைத்துவ ஆலோசகராகவும் நற்பணியாற்றி இலங்கை அதிபர் சேவைக்குப் பதவியுயர்வு பெற்று யா/கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளமையையிட்டு மிக்க மகிழ்வடைகின்றோம். அவரது சேவை சிறப்புறவும் வாழ்வு வளம்பெறவும் மனதார வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

## வாகனம் வாடகைக்கு/ விற்பனைக்கு

Mitsubishi வகை Monterosport, 2012 Model 7 இருக்கைகள் கொண்ட, வெள்ளை நிற Diesel வாகனம் விற்பனைக்குண்டு. அல்லது நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0771943054

(34063)(6.7.11)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு மட்டும்
தொடர்பு: 0775669883, 021 7200687

(34088)(6.7.11)

## கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்தல்

## இறந்த /காயமடைந்த நபர்கள் மற்றும் சொத்துக்கள் அழிவு தொடர்பான தொகை மதிப்பு-2013

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளுக்கமைய நாட்டில் யுத்த நிலைமை காணப்பட்ட காலப் பகுதியில் ஏற்பட்ட இறந்த/ காயமடைந்த நபர்கள் மற்றும் சொத்துக்கள் அழிவு தொடர்பான தொகைமதிப்பொன்றை அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சும் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களமும் ஒன்றிணைந்து மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை மதிப்பின் தகவல்களைச் சேகரிப்பதற்காக எதிர்வரும் தினங்களில் உங்கள் வீடுகளுக்கு வருகை தரும் உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தருக்கு உண்மையான தகவல்களை வழங்கி இந்தத் தொகை மதிப்பை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு உதவுங்கள்.

**செயலாளர்,**
**அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07,**
**தொ.பே: 0112695738**

பணிப்பாளர் நாயகம்,
தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம்
ரொடுண்டா கோபுரம்
109, காலி வீதி,
கொழும்பு- 03,
தொ.பே:0112147001

(C/6771)(6.7.11)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கலாவதி துரைராஜா**

B.B.A (Hons) HRM Spl.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 28ஆவது பட்டமளிப்பு விழாவில் கலாவதி துரைராஜா அவர்கள்

மனிதவள முகாமைத்துவ சிறப்பு தொழில் நிர்வாகமாணி

*பட்டம் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடையவதோடு மேன்மேலும் கல்வி உலகில் பல சாதனைகள் படைத்து சிறப்புடன் வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.*

*Best Wishes...!*

**வாழ்த்துவோர்:**
கமலேஸ்வரி (அம்மா)
அத்தான், சின்னக்கா,
அத்தான், குட்டி அக்கா,
பிள்ளைகள்: திபாகன், மதீஸ்,
நிதேஷ், விஷ்ணுஜா

(34086) (10.6.7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் 28ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (சிறப்பு) B.A(Hons)History(2nd Upper) பட்டம் பெற்ற

Best wishes

செல்வி
**பாணுஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராசா**

அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர் பதவிகள் வகித்து 'வாழ்க வளமுடன்' என பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பத்மகாந்தன் குடும்பம்,
செல்வரத்தினம் குடும்பம்,
குலேந்திரமோகன் குடும்பம்.

(27865)(8.6.7)

# 'ப்ருந்த கானம்' இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 4

இந்தியத் துணைத் தூதரகமும் ப்ருந்த கான லய நிறுவனமும் இணைந்து வழங்கும் 'ப்ருந்த கானம்' எனும் இசை நிகழ்வு எதிர் வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இந்திய வானொலிக் கலைஞராகவும் இலங்கை வானொலிக் கலைஞராகவும் விளங்கிய 'வாத்யவாணி' திருமதி கோகிலத் வனி விஜயராகவன் இலங்கையில் முதன் முறையாக தவிலுடன் சரஸ்வதி வீணை இசை வழங்குவார்.

மென்டலின் வாத்திய இசையை இசைஞான மணி விஸ்வநாதக்குருக்கள் சிவகுமார் சர்மா வழங்குவார்.

அன்றையதினம் ப்ருந்த கான லய நிறுவனமும் ப்ருந்த கானலய அறநெறியும் இணைந்து வழங்கும் மும்மூர்த்திகள் விழா பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-14)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி **ஜெயமணி தேவேஸ்வரன்**
(SLPS 2-II)



எமது வித்தியாலய அதிபர் **திருமதி ஜெயமணி தேவேஸ்வரன்** அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2- II இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்.

(34092)(6.7.11)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 28-02-2013 அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் நடை பெற்ற 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் **கல்வி முதுமாணி** (Distinction) பட்டம் பெற்ற எமது நண்பி

திருமதி
**மேசி யூட்ஸ் செல்டன் யூடிற்**
(கெலன்)

(B.A, PGDE (Merit) MEd (Distinction)

ஆசிரியை மன்-தாழ்வுபாடு புனித வளனார் றோ.க.த வித்தியாலயம்) என்பவரை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று கல்வி உலகில் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
ஆசிரிய நண்பர்கள் (1999, 2000)
பலாலி ஆசிரிய கலாசாலை.

(ஏ6777)(10.6.7)

# Personal Class

தரம் 3 - A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar கற்க விரும்புவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும் அல்லது நீங்கள் எமது நிறுவனத்தில் வந்து கற்கும் வசதியும் உண்டு. G.A.Q, B.A. Part I மாணவர்களும் இணைந்தால் வெற்றி நிச்சயம்.
தொடர்பு: K.K.S. Road, Jaffna.
**T.P. 077 1372 280**

(34138)(45.6.7)

# துயர் பகிர்கிறோம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி இராஜசெவந்தரி விஜயகுமாரன் அவர்களின் மாமியார்

திருமதி **வைரவப்பிள்ளை தெய்வநாயகி**

23.02.2013 அன்று காலமானார்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாடசாலைச்சமூகம்
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் (28.02.2013) அன்று நடைபெற்ற 28 ஆவது பட்டமளிப்பு விழாவில்

**மகாதேவராசா சுதாகரன்**

கலைமாணி (பொது)
B.A (Sociology & Political)
பட்டம் பெற்றதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு மேலும் பல பட்டங்களையும் பெற்று சகல செல்வங்களுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

நா. கிசிந்தன், நளாயினி,
நா. கிசிதரன், சி. இளங்கோ, கிசியாழினி } பிரான்ஸ்

(34103)(6.7.11)

# மரண அறிவித்தல்

## வட்டர் வடிவேல்



கைதடியைப் பிறப்பிடமாகவும், மன்னார் கள்ளியடி, விடத்தல் தீவு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் தற்போது கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட வட்டர் வடிவேல் கடந்த (01.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வட்டர் - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் (இளைப்பாறிய அதிபர் - கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்- வடிவேல் ரீச்சர்) ஆருயிர் கணவரும், சுஜிதா (சுவிஸ்), ரஜிதா (சுவிஸ்), நந்தா, கஜமுகன் (அமெரிக்கா), பிரிந்தா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இலட்சுமி, கயிராத்தை, முருகன் மற்றும் கந்தர், பொன்னி, தங்கம் ஆகியோரின் சகோதரனும், தேவிவிமலா (கனடா), நர்தலட்சுமி (கனடா), சசிலேகா (கனடா), சவ்ரினா (மூதூர்), காலஞ்சென்ற தங்கராசா மற்றும் புஸ்பராசா ஆகியோரின் சகலனும், பேரின்பராஜா (கனடா), நாதன் (கனடா), யோகராஜா (கனடா), மனோகரராஜா (மூதூர்), வசந்தாதேவி (மன்னார்), பராசக்தி, மேகநாதன் (கனடா), கணபதிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அத்தானும், அருணாசலம் (சுவிஸ்), கிருஷ்ணண் (சுவிஸ்), கிஷோர்குமார் (சுவிஸ்), சுதர்சன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், அருணூஜன் (சுவிஸ்), அஜிதா (சுவிஸ்), அர்ச்சன்(சுவிஸ்), துஷாந்தன், வியாதினி, அதீஸ் (சுவிஸ்) ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(34105) (45.6.7)

# விவாகரத்து வேண்டாமே.....

திருமதி.ந.பரமேஸ்
காரைநகர்.





உலகில் எந்த ஒரு உறவுமே நிலையாக நிலைப்பதில்லை. இதற்கு காரணம் ஒவ்வொருவரின் மனநிலையும் வித்தியாசமானதாக இருப்பது தான். மனிதன் என்றால் வித்தியாசம் இருக்கும் தான். ஆனால் அதே சமயம் புரிந்து கொள்ளுதலும், விட்டுக் கொடுத்து நடப்பதும் நிச்சயம் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். அத்தகைய மனநிலை இல்லாவிட்டால், அனைத்து உறவுகளும் பாதியிலேயே பிரிந்துவிடும். மேலும் இந்த நிலைமை திருமணமானவர்களுக்குக் கூட உள்ளது. இருவரிடமும் சரியான புரிதலும், மனப்பக்குவமும் இல்லாததே இதற்கு காரணமாகும்.

இன்றைய காலத்தில் திருமணம் செய்து கொள்பவர்கள், திருமணத்தை ஒரு விளையாட்டாக நினைப்பதால், அந்த உறவுக்கு முடிவை தேடிக் கொள்கின்றனர். இந்த உலகில் இருக்கும் உறவு முறைகளிலேயே கணவன்-மனைவி உறவுதான் மிகவும் சிறந்தது. இத்தகைய உறவை வாழ்நாள் முழுவதும் தக்க வைத்துக் கொண்டு சந்தோஷமாக வாழ்பவர்களே உண்மையான அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில் இந்த உறவில் அனைத்து உறவுகளுமே அடங்கும். எனவே இத்தகைய அருமையான திருமண உறவுக்கு முறிவு ஏற்படாமல் இருப்பதற்குச் சில வழிகள்

★ கணவன்-மனைவி இருவருக்குள் சண்டை வருவது சாதாரணம்தான். ஆனால் அந்தப் பிரச்சினையை உடனே தீர்ந்துவிட வேண்டும். இல்லையெனில் அந்த பிரச்சினையே இருவருக்கும் இடையில் பெரும் பிரிவை ஏற்படுத்தும். அதற்கு முதலில் அந்த பிரச்சினையைப் பற்றி இருவரும் பொறுமையாகப் பேச வேண்டும். இந்த நேரத்தில் ஏற்றத் தாழ்வுகளை மனதில் கொண்டு நடந்தால், பின் இருவரும் வாழ்நாள் முழுவதும் பிரிய வேண்டிவரும்.

★ சந்தோஷமான வாழ்க்கை அமைய வேண்டும் என்று நினைத்தால் மட்டும் போதாது. சண்டைகள் வந்தால், உடனே அந்தச் சண்டையை நிறுத்துவதற்கான வழிமுறைகளையும் யோசித்து, அவற்றை தீர்ப்பதற்கு முயல வேண்டும். இவ்வாறு தீர்வு கண்டால், நிச்சயம் விவாகரத்தைத் தவிர்க்க முடியும்.

★ விவாகரத்து நிச்சயம் வேண்டும் என்று நினைக்கும் தறுவாயில், அதனைத் தடுப்பதற்கு நடந்த சண்டையை மறந்து, இருவரும் சந்தோஷமாக இருந்த தருணங்களை நினைத்துப் பார்த்தால், கண்டிப்பாக விவாகரத்தைத் தவிர்க்கலாம்.

★ தவறு செய்வதால்தான், சண்டைகள் வருகின்றன. இந்த உலகில் தவறு செய்யாதவர்களே இருக்கமாட்டார்கள். மேலும் தவறு செய்தவர்கள், தவறை உணர்ந்து மனம் வருந்தி மன்னிப்பு கேட்டால், நிச்சயம் அந்த உறவு மிகவும் அழகாக இருக்கும். எனவே தவறு யார் மீது இருந்தாலும், மன்னிப்புக் கேட்கவேண்டும்.

★ நடைமுறை மற்றும் பழக்கவழக்கங்களை சூழ்நிலைக்குத் தகுந்தவாறு மாற்றிக் கொள்ள வேண்டும். அதைவிட்டு எப்போதுமே ஒரே மாதிரி செயல்பட்டால், பின் இருவருக்கும் இடையில் எந்த நேரமும் சண்டை வந்து கொண்டே இருக்கும். ஆகவே ஒருசில மாற்றங்கள்கூட விவாகரத்தை தடுக்கும்.

★ திருமண வாழ்வில் சரியான புரிதல் மற்றும் நம்பிக்கைதான் மிகவும் முக்கியமானது. அந்த சரியான புரிதல் மட்டும் இல்லாவிட்டால், அது இறுதியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி விடும். பின் எந்த நேரமும் சண்டை வருவதோடு, இறுதியில் விவாகரத்து வரை சென்று விடும். எனவே எதுவானாலும் மனதில் கொண்டு செயல்படாமல், அதனைப் பேசி இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வதன் மூலம், பிரிதலை தடுக்கலாம். ஆனால் அது சற்றுத் தாமதமாகி விட்டாலும், பின் விவாகரத்துதான் முடிவு.

இவை அனைத்தையும் மனதில் கொண்டு செயல்பட்டால், விவாகரத்து ஏற்படுவதைத் தடுத்து, சந்தோஷமான திருமண வாழ்வை மேற்கொள்ளலாம்.

# தொந்தியா..... கவலை வேண்டாம்



தரையில் முதலில் மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு கைகளையும் உடலின் பக்கத்தில் தளர்ந்த நிலையில் வைக்கவும்.தலை,கைகள்,கால்கள் மற்றும் உடல் முழுவதும் மிகவும் தளர்ச்சியான நிலையில் வைக்கவும். பிறகு மூச்சை இழுத்துக் கொண்டே தலையை தூக்காமல் கைகளைக் கொண்டு தரையை அழுத்தாமல் வைக்கவும். கால் கட்டை விரல்களை சேர்த்து வைத்து மேலே தூக்கவும். அதிகம் மேலே தூக்கி விடக் கூடாது. திருப்பி கால்களை கீழே இறக்கும் போது மூச்சை வெளியே விட்டுக் கொண்டே மெதுவாக இறக்கவும். குதிக்கால்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தரையைத் தொடக் கூடாது. அப்படித் தொட்டு விட்டால் பயிற்சி முடிந்துவிடும்.இப்படி ஒரு நாளைக்கு 25 முறை செய்ய வேண்டும் புதியவர்கள் 10 முறை செய்தால் போதும் நன்கு பயிற்சி கைகூடியபிறகு 50 முறை கூட செய்யலாம்.

இந்தப் பயிற்சியின் மூலம் ஏற்படும் பலன்கள்.....
இந்த பயிற்சி முழுக்க முழுக்க வயிற்றுக்காகவே உள்ள பயிற்சி. பயிற்சியைத் தொடர்ச்சியாக செய்து வந்தால் தொந்தி குறைவது உறுதி .பெருங்குடல், சிறுகுடல் அனைத்தும் தூண்டப்பட்டு நன்கு வேலை செய்வதால் வயிறு மந்தமான நிலையில் பசியெடுக்காதவர்களுக்கும் பசி எடுக்கும். இடுப்பில் தேவையில்லாத சதை குறைந்து வலிமை பெறும் முதுகெலும்பும் வலிமை பெறும் தொடைப் பகுதியும் வலிமை பெறும்.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# உலக நியதியை மாற்ற முடியுமா...

திருமதி வ.ஒளிவண்ணன்

தற்போதுள்ள காலகட்டத்தில் ஆண்களை விட பெண்களுக்குத்தான் அதிக பாதுகாப்புத் தேவைப்படுகின்றது. திருமண வயதை அடையும் வரை பெண்களுக்குப் பெற்றோரால் பாதுகாப்பு கொடுக்கப்படுகின்றது. பெண்கள் தங்கள் தாயைக் காட்டிலும் தந்தையையே அதிக பாதுகாப்பு தருபவராக எண்ணுகின்றனர்.

திருமணத்துக்குப் பின் பாதுகாப்புக்காக கணவனை நம்பி வாழ்கின்றனர்.

இந்த விடயத்தில் முரண்பாடு நிகழும்போதுதான் கணவன் மனைவிக்கு இடையே பிரச்சினைகள் உருவாகின்றன. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாததுதான் இதற்கு காரணம். பெண், ஆணை விட தான் தான் மேலானவள் என்றும், ஆண் பெண்ணை விட தானே எல்லா விதத்திலும் மேலானவன் என்றும் எண்ணுகின்றனர்.

இருவரும் அவரவர் தனித்தன்மைகளில் மேலானவர்தான்.ஒரு பெண் திருமணத்திற்கு பின் தன் கணவருடைய பெருமை, மரியாதை, கௌரவம் என்று அனைத்து விடயங்களிலும் தனக்கும் பங்கு உண்டு என்பதைக் காட்ட வேண்டும். அதில் தான் பெண்ணுக்கு மரியாதை உள்ளது.

அதேபோல், மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவளுடன் இணைந்து ஒற்றுமை குலையாமல் குடும்பத்தை பராமரிப்பதில் தான் கணவனுக்கு மரியாதை உள்ளது. இயல்புக்கு மீறிய நடத்தைகளில் ஈடுபடும்போது அவர்களது மரியாதைக்கு பங்கம் வந்து விடுகிறது. பெண்கள் ஆண்களை சார்ந்தும், ஆண்கள் பெண்களைச் சார்ந்தும் வாழ்வது தான் உலக நியதி என்பதை இருவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

தயன் தொடர்புகளுக்கு

...யகம்:
...ரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-567111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 0212280065
தொலைநகல்: 0212280066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789,
0212262395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 0212270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி பொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்றர் – மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399., 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்ரிற்றி' –முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

## உண்மையும் பொய்யாகிவிடும்

தமிழில் 'பாட்டி வடை சுட்ட' கதையைப் போலவே ஓநாய் கதை ஒன்றும் பழைமையானது. ஒரு ஆடு மேய்க்கும் சிறுவன், சகபாடிகளை பயமுறுத்துவதற்காக ஒருநாள் திடீரென்று "ஓநாய் ஓநாய்" என்று கூவினான். அவனது அலறலைக் கேட்டு, சகபாடிகள் மட்டுமல்லாது, அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் தடி, தண்டுகளோடு ஓடி வந்து விட்டார்கள். வந்தவர்கள் ஓநாயைக் காணாது அந்தப் பகுதி எங்கும் தேடி அலைந்து களைத்து, சோர்ந்திருந்தபோது அந்தச் சிறுவன் பலமாகச் சிரித்தான்.

"நன்றாக ஏமாந்து விட்டீர்களா? பொழுது போகவில்லையே என்பதற்காகத்தான் ஓநாய் ஓநாய் என்று கத்தினேன்" என்று கூறி வந்தவர்களை கேலி செய்தான். அவர்களும் அவமானத்தோடு, திரும்பிச் சென்றார்கள். அவனுக்கு இந்த விளையாட்டு பிடித்துப் போயிற்று. அதனால் அடிக்கடி "ஓநாய் ஓநாய்" என்று கூவி, மற்றவர்களை ஏமாற்றி மகிழ்ந்திருந்தான். ஒரு கட்டத்தில் அவன் செய்வது விளையாட்டு என்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டார்கள். அதன்பின்னர், அவனது ஓநாய் விளையாட்டு அவர்களிடம் பலிக்கவில்லை. இந்த நிலையில் ஒருநாள் உண்மையாகவே ஓநாய்கள் கூட்டமாக வந்து, சிறுவனின் ஆட்டு மந்தையை வேட்டையாடத் தொடங்கின. அவனால் அவற்றை விரட்ட முடியவில்லை. பலங்கொண்ட மட்டும் "ஓநாய் ஓநாய்" என்று கத்தினான். இதுவும் அவனது வழமையான விளையாட்டே என்று எண்ணி, எவரும் வரவில்லை. கடைசியில் தன்னுடைய ஆடுகள் முழுவதையும் அவன் ஓநாய்களுக்கு பறிகொடுக்க வேண்டியிருந்தது.

தொட்டதற்கெல்லாம், "அவையெல்லாம் பச்சைப்பொய். புனைவுகள். காட்சி மோசடி. எனவே அவற்றை முற்றாக நிராகரிக்கிறோம்" என்று வாய் கூசாமல் இலங்கை அரசு சொல்கின்ற கதைகளைப் பார்க்கின்றபோது, இந்த ஓநாய் சிறுவனின் கதையே நினைவுக்கு வருகிறது.

ஆயிரம் பேர் பார்த்திருக்க, புகைப்படச் சாட்சியங்களோடு, கையளிக்கப்பட்ட சந்தேகநபர்களைப் பற்றி, "எங்களுக்கு எதுவும் தெரியாது, புகைப்படங்கள் எல்லாம் காட்சிப் புனைவுகள்" என்று சத்தியம் செய்கிறது பொலிஸ் தரப்பு. இவ்வாறு மக்களினதும் ஊடகவியலாளர்களதும், நாடாளுமன்ற உறுப்பினர்களதும் கண்முன்னால் நிகழ்ந்த ஒன்றையே இல்லை என்று சுருதியை மாற்றும் அரசுமீது மக்களுக்கு எப்படி நம்பிக்கைவரும்.

பாலச்சந்திரன் புகைப்பட விவகாரம், சனல்–4இன் புதிய வெளியீடான 'மோதல் தவிர்ப்பு வலயம்', சர்வதேச மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டு என்பவற்றுக்கும் இதே பாணியிலேயே "எல்லாம் பொய் மயம்" என்று ஒற்றைச் சொல்லில் பதில் சொல்லியிருக்கிறது அரசு.

இப்படி எடுத்ததற்கெல்லாம் பொய்களாலேயே பதில் சொல்லும் அரசு மீது நம்பிக்கை இழந்துவிட்ட மக்கள், எப்போதாவது, இந்த அரசு உண்மையைக் கூறினால்கூட அதனை நம்ப மறுக்கும் நிலையே ஏற்படும். மக்கள் மட்டுமல்லாது, சர்வதேச நாடுகள் கூட இலங்கை அரசு சொல்லும் எதனையும் நம்பத் தயங்கும் நிலையையே இத்தகைய மறுதலிப்புகள் உருவாக்கும். உலகின் மிக நம்பகரமான நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு, உண்மையான புகைப்படங்களே என்று உறுதிப்படுத்தப்பட்ட படங்களைக் கூட தொழில்நுட்ப மோசடி என்றும், "பாலச்சந்திரன் கொல்லப்படவே இல்லை" என்றும் சொல்பவர்களை அரிச்சந்திரனின் வாரிசுகளாக யார்தான் ஏற்பர்?

# இலங்கையின் மூலோபாயம் பிழைத்துப்போனது ஏன்?

சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையில் இருந்து
■ கோகுலன்

## ஜெனிவா கூட்டத்துக்கு பின்னராவது ஆராய்ந்து பார்ப்பது அவசியம்

**பல்வேறு உலகநாடுகளின் தலைநகர்களில் நடைபெற்று வரும் பல சம்பவங்கள் இலங்கையை மையப்படுத்துபவையாகவுள்ளன. ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதும், ஊடகங்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நியமிக்கப் பட்ட அனுபவமற்ற அதிகாரிகளின் தவறுகளும் அரசுக்கு நன்மை ஏற்படுத்தப்போவதில்லை.**

ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாகக் கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானம் விடயத்தில் இலங்கையின் பிரதிநிதிகள் குழுவின் அணுகுமுறை மூலோபாயத்தில் குறிப்பிடக்கூடிய மாற்றங்களைக் காணக் கூடியதாக இருந்தது. முன்னதாக அமெரிக்கா கொண்டுவர இருக்கும் இரண்டாவது தீர்மானத்தின் கடுமையை தளர்த்திக் கொள்ளும் விதத்தில் பல்வேறு தரப்புகள் மூலம் அமெரிக்காவை அணுகும் முறையொன்று கடைப்பிடிக்கப்பட்டது.

பின்னர் இலங்கையின் ஜெனிவா தூதுவர் ஆரியசிங்க ஜெனிவாவிலுள்ள அமெரிக்க தூதுவர் எஸ்லீன் சாம் பர்லேன் டொனஹூவுடன் நேரடியாக ஆலோசனை நடத்தும் அணுகுமுறை கைக்கொள்ளப்பட்டது. இப்பொழுது இந்த நடைமுறைகளில் இருந்து இலங்கை தரப்பு பின்வாங்கிக் கொண்டு நட்பு நாடுகளை அணுகி ஜெனிவாவில் இலங்கையை ஆதரிக்கும்படி கோரிக்கை விடும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. எதுவானாலும் தீர்மானம் விவாதத்துக்கு வரும் போது அநேகமாக மார்ச் 21 ஆம் திகதி வாக்கெடுப்பு ஒன்றை கோரும் நிலையில் இலங்கை இருக்காது என்று ஜெனிவாவிலுள்ள இலங்கை ராஜதந்திர வட்டாரம் ஒன்று தெரிவித்தது. கடந்த முறையை விட இந்த முறை விளைவு மிக மோசமாக இருக்கப் போகின்றது என்ற வகையில் அச்சம் நிலவுகின்றது.

அமெரிக்கா தான் கொண்டு வரும் இரண்டாவது பிரேரணையை ஆதரிக்கும்படியாக உறுப்பு நாடுகளை பெருமளவில் அழுத்தம் கொடுத்து வருவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. பிரேரணையை சம்பிரதாயப்படி தாக்கல் செய்வதற்கு முன்பாக அமெரிக்கா உறுப்பு நாடுகளுடன் தனிப்பட்ட முறையில் ஆலோசனைகள் நடத்தி வருவதாக தெரிகிறது. பிரேரணையின் முழு வடிவத்தின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளும் ஆர்வத்தில் இலங்கைக் குழுவினர் உள்ளனர். அதன் நகல் வடிவம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கைக் குழுவின் தலைவராக கடைசி நேரத்தில் நியமிக்கப்பட்டவரான அமைச்சர் சமரசிங்கவின் முதல் வேலை அந்த உயர் நிலை மாநாட்டில் கடந்த புதனன்று உரை நிகழ்த்துவதாக இருந்தது. அமைச்சர்களுக்கு மாநாட்டில் பேசுவதற்கு 20 நிமிடங்கள் வழங்கப்படும். பேராளர் குழுக்களின் தலைவர்களுக்கு இரண்டு நிமிடங்கள் மட்டுமே கிடைக்கும். அமைச்சர் சமரசிங்கவை ஜெனிவாவுக்கு அனுப்ப முடிவெடுத்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஏனைய நாடுகளில் இருந்து நீதித்துறை மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிலையில் வித்தியாசமான பதவியிலிருக்கும் ஒருவர் இலங்கை அமைச்சர் மாத்திரமே. பெருந்தோட்ட கைத்தொழில்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவராகவும் சமரசிங்க விளங்கு கிறார்.

ஆணைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகளை அரசு செயற்படுத்தாமை மற்றும் தேசிய செயற்றிட்டம் ஆணைக் குழு பரிந்துரைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிலவற்றை மட்டுமே கொண்டிருப்பதாகவும் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அவர் தமது பேச்சில் பதிலளிக்கும் போது, பரிந்துரைகளில் சில ஏற்கனவே தேசிய மனித உரிமை செயற்றிட்டத்தின் ஊடாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அவை தேசிய செயற்றிட்டத்தில் இடம்பெறாமல் இருக்கலாம். மேலும் தேசிய செயற்றிட்டமானது விஸ்தரிக்கப்படக்கூடிய செயற்பாடு என்பது கவனத்துக்குரியது என்று கூறினார்.

தேசிய நல்லிணக்கம் தொடர்பாக அவர் குறிப்பிட்ட போது , நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்கும் ஆலோசனை இருக்கின்றது. இந்த விடயத்தை ஆலோசிப்பதற்கு அதுவே பொருத்தமான மேடை என்று அரசு கருதுகின்றது. ஏனென்றால் அரசமைப்பு சீர்திருத்தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகிறது. அத்துடன் விஸ்தாரமான தேசிய கருத்தொற்றுமையும் அவசியம் என்றார் சமரசிங்க.

மேற்கத்திய நாடுகள் சிலவற்றில் பயங்கரவாத அமைப்பின் மிச்சமுள்ள பகுதியினர் மிகவும் முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்கள். அவர்களின் பிரதிநிதிகள் அரசுகள், ஊடகங்கள் மற்றும் இடங்களில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறார்கள். முன்னேறி வரும் அமைதி மற்றும் மீள் இணக்க செயற் பாடுகளை சீர் குலைக்கிறார் கள். இந்த விதம் தவறான செய்திகள் அப்பட்டமான பொய்கள் மற்றும் அழுத்தங்களுக்கு சில சர்வதேச சமூகத்தினர் இரையாகி இருப்பது கவலை தருவதாகும் என்றார்.

சமரசிங்க நிகழ்த்திய உரையின் பிரதான அம்சங்களில் ஒன்று மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவிப்பிள்ளையை அவர் கண்டித்ததாகும். இலங்கையின் உள்ளூர் பிரச்சினை அவர் சர்வதேச மயமாக்கி விட்டமை மீள் இணக்கத்தை பாதிப்பதாக இருக்கிறது என்று அவர் கூறினார். ஐ.நா. மற்றும் மேடைகளில் இலங்கையைப் பற்றி எதிர்மறையான கருத்துக்களை வெளியிடுவதை 2009 மே இல் இருந்து அவர் வழமையாகக் கொண்டிருக்கிறார் என்று குற்றஞ்சாட்டினார் சமரசிங்க. இந்தக் கருத்துக்களை அவர் கூறியபோது மாநாட்டு மண்டபத்தில் நவிபிள்ளையும் இருந்தார். அவர் ஊடகங்களுக்கு அடிக்கடி இந்தக் கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளார். சபையின் அருகிலேயே இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை பிரதிநிதிகள் குழுக்களை பாதித்திருக்க முடியும். குறிப்பாக தீர்மானங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டு வந்த வேளைகளில் என்றார் சமரசிங்க. இவ்வாறு மிக உயர்ந்த பதவியில் இருப்பவர் தொடர்புகளற்றவராகவும், உயர் நோக்குடையவராகவும் , பாரபட்சமற்றவராகவும் இருக்க வேண்டும்என்பதற்கு இது நேர்மாறான செயற்பாடு என்று சமரசிங்க குற்றஞ்சாட்டினார்.

### ஜேர்மனி பிள்ளைக்கு ஆதரவு

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் உயர் ஆணையாளர் தொடர் பான இலங்கையின் குற்றச்சாட்டு நியாயமற்றது என்று ஜேர்மனி கருத்து வெளியிட்டுள்ளது.

ஜேர்மன் தூதுவர் ஹின்ஸ் எச்.சுமாக்கா பேசும் போது ஆணையாளர் பிள்ளை நியாயமற்ற முறையில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி வருகிறார் என்றுகூறினார். இலங்கை அமைச்சர் வழங்கிய அறிக்கையானது ஒரு விவரணமாகவே இருந்தது என் றார்.

அமெரிக்க தூதுவர் டொனஹூ பேசுகையில் மூன்று நாடுகளின் பிரச்சினைகள் பற்றி மட்டுமே குறிப்பிட்டார். சிரியா, மாலி மற்றும் இலங்கை ஆகியவையே அவை. மோதல்கள் முடிவடையும் போது நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் முதலியவற்றை இடைக்கால நீதி வழங்கல் மூலம் முன்னேற்றுவது மிக முக்கியமாகும் என்றார் அவர். இந்த குறிக்கோளை அடைவதற்கு இலங்கை அரசானது தான் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு வழங்கியுள்ள பரிந்துரைகளின் ஆக்கபூர்வமானவற்றை தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதே வழி என்றார். சர்வதேச சட்டங்களை மீறியமைக்கான பொறுப்புக் கூறலை அது நிறைவேற்ற வேண் டும். மற்றும் போர்க்குற்றங்கள் தொடர் பான குற்றச்சாட் டுக்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றார். இலங்கை தொடர்பான மனித உரிமை சபையின் உயர் ஆணையாளர் அண்மையில் விடுத்த அறிக்கையை நாம் வரவேற்கின்றோம். இந்த விடயங்களில் இலங்கை அரசு மனம் வைத்து செயற்படவில்லை என்ற ஆணையாளரின் ஆதங்கத்திலும் மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தை மற்றும் சட்ட ஆட்சியை சீர்குலைக்க அண் மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர் பான ஆணையாளர் கருத்திலும் நாம் பங்கேற்கின்றோம். மீள்நல்லிணக்கம், ஜனநாயக ஆட்சிமுறை, பொறுப்புக் கூறல் போன்ற பிரச்சினைகள் தொடர்பில் எஞ்சி நிற்பவைகளை தீர்த்துக் கொள்வதற்கு உதவி வழங்க ஆணையாளருடன் நாமும் ஆயத்தமாக இருக்கின்றோம் என்றார் அமெரிக்க தூதுவர்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்தை ஆதரிக்கும் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் மனித உரிமைகள் சபையின் மாநாடு நடைபெறும் இடத்துக்கு அருகில் முகாமிட்டுள்ளார்கள். அவர்கள் இலங் கைக்கு எதிராக நடைபெறும் ஆர்ப் பாட்டங்களில் கலந்துகொள்வதற்கு காத்திருக்கிறார்கள். அதேசமயம் சர்வதேச அழுத்தங்களும் பல்வேறு திசைகளில் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன.

பல்வேறு உலகநாடுகளின் தலைநகர்களில் நடைபெற்று வரும் பல சம்பவங்கள் இலங்கையை மையப் படுத்துபவையாகவுள்ளன. ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதும், ஊடகங்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட அனுபவமற்ற அதிகாரிகளின் தவறுகளும் அரசுக்கு நன்மை ஏற்படுத்தப் போவதில்லை. மூலோபாயங்கள் ஏன் தவறிப் போய்விட்டன? இலங்கையின் போக்கு ஏன் அதிக எதிரிகளை சம்பாதித்துக் கொள்வதாகவே முடிந்துள்ளது. நண்பர்கள் ஏன் தூர ஒதுங்கிப் போய் விட்டார்கள்? என்பவை பற்றி ஆராயப்படுவது இப்பொழுது இல்லாவிட்டாலும் ஜெனிவா மாநாட்டுக்குப் பிறகாவது மிக அவசியமான தேவையாகும். இந்தப் பணியானது உள்நாட்டிலேயே தொடங்கப்பட வேண்டும்.

இந்த வகையிலான முக்கிய பொறுப்புகளில் திறமையான தொழில் சார் அனுபவசாலிகள் இடம்பெற வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை.

★

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்:** உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.

**மிதுனம்:** பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**கடகம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிட்டும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**சிங்கம்:** நீண்ட நாளாக பிற்போட்ட காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைபட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

### நாளை

மாசி- 21 செவ்வாய்க்கிழமை 05.03.2013

திதி: அட்டமி பி.ப. 02.27 வரை

நட்சத்திரம்: கேட்டை மு.இ. 07.36 வரை

சுபநேரம்: 10.55- 12.25 வரை

இராகுகாலம்: 03.25- 04.55 வரை

**துலாம்:** எளிதாக முடிய வேண்டிய விடயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** சிக்கனமாக இருங்கள். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். வியாபாரத்தில் மிகுதிகள் கிடைக்கப்பெறுவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்களைத் தவிர்க்கவும்

**தனுசு:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். அரசு காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** உடன்பிறந்தவர்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்

**கும்பம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுக போட்டிகளை வெல்வீர்கள்.

**மீனம்:** உங்கள் அறியாமலேயே ஒருவித படபடப்பு வந்து செல்லும். சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | | | 3 | | | 9 | |
| 2 | | 4 | 8 | | 6 | 1 | | 5 |
| 9 | 7 | | 2 | | | | | 4 |
| | | 3 | | | 2 | 9 | | |
| 4 | | | | | | | | 3 |
| | | 6 | 9 | | | 7 | | |
| 6 | | | | | 9 | | 1 | 7 |
| 1 | | 5 | 6 | | 7 | 3 | | 9 |
| | 9 | | | 8 | | | 5 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 3 | 5 | 6 | 9 | 7 | 1 | 8 |
| 1 | 9 | 6 | 8 | 7 | 2 | 5 | 3 | 4 |
| 7 | 5 | 8 | 3 | 4 | 1 | 9 | 2 | 6 |
| 5 | 1 | 2 | 6 | 9 | 7 | 8 | 4 | 3 |
| 3 | 6 | 9 | 4 | 1 | 8 | 2 | 7 | 5 |
| 4 | 8 | 7 | 2 | 5 | 3 | 6 | 9 | 1 |
| 9 | 7 | 5 | 1 | 8 | 4 | 3 | 6 | 2 |
| 8 | 3 | 1 | 7 | 2 | 6 | 4 | 5 | 9 |
| 6 | 2 | 4 | 9 | 3 | 5 | 1 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
24.09.1941

உதிர்வு
02.02.2013

### அமரர் மயில்வாகனம் கிருஷ்ணானந்தா

(ஓய்வு பெற்ற முகாமையாளர் - மீன்பிடி கூட்டுத்தாபனம் - பேசாலை)

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்.

கடந்த (02.02.2013) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.03.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

C.C.T.M.S. ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (33917) (45.6.7) **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
24 * 06 * 1938



ஆண்டவன் அடியில்
03 * 02 * 2013

திருமதி

### இராஜகோபால் பரமேஸ்வரி

*எல்லோரையும் அன்பால் அரவணைத்த இனிய நெஞ்சமே*
*உறங்கிவிட்டதே! நல்லவராக வல்லவராக*
*கள்ளமில்லா உள்ளத்துடன் வயது வேறுபாடின்றி பழகிடும்*
*இனிய அம்மாவாக ஒளிவிட்ட சோதி*
*திடீரென அணைந்துவிட்டதே!*
*அம்மா! உன் இல்லத்தில் குழுமியிருந்து*
*குதூகலம் அடையும் இளைய பறவைகள் நாம்*
*உமை பிரிந்த வேதனை தாளாது தவிக்கின்றோம்*
*விதியின் வலிய கரங்களில் நீங்கள் வீழ்ந்து விட்டீர்கள்*
*உங்கள் நினைவுச் சுடர்களால்*
*நாம் வேதனையில் துடிக்கின்றோம்.*

(27773) (10,6,7)

இன்று (04.03.2013) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம் பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

'அருந்ததியார் வளவு'
அல்வாய் மேற்கு, திக்கம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்:
குடும்பத்தினர்.




உயர்கல்வி அமைச்சில் பல்கலைக்கழகங்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ளும் விரைவு தொலைபேசித் தொடர்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்து முதலாவது அழைப்பைப் பெற்று உரையாடினார். அருகில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, பிரதி அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க, உயர்கல்வி அமைச்சின் செயலர் சுனில் நவரத்ன ஆகியோர் காணப்படுகின்றனர்.

# தனிநபர் வைத்திய தரவுகளை இணையத்தில் பதியும் முறை

## மருத்துவத்துறையில் புதிய திருப்புமுனை

கொழும்பு, மார்ச்.4

இலங்கையில் மருத்துவ சிகிச்சை முறையில் புதிய திருப்பு முனையை ஏற்படுத்தும் வகையில் தனிநபர் சுகாதாரத் தரவுகளை பதிந்துவைக்கும் இணையத்தள பக்கவடிவமைப்பை மருத்துவ சபை அறிமுகம் செய்துள்ளது.

குறித்த இணையத்தளத்தில் தனி நபர் எதிர்நோக்கிய நோய், திகதி, வைத்தியர், சிகிச்சை, நோய்க்கான காரணம் ஆகிய தரவுகளைப் பதிந்து வைக்க முடியும். அதனால் எதிர்காலத்தில் மருத்துவர்கள் தம்மிடம் வரும் நோயாளி குறித்த பூரணமான விவரங்களைப் பெற்று சிறப்பான சிகிச்சையை முன்னெடுக்க முடியும் என்று மருத்துவ சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தச் செயன்முறை அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற ஏழு நாடுகளில் மருத்துவத் துறையில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. அந்த நாட்டு மக்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டே இலங்கை மக்களுக்கென இந்த இணையப் பக்கம் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறித்த இணையத்தள பக்கத்துக்குச் செல்வதற்கு பிறந்த திகதி மற்றும் பால் ஆகியன மாத்திரமே கட்டாயமாகவுள்ளமையால், அதில் சேகரிக்கப்படும் தரவுகளைக் குறித்த நபர் மாத்திரமே இரகசியமாகப் பார்வையிட முடியும் என்று மருத்துவ சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

# ஜனநாயகம் நோக்கிய பயணத்தை அரசு ஆரம்பிக்க வேண்டும்

## மங்களசமரவீர எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,மார்ச்4

அரசு ஜனநாயகத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அரசின் வெளியுறவுக் கொள்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது. அரசின்பிழையான வெளியுறவுக் கொள்கையே சர்வதேச ரீதியான அழுத்தங்களுக்கு பிரதான காரணமாகும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல், பொருத்தமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் போன்றவை குறித்து அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

18ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்து, சுயாதீன ஆணைக்குழுக்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலைக்கு அரசு எவரையும் குற்றம் சுமத்த முடியாது. சகல பிரச்சினைகளுக்கும் அரசே பொறுப்பு. குற்றச்செயல்களுக்கு தண்டனைவிதிக்கப்படாத நிலைமை நீடித்து வருகிறது. இதனை ஆரோக்கியமான சூழ்நிலையாகக் கருத முடியாது.

நாட்டின் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது. முழுமையாக எதேச்சாதிகாரம் நிலவி வருகிறது.

சர்வதேச நாடுகளுடன் ஒத்துப் போக முடியாத நிலைமையே இன்று சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் ஏற்படக் காரணமாகும்.

அரசு சர்வதேச சமூகத்துக்கு அளித்த வாக்குறுதிகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறியுள்ளது. அதன் காரணமாக பல்வேறு நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.- என்றார். (ச)

# உலக நாடுகளை சமாளிக்க முடியாது

## அரசு அதனைப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார் தூதர் தயான் ஜயதிலக்க



ஜெனிவாவுக்குச் சென்றுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

கொழும்பு,மார்ச்4

உலக நாடுகளை இலகுவில் சமாளிக்க முடியாது. அவ்வாறு அரசு கருதுவது நியாயமற்றது. அனைத்து நாடுகளும் எங்களைப் போன்ற கொள்கைகளைக் கொண்டிருக்காது என்பதனை அரசு புரிந்து கொள்ளவேண்டும்.

-இவ்வாறு பிரான்ஸிற்கான இலங்கைத் தூதர் தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

ஜெனிவாவுக்குச் சென்றுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

நாம் சொல்லும் விடயங்களை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட வேண்டியது முக்கியமானது.

ஜெனிவா பிரதிநிதிகளை கொழும்பில் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் கட்டுப்படுத்த முயற்சிப்பது பொருத்தமாகாது. குறிப்பிட்ட வரையறைகளுக்கு உட்பட்டு செயற்படுவது நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடும்.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ள தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்பில் இலங்கை வெற்றி பெற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

எனினும் நடைமுறைச் சாத்தியமாகச் சிந்தித்தால் சிலவேளைகளில் இந்தத் தீர்மானம் இலங்கைக்கு பாதகமாக அமையக்கூடும்.- என்றார். (ச)

# கடமை தவறும் தூதர்களை மீள அழைக்கத் தீர்மானம்

கொழும்பு,மார்ச்4

இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் நோக்கில் உலக நாடுகளில் நியமிக்கப்பட்டுள்ள சில தூதர்கள் தமது கடமைகளை உரிய முறையில் ஆற்றுவதில்லை என்று குற்றஞ்சாட்டும் அரசு இவ்வாறு கடமை தவறி செயற்படும் தூதர்களை, தொடர்ந்தும் பணி நீக்கம் செய்யத் தீர்மானித்துள்ளது.

செயற்திறனற்ற தூதர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகிப்போர் மீள இலங்கைக்கு அழைக்கப் படவுள்ளனர்.

சில ராஜதந்திரிகள் நாட்டுக்காக செயற்படாது, தங்களது அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் செயற்படுகின்றனர். இவ்வாறு கடமை தவறிச் செயற்பட்ட சில தூதர்கள் ஏற்கனவே மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

சில தூதர்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு மாறாக, இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனர் என்று குறிப்பிடப்படுகிறது. (ச)

# சுங்க வரியை இறக்குமதியாளர் இணையம் மூலம் செலுத்த வசதி

கொழும்பு,மார்ச்4

இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான சுங்கத் தீர்வை மற்றும் வரிகளை வங்கிக்குச் செல்லாமலே இணையத்தின் ஊடாக செலுத்தக் கூடியவகையில் சுங்கத் திணைக்களமும், மக்கள் வங்கியும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இறக்குமதியாளர்கள் இல்குவான முறையில் சுங்க வரியை அல்லது ஏனைய வரிகளை இணையத்தின் ஊடாக செலுத்த முடியும். மக்கள் வங்கியின் இணையத்தளத்தின் மூலம் அதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று சுங்கத் திணைக்களத்தின் இணையத்தின் மூலமும் அதற்கான ஆவணத்தைச் தரை இறக்கம் செய்ய முடியும்.

இறக்குமதியாளர்கள் வங்கி அலுவல்கள் நேரத்தை தவிர்ந்த நேரங்களிலும் தீர்வைகளைச் செலுத்த முடியும். சுங்கத் திணைக்களம் அதனை அடிப்படையாகக் கொண்டு பொருள்களை உடனடியாக விடுவிக்கும் என்று கூறப்படுகிறது.

சுங்கத் திணைக்களம் ஏனைய தனியார் வர்த்தக வங்கிகளுடனும் உடன்படிக்கை செய்து கொள்ளவுள்ளது. (ச)

# தேசிய அடையாள அட்டையை புதுப்பிக்க புதிய நடைமுறை

தேசிய அடையாள அட்டை 10 வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பிப்பதற்கான புதிய நடைமுறை தொடர்பில் ஆள்பதிவுத் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்று ஆள் பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத்குமார தெரிவித்தார். இலத்திரனியல் அடையாள அட்டையை அறிமுகப்படுத்தும் திட்டத்துக்கு ஒத்ததாக 10 வருடங்களுக்கு ஒருமுறை அடையாள அட்டையைப் புதுப்பிக்கும் நடவடிக்கை குறித்து கவனம் செலுத்தப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அதனூடாக தமது புதிய தகவல்களை 10 வருடங்களுக்கு ஒருமுறை அடையாள அட்டையில் உள்ளடக்குவதற்கான வாய்ப்பு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)

# ஜெனிவா மாநாட்டில் அரசுக்கு பாதிப்பில்லை

## அனுரகுமார திஸாநாயக்க எம்.பி. கூறுகிறார்

அரசு காலனித்துவ ஆட்சியாளர்களின் தேவைக்ளைப் பூர்த்தி செய்கின்றது



கொழும்பு,மார்ச்4

மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கை அரசுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

காலனித்துவ ஆட்சியாளர்களின் நோக்கங்க்ளை நிறைவேற்றிக்கொண்டிருக்கும் இந்த அரசுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பை சுயாதீனமான அமைப்பாகக் கருத முடியாது. கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசுகளைப் போன்றே இந்த அரசும் காலனித்துவ ஆட்சியாளர்களின் தேவை களைப் பூர்த்தி செய்கின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

ராஜதந்திர உறவுகளில் குறைபாடுகள் காணப்பட்டாலும், ஏகாதிபத்திய ஆட்சியொன்றையே அரசு முன்னெடுக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ஜெனிவாவில் வரவுள்ளஇலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு முப்பது நாடுகள் ஆதரவு

கொழும்பு,மார்ச்4

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்துக்கு 30 நாடுகள் ஆதரவளிக்கவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீர்மானம் அமெரிக்காவால் முன்வைக்கப்பட உள்ளது. ஐரோப்பிய வலய நாடுகள் உள்ளிட்ட 30 நாடுகள் நேரடி ஒத்துழைப்பை வழங்கத் தயார் என்று அறிவித்துள்ளன.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பதா, இல்லையா? என்பது குறித்த இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு இது வரை வெளியிடப்படவில்லை. எனினும் இந்தியாவும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கும் என்று இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட உள்ள இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்பை வெளியிடுமாறு இலங்கை உலக நாடுகளிடம் கோரி வருகின்றது. அது தொடர்பில் ஜெனிவாவில் விசேட தெளிவுபடுத் தல் நடவடிக்கைகளை இலங்கைப் பிரதிநிதிகள் ஆரம்பித்துள்ளனர். (ச)

# உடன் விற்பனை மற்றும் ஏலம்

புதிய யாழ் டீசல் பொறியியலாளர்கள் (SPS குட்டி)

176, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## பார ஊர்தி உரிமையாளர்கள் திருத்துநர்கள் கவனத்திற்கு

06.03.2013 (புதன்), 07.03.2013 (வியாழன்), (9.00am to 6.00pm) ஆம் திகதிகளில் சகல Leyland, Isuzu, Tata புதிய, மற்றும் பாவித்த உதிரிப்பாகங்கள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு (உடன் விற்பனைக்கு மற்றும் ஏலம்). மற்றும் மிகவும் நல்ல நிலையில் உள்ள (41ஸ்ரீ Isuzu), (27ஸ்ரீ Isuzu), (HG 5xxx Leyland Need New Body) விற்பனைக்கு.

தகவல்:

சு. சுகந்தன் (S/O சு. சுப்பிரமணியம்)

0774 829 542

RG ads


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி முதுமாணி கற்கைநெறியின் (MEd) சக ஆசிரிய மாணவனான

மு.இராசலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்



திருமதி **முருகர் சிவயோகம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இணைப்பாளர், விரிவுரையாளர்கள், சக ஆசிரிய மாணவர்கள்,**

**பிராந்தியக் கற்கை நிலையம்,**

**கல்வி முதுமாணி கற்கை நெறி (MEd)**

**தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(34109)(10,6.7)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சிதம்பரபிள்ளை



மல்வில், இயக்கச்சியை பிறப்பிடமாகவும், பிரம்படி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிதம்பரபிள்ளை நேற்று (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகர்-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பரிமளம் அவர்களின் அன்புக் கணவரும், சிவாஜினி, லோஜினி (இத்தாலி), சுபாஜினி (பிரான்ஸ்), ஜெனார்த்தனன் (பிரான்ஸ்), தட்சாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், றுபேஜ்ராஜ் (ராஜ் யுவலர்ஸ்), திசரூபன் (இத்தாலி), சுப்பிரமணியம் (பிரான்ஸ்), சுரேஸ் (HNB சங்கானை) ஆகியோரின் மாமனும், லினோஜ்ராஜ், கௌனியன், சாயகி, கௌரீஸ், டியாசிகா, லக்ஷ்மிதா, யுவர்சன் ஆகியோரின் பேரனும், வள்ளிப்பிள்ளை, நாகாத்தை, காலஞ்சென்ற தெய்வானை மற்றும் வேலுப்பிள்ளை, நடராசா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.03.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**61/9, மில்லேன்,**
**பிரம்படி, கொக்குவில்.**
**0776636384**

(34111)(10,6.7)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத மட்டுவில் வடக்கு வீதி

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சிவன் கோயில் வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது உள்ளமையால் பொதுமக்களும் மாணவர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டுவில் வடக்கு, சிவன் கோயில் வீதி மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை இணைக்கும் வீதியாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியை மையமாகக் கொண்டு கல்வத்தை சிவன் கோயில், வேம்படிமுருகன்கோயில், செல்வ விநாயகர் ஆலயம் அமைந்துள்ளமையால் ஆலயங்களுக்குச் செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதி வயல் பிரதேசங்களுடன் இணைந்து காணப்படுகின்றமையால் விவசாயிகளும் தங்களுடைய உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு குன்றும் குழியுமாக காணப்படும் குறித்த வீதியைத் திருத்தியமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் குறித்த வீதிக்கு வீதி விளக்குகள் பொருத்தித் தரவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

### காசநோய் விழிப்புணர்வு

உலக காச நோய் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் காசநோய் விழிப்புணர்வு பற்றிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ். மாவட்ட காச நோய் தடுப்புப் பிரிவினர் அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த விழிப்புணர்வு செயற்பாட்டு வாரத்தில் பாடசாலைகள், பொது அமைப்புக்கள் போன்ற இடங்களில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயின் அறிகுறிகள் காணப்படுவோருக்கு உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

காசநோயால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றவர்களிடம் சிகிச்சையின் பின்னர் காணப்படும் முன்னேற்றம் பற்றிய ஆய்வை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 25.12.1930

இறப்பு 02.02.2013

### அமரர் நடராசா அருணாசலம்

கனடாவில் இறைவனடி சேர்ந்த எமது அப்பப்பாவின் மரணச் செய்தி அறிந்து நெஞ்சம் உடைந்து கனடாவுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் எமது இல்லத்துக்கு வருகை தந்தவர்களுக்கும் இன்று (04.03.2013) திங்கட்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளும்படி அழைக்கின்றோம்.

நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

திருமதி பா.தவரஞ்சினி
குடும்பத்தினர்.

## முதலாம் வருட நினைவஞ்சலி

வையத்துள் 25 * 04 * 1927



விண்ணுள் 14 * 02 * 2012

சங்கானையைப் பிறப்பிடமாகவும்
கொழும்பு, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி பரமேஸ்வரி சிவஞானம்.

திதி:- 04.03.2013

எம் பாசமிகு அம்மாவே!
தாங்கள் எம்மை விட்டகன்ற துயரமதில்
மூழ்கி இன்னும் மீளவில்லையே!
காலச் சக்கரத்தின் அதிவேக ஓட்டத்திலே
ஓராண்டு சென்று விட்டதே!
எத்தனை நூற்றாண்டு சென்றாலும்
தங்கள் பிரிவு எமக்கு ஆறாத்துயரமே!

என்றும் தங்கள் நினைவில் வாழும்,
குடும்பத்தினர்.

தேவாலய வீதி,
சங்கானை.

(33940)(8.7.6)

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

செல்வன்

### விமலகுரு ஜனோஜன்

(மு/ யோகபுரம் மகாவித்தியாலய மாணவன்)



அன்னை மடியில்
24.04.1992

இறைவன் அடியில்
16.02.2009

திதி: 04.03.2013

*அறிவு, ஆற்றல் பண்பு பாசம் என்ற எல்லா*
*இயல்புகளையும் பெற்று பதினேழு ஆண்டுகள்*
*எம்முடன் வாழ்ந்த அருமை மகனே!*
*எங்கள் விலை மதிக்க முடியாத "முத்தே" உன் நினைவுகள்*
*எம்மை வாட்டி வதைக்கின்றது. செல்வமே!*
*நான்கு ஆண்டுகள் என்ன நாலாயிரம் ஆண்டுகள் என்ன*
*நாம் இப் பூமியில் வாழுகின்ற எத்தனை ஆண்டானாலும்– நீ*
*பிரிந்த அந்த வேதனையான நாளை மறக்க முடியுமா?*

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
அப்பா, அம்மா, அக்காமார், அண்ணா, தங்கை,
அத்தான்மார், மருமகன் அனோஜன்

(34003)(6.7.11)

**கு.விமலகுரு, 7 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.**

# ட்டு ஒப்பந்தம் குறித்து அடுத்த வாரம் பேச்சு

## சம்பள அதிகரிப்பும் பெற்றுக் கொடுக்கப்படும் என்கிறார் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான்

நுவரெலியா,மார்ச் 4

தோட்டத் தொழிலாளரின் சம்பள அதிகரிப்பு குறித்த கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்துடன் அடுத்த வாரம் பேச்சு நடத்தப்படும். அதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள அதிகரிப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இந்திய அரசின் உதவியுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 4,000 வீடுகளை தோட்டப்பகுதிகளில் நிர்மாணித்து, லயன் அறைகளில் இருக்கும் மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

தோட்டங்களில் சட்டவிரோதமாக மது தயாரிப்பவர்கள் பற்றிய இரகசியத் தகவல்களை மக்கள் பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டும். மக்கள் சமூகப் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றாவிட்டால் அதனால் ஏற்படும் பாதிப்பை அவர்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெருந்தோட்டப் பகுதியைச் சேர்ந்த 3,010 பட்டதாரிகள் மலையகத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

தோட்டப் பகுதிகளில் வேறு இனத்தவர்கள் வந்து ஆசிரியர்களாகப் பணிபுரிந்தால் அவர்கள் விரைவில் வெளியிடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகின்றனர். அதைத் தடுப்பதற்காக இப்போது தோட்டப் பகுதிகளில் வாழும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தோட்டப் பாடசாலைகள் என்று எதுவும் இல்லை. தோட்டங்களில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் அரசுக்குச் சொந்தமான தேசியமட்ட பாடசாலைகளாகும். தோட்டங்களில் பாலர் பாடசாலைகள் மாத்திரமே தோட்ட நிர்வாகத்தின் அனுசரணையுடன் நடத்தப் படுகின்றன.

தோட்டப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கு உதவி செய்வதற்காக மாகாண சபையும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் வழங்கிய நிதியுதவியின் மூலம் 64 கிலோ மீற்றர் நீளமான தோட்ட வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தோட்டங்களில் உள்ள பிள்ளைகள் பல கிலோ மீற்றர்கள் நடந்து பாடசாலைகளுக்குச் செல்லும் அவல நிலை தற்போது இல்லை. அவர்களுக்கு போதியளவு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன.-என்றார். (ச)

## இன்னும் ஏன் அரசு மௌனம் காக்கிறது?

### அக்குறணையில் ரணில் கேள்வி

கண்டி,மார்ச்4

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக 33 சம்பவங்கள் இடம்பெற்ற பின்னரும் அரசு மௌனம் காக்கிறது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை சேர்த்து கொள்வதற்கான விசேட நிகழ்வு ஒன்று அக்குறணை நகரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று முஸ்லிம்களுக்கு எதிராக சில சக்திகள் களத்தில் இறங்கி உள்ளன. அரசு அதனைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றது. நான் இதைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசியபோது என்னைக் குற்றம் கூறுகின்றனர்.

ஹலால் சான்றிதழ் சம்பந்தமாக முஸ்லிம்களுக்கு இடையே ஒருமித்த கருத்து இல்லை. சிலர் ஹலால் சான்றிதழை உலமா சபை வழங்க வேண்டும் என்று கூறுகின்றனர்;மற்றும் சிலர் அரசு வழங்க வேண்டும் என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் இது தேவை இல்லை என்றும் கூறுகின்றனர். எனவே இது குறிப்பிட்ட குழுவின் பிரச்சினை. அதனைப் பயன்படுத்தி முழு முஸ்லிம் சமுதாயமும் பாதிக்கப்படுவதை எம்மால் அனுமதிக்க முடியாது.

ஹலால் சான்றிதழ் வழங்கும் பிரச்சினை சம்பந்தமாக எழுந்துள்ள பதற்ற நிலைமை சுமுகமான முடிவுக்கு கொண்டு வர அரசால் முடியும். முஸ்லிம்களுக்கு எதிராக அநுராதபுரத்தில் இடம்பெற்ற சம்பவத்தின் போதே நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் சென்றிருக்காது.

எனவே தற்போதைய அரசை மாற்றாமல் எதுவுமே செய்ய முடியாது. அதற்காகத்தான் கிராம மட்டத்தில் எமது அங்கத்தவர்களைப் பலப்படுத்தி 2014 ஆம் ஆண்டில் தேர்தல் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அதன்மூலம் மட்டுமே இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்.-என்றார். (ச)

## அக்கரைப்பற்றில் ஒருவர் வெட்டிக் கொலை

அக்கரைப்பற்று,மார்ச்4

அக்கரைப்பற்றில் ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைக்கு தனிப்பட்ட குரோதமே காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் அக்கரைப்பற்று, 6 ஆம் பிரிவைச் சேர்ந்த முகமட் முஸ்தப்பா பகாத் (வயது-24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ச)




'எகெட்' அமைப்பின் இரத்ததான முகாம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றபோது, அதில் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

## பாம்பு தீண்டி சிறுமி வைத்தியசாலையில்

மட்டக்களப்பு,மார்ச் 4

கிரான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள திகிலிவெட்டை பிரதேசத்தில் பாம்பு தீண்டிய நிலையில் சிறுமி ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த்ச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 3 மணிக்கு இடம் பெற்றுள்ளது. சங்கரப்பிள்ளை தாமரைச் செல்வி (வயது-13) என்ற சிறுமியே பாதிக்கப்பட்டவர் ஆவார். (ச)

## பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டும்கூட முஸ்லிம்கள் இடையே அச்சம்

### கல்முனை மு.கா. மாநகர சபை உறுப்பினர் கூறுகிறார்

கல்முனை,மார்ச் 4

நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்பும் முஸ்லிம் மக்களிடையே அச்சநிலை ஏற்பட்டுள்ளது என்று கல்முனை மாநகர சபை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எம். பறக்கத்துல்லா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டின் தற்போது ஏற் பட்டுள்ள அசாதாரண சூழலில் முஸ்லிம் அரசியல்வாதிகள் பொறுமையாகவும் நிதானமாகவும் நடந்து கொள் வது வரவேற்கத்தக்கது. எமது சமுதாயம் பொறுமையைக் கைக்கொண்டு உதவியை நாடுபாவர்களாக இருக்கின்றது.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலில் நாங்கள் மிகவும் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும். ஆரம்ப காலம் தொடக்கம் இலங்கை அரசுகளுக் கும் முஸ்லிம்களுக்கும் இடையில் அரசியல் ரீதியான நெருக்கமான தொடர்புகள் இருந்து வருகின்றன

1915 ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றிலே மறக்க முடியாத சிங்கள-முஸ்லிம் சமூகங்களிடையே முதன்முதலாக முறுகல் நிலை தோன்றியது. அதில் சுமார் ஆயிரம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இந்தக் கலவரத்தை சுமுகநிலைக்கு கொண்டுவருவதற்கு அந்தக் கால மூவின முக்கிய பிரமுகர்களும் அர்ப்பணிப்புடன் நடந்து கொண்டனர்.

இதற்குப் பின்னர் சிங்கள - முஸ்லிம் சமூகங்கள் ஒரு இணக்கப்பாட்டுடன் ஒன்றரக் கலந்து வாழ்ந்து வருகின்றனர். இரு சமூகங்களுக்கும் இடையில் உள்ள நல்லிணக்கமும் அரசியல் ரீதியான உடன்பாடும் முஸ்லிம்கள் இன்றுவரை நிம்மதியாக வாழவழியேற்படுத்தியது.

அந்த நிலைமை இன்று மாறியுள்ளது. தற்போது அரசுடன் அனைத்து முஸ்லிம் அரசியல் தலைமைகளும் ஒன்றாக இருக்கும் நிலையில் சிங்கள கடும் போக்காளர்களால் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் பாதுகாவலர்களாக முஸ்லிம் அரசியல்வாதிகள் மிகவும் பொறுமையாகவும், நிதானமாகவும் நடந்துகொள்வது வரவேற்கத்தக்கது.

இதேபோலத்தான் அரசும் தற்போதைய அசாதாரண நிலைமையை சாதாரண நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பயங்கரவாதகால சூழ்நிலைகளில் முஸ்லிம்களை சிங்கள சமூகமே பாதுகாத்து வந்தது. இது மறுக்க முடியாத உண்மை.

முஸ்லிம்கள் எந்த ஓர் இனத்துக்கும் எதிரானவர்கள் அல்லர். காலம் காலமாக முஸ்லிம்களுக்கு ஒவ்வொரு விதங்களிலும் அழிவுகள் வருவதையிட்டு முழு சமூகமே கவலை கொண்டுள்ளது.-என்றார். (ச-சி)

## ஐயங்கேணி பாடசாலைக்கு சுற்றுமதில்



மட்டக்களப்பு,மார்ச் 4

மட்டக்களப்பு வலயத்துக்குட்பட்ட ஏறாவூர்,ஐயங்கேணி தமிழ் வித்தியாலயத்துக்கான சுற்றுமதில் அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது. இந்த அடிக்கல்லை மட்டக்களப்பு வலயப் பணிப்பாளர் சுபா சக்கரவர்த்தி நட்டு வைத்தார்.

பாடசாலை அதிபர் எஸ்.ஜெயராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட பலர் கலந்துகொண் டனர்.

சுமார் 500 மாணவர்களைக் உள்ளடக்கிய இந்தப் பாடசாலை, இதுவரை காலமும் சுற்று மதில் இல்லாத குறையோடு இயங்கி வந்துள்ளது என்று அதிபர் எஸ்.ஜெயராஜா தெரிவித்தார். (ச)

## காரைதீவில் காட்டுப்புலி

### மக்கள் அச்சம்

அம்பாறை,மார்ச்4

அம்பாறை, காரைதீவு பகுதிக்குள் காட்டுப் புலி யொன்று பிரவேசிதுள்ளது. அதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இந்தக் காட்டுப்புலி காரை தீவு, 2 ஆம் பிரிவிலுள்ள வீட்டு வளவில் உள்ள வேம்பு மரத்திலேயே ஏறியிருக்கிறது.

சுமார் 4 அடி நீளமான இந்தக் காட்டுப் புலியைப் பிடிப்பதற்கான ஏற்பாடுகளை வன விலங்கு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)

## வான் விபத்தில் 7 பேர் காயம்

மஸ்கெலியா,மார்ச்4

மஸ்கெலியா, லகம் பிரதேசத்தில் வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த வான், 20 மீற்றர் ஆழமான பள்ளம் ஒன்றில் விழுந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விபத்துக் குள்ளானது.

இந்த விபத்தில் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத் தலைவி

**திருமதி கருணாகரேஸ்வரி திருஞானசம்பந்தக் குருக்கள்**



அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி யோர்க்கும், மலர்வளையங்கள் வைத் தோருக்கும் ஆறுதல் செய்திகள் அனுப்பி யோருக்கும், பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பலாலி றோட், ஆலடி வீதி,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(08) (10-6-7)

## மரண அறிவித்தல்

### திருமதி தயாநிதி சேகரன்

(வடமராட்சி (தெ.மே) பிரதேச சபை நூலக உதவியாளர், உடுப்பிட்டி.)



பண்டகை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தயாநிதி சேகரன் கடந்த (02.03.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதம் பிள்ளை-செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற விஜய சுந்தரம்-இராஜநாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகளும் சேகரன் (பாபு-வதிரி நூல் நிலைய உதவியாளர்) அவர்களின் அன்பு மனைவியும், தக்சிகா, திவாகர், அங்குசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவகௌரி, அழகன் மற்றும் ஜெயகௌரி, விஜய கௌரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், சோதி, காலஞ்சென்ற சிறி மற்றும் திரு(ஜேர்மனி),ரகு(கனடா), சிவா(ஜேர்மனி), இந்திரன் (நோர்வே), மூர்த்தி(கனடா), வாசு(டோகா), விஜி(ஆசிரியை), காலஞ்சென்ற ஜெயச்சந்திரன் மற்றும் பூவதாசன், ஜெகசோதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டகை,
உடுப்பிட்டி.
0776569970

(27780)(8.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு புதிய சட்ட விதிகள்

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் சட்ட விதிகளை மீளாய்வுக்கு உள்ளாக்கும் புதிய சட்ட மூலமொன்று விரைவில் கொண்டு வரப்படவுள்ளது.

இதன் மூலமாக லஞ்ச - ஆணைக் குழுவின் சட்ட மூலம், லஞ்சங்கள் சட்ட மூலம் ஆகியவற்றில் பத்து வரையிலான சட்ட விதிகளை மீளாய்வுக்கு உட்படுத்த எதிர்பார்க் கப்படுவதாக ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் நீதிபதியுமான பாலபட்ட பெந்தி தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் ஆணைக்குழுவின் சட்ட அதிகாரிகளுடன் இது சம்பந்தமான சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளதோடு, மேலும் பேச்சுக்கள் அடுத்த வாரத்தில் நடத்தப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

லஞ்ச ஆணைக்குழவின் சட்ட விதிகளில் தற்போது நிலவும் பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளைக் களைந்து சீர்படுத்துவதும் ஆணைக்குழுவை காத் திரமான ஊழல் ஒழிப்புப் பிரிவொன்றாக மாற்றுவதும் இந்த செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். (ஐ-22)


### வீடு வாடகைக்கு

கிளிநொச்சி இரத்தினபுரத்தில் குளியலறையுடன் ஆறு(6) அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு. தொடர்பு: 0777 196402

### வீடு விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு கல்வயல் சாவகச்சேரியில் 3 rooms, 2 hall , உடன் புதிய நிலையில் உள்ள வீடு 4½ பரப்பு காணியுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- 0777124469

### உடனடி வேலைவாய்ப்பு

உயர்கல்வி நிறுவனம் ஒன்றுக்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர். வயது எல்லை 20- 60. தொடர்புகளுக்கு:- 0779148753, 0217200777


## பாராட்டி வாழ்த்துகின்



யாழ் பல்கலைக் கழ
28ஆவது
பட்டமளிப்பு விழாவி

திருமதி
**பிரேமலதா சண்முகம்**
B.A. M.A.(Tamil)
(கிளி/கிளாலி றோ.க.த.க.பா)

முதுகலைமாணி (தமிழ்) பட்டம் பெற்றமையை பாராட்டி வீரபத்திரர் அருள் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றோம்.

உசன் தெற்கு,
மிருசுவில்.

வாழ்த்துவோர்:
அம்மா, அக்கா,
தம்பிமார்.

(c/6779)(10,6,7)

## கண்ணீர் அஞ்சலி



பூநகரி கமநல சேவை நிலையத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராக நீண்ட காலம் பணி புரிந்துவரும் தற்போது கிளி. மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் உயர் பதவி வகித்து வரும் பூநகரி பலநோக்கு கூ.சங்கத் தலைவருமான நடராசா சுந்தரமூர்த்தி அவர்களின் அன்புத் தந்தை

### பொன்னம்பலம் நடராசா

நெளுக்குளம், வவுனியா.

அவர்களின் பிரிவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

பூநகரி சாமிப்புலம் கமக்காரர் அமைப்பு
தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
17
07
1991

மறைவு
19
01
2013

அன்பு மகளே ஆசையுடன்
நாம் வளர்த்தோம்
நீ வளர்ந்து நிழல் தருவாய்
என்றிருந்த வேளையில்
காலன் கைப்பட்டு எம்மை விட்டு
பிரிந்தனையோ!
உன்னைப் பிரிந்து விழிநீர் சொரிந்து
விம்மி அழுகின்றோம்
மீண்டும் வருவாய் என்ற நினைவுடன்
காத்திருக்கின்றோம்

பானுஷாவின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அஞ்சலிகள் ஆறுதல் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றோம். இன்று (04.03.2013) திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியங்களிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பெரிய தம்பி சண்முகலிங்கம்

(முன்னாள் இயந்திர முகாமி, றோஸ் பிறாண்ட் இனிப்புத் தொழிற்சாலை - மானிப்பாய்)



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி சண்முகலிங்கம் நேற்று (03.03. 2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் ஸ்ரீதரன் (கனடா), பிரதீபன், காண்டீபன் (கனடா), குணசங்கரி ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமநாதனின் (இருபாலை கிழக்கு) அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ஆனந்தவல்லி மற்றும் தேவிபகவதி (கனடா), நடேசன் (கனடா), கமலா தேவி (இருபாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தணிகைரூபன், தணிகைவதனி, பார்த்தீபன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் சுதுமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வேலன் கோயிலடி, அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
சகோதரன், மனைவி,
பிள்ளைகள்.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.



சங்கானை பிரதேச செயலகத்தால் கால் ஊனமுற்ற பெண் ஒருவருக்கு முச்சக்கரவண்டி ஒன்று வழங்கப்பட்டது. முச்சக்கரவண்டியை சமூக சேவை உத்தியோகத்தர் க.அருந்தவராசா வழங்க, பயனாளியின் தாயார் பெற்றுக்கொண்டார். (3-100)

## தாதியியலில் விஞ்ஞான பட்டநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தாதியியலில் விஞ்ஞானப் பட்டநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி, இலங்கை மருத்துவ சங்க அங்கத்துவம், தாதியியலில் டிப்ளோமா, இரண்டு வருடத்துக்குக் குறையாத சேவைக் காலம் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (3-14)

## “இறைவனின் அருட்பார்வையே எம்மை விடுதலையாக்கும்”

கடவுளுடைய அருட் செயல்கள் வியப்புக்குரியவை. மனிதனால் ஆகாதது எல்லாம் கடவுளால் ஆகும். நம்முடைய மனமாற்றத்தின் மூலம் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் காலம்தான் தவக்காலம். விசுவசிப்பவர்களுக்கு விளக்கம் தேவையில்லை. அவநம்பிக்கையுடையவர்கள் அல்லது தம்முடைய வல்லமையினாலே எல்லாம் நடக்கும் என்று கடவுள் நம்பிக்கையற்றவர்களாக வாழ்பவர்களே இறுதியில் தோற்று விடுவார்கள். இறையருளும் எமது முயற்சியும் சேர்ந்தே மனமாற்றம் நம்பிக்கையினாலேதான் உருவாகும். எனவே இந்த மனமாற்றத்தை செப வாழ்வின் மூலமே உறுதியடையச் செய்யலாம்.

மன்னிப்பு, இரக்கம், கனிந்த அன்பு இவையே இந்தக் காலத்தில் நாம் ஏற்ற வேண்டிய தீபங்களாகும். பஞ்ச காலத்திலும் பசியின்றி வாழும் வழியை இறைநம்பிக்கையுடையவர்களுக்கு இறைவன் கொடுப்பார் என்ற செய்தியை சாரிபாத் என்ற இடத்தில் வாழ்ந்த விதவைத் தாய் மூலம் இறைவன் எடுத்துரைக்கின்றார்.




எலிசாவின் காலத்தில் பல பேர் தொழு நோயால் பீடிக்கப்பட்டும் சீரியாவைச் சார்ந்த நாமான் என்பவரே குணம் பெற்றார். இறைவாக்கினர்களின் சொற்களை ஏற்றவர்களே விடுதலையைப் பெற்றார்கள்.

இறைவன் பல்வேறு வகையில் எமக்கு அழைப்பு விடுகின்றார். அந்த அழைப்புக்களை நாம் இனம் கண்டு கொள்ளாவிட்டால் எம் வாழ்வு விடுதலை பெற முடியாது. நீதியின் பாதையில் அநேகர் நடப்பதில்லை. மன்னிப்பை ஈகையை மனமுவந்தளிப்பதில்லை. இருளின் பாதைக்கு வழிகாட்டும் விளக்குகளே ஏற்றப்படுகின்றன. மதுவிலே மகிழ்வைத் தேடும் அரும்புகள் மொட்டாகி மலர்கின்றன. சுயநலத் தென்றலே சுவாசமாகின்றது. மனமாற்றம் தவிர்ந்த மாற்றங்கள் பவனி வருகின்றன. எலியாவைப் போல, யோனாவைப் போல, ஆமோசைப் போல இறைவாக்கினர்கள் அவசியப்படுகின்றார்கள். அல்லலுறும் மானிடம் வெளிப்பாடு பெற உண்மை ஆன்மிகம் பெற்றுக் கொள்ள இறைவார்த்தையில் ஆளப்படுவோம், நம்புவோம், விசுவசிப்போம், செயற்படுவோம். தாழ்ச்சியோடு இறையருளுக்காகச் செபிப்போம். நாம் விரும்புவதைச் செய்வதில் அல்ல. செய்ய வேண்டும் என்று இறைவன் விரும்புவதைச் செயலாக்குவோம். குறை காண்பதையும் தீர்ப்பிடுவதையும் விடுத்து அயலவருடன் அன்புறவை வளர்த்துக் கொள்வோம். இறையன்பு பண்பில் வளரவும் ஏற்புடைய தவகாலத்தை எமதாக்கிக் கொள்வோம்.

அன்ரனி பீற்றர், ஆசிரிய ஆலோசகர் (R.C)

## அரச இசை விருதுகளுக்காக விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, மார்ச. 4

தென்மராட்சி பிரதேசத்தில் இசைத்துறையில் ஆர்வம் கொண்டவர்களிடமிருந்து அரச இசை விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலாசார மற்றும் அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக்கழகத்தின் அரச இசைக் குழு ஆகியவை ஒன்றிணைந்து இந்த வருடத்துக்கான அரச இசை விருது வழங்குவதற்கு தீர்மானித்துள்ளன. இதற்கமைய இசைத்துறையில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விருதுகளுக்கு கடந்த 2011, 2012 ஆகிய வருடங்களில் வெளிவந்த படைப்புக்களில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான சிறந்த பாடல் (தனி) (ஆண், பெண்) சிறந்த பாடலாக்கம் மற்றும் இசையமைப்பு, சிறந்த பாடல் வரிகள் ஆக்கம், சிறந்த இசை, ஒளி ஆக்கம் (இயக்கம்), சிறந்த இறுவட்டு (தயாரிப்பு). போன்றவற்றுக்கும்-

8 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட சிறந்த சிறுவர், சிறுமியர் தனிப் பாடல், திறந்த பிரபல சிறுவர் பாடல் வரிகள் ஆக்கம், இசையமைப்பு சிறந்த இயக்கம், சிறந்த சிறுவர் இறுவட்டு, சிறந்த கிராமியப் பாடல் தனி (ஆண், பெண்), சிறந்த நவீன வடிவிலான கிராமியப் பாடல், சிறந்த வானொலி இசை நிகழ்ச்சி, சிறந்த குழுப் பாடல் ஆகியவற்றுக்கும் அரச இசை விருது விழாவில் வைத்து விருதுகள் வழங்கப்படவுள்ளன.

உரிய விண்ணப்பப்படிவத்தையும் அறிவுறுத்தல்களையும் அந்தந்த பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்று விண்ணப்பிக்குமாறு கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-9)

## மக்கள் வங்கியின் புதிய பிராந்திய முகாமையாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 4

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய பிரதேச முகாமையாளராக கே.சுசீந்திரன் கடந்த மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பிராந்திய பிரதேச முகாமையாளராகக் கடமையாற்றிய எஸ்.பத்மநாதன் ஓய்வுபெற்றதை அடுத்து பிரதேச முகாமையாளராக கே.சுசீந்திரனும், உதவிப் பிராந்திய முகாமையாளராக எஸ்.நாகேஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (3-14)


# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னையின் மடியில் 23.06.1953

ஆண்டவனின் அணைப்பில் 19.01.2013

அமரர்

## கனகசுந்தரம் சிவராசா

நாள்கள் தான் நாற்பத்தைந்து ஆனதுவோ!
எங்கள் அப்பாவின் அன்பு முகம் கண்டு!
தேற்றுவார் யாருமின்றித் தேம்பியழுகின்றோமே!
ஈரவிழிகள் காயவில்லை உங்கள் அன்பு முகம் மறையவில்லை!
என் சொல்லி அழைப்போம் வார்த்தைகள் தான் இல்லையே!
நீங்கள் எம் மோடு வாழ்ந்த காலங்கள் - அப்பா!
கனவாகிப் போனாலும் - இன்னொரு ஜென்மம் உண்டானால்
எங்களிடம் மீண்டும் வாருங்கள் அப்பா!
உங்கள் நினைவுகள் எந்நாளும் எங்கள் மனதில் உயிர்வாழும்!

கடந்த (19.01.2013) சனிக்கிழமை அன்று அகாலமரணமடைந்து சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைத் தொடர்புகள் மூலமும், இணையத்தள மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர் களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் (02.03.2013) சனிக்கிழமை காலை கீரிமலையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகளும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (04.03.2013) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கோயிலாமனை, கொடிகாமம்.
தொ.பே: 077 3669620.

குடும்பத்தினர்.

(27862) (10,6,7)

advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின்
28ஆவது பட்டமளிப்பு விழாவில்
முதுகலைமாணி (Distinction Pass)
பட்டத்தினைப் பெற்ற
செல்வி நளினி இரத்தினசிங்கம்
(B.A(Hons), M.A)
ஆசிரியை, வ/நெடுங்கேணி மகாவித்தியாலயம்
அவர்கள் மேலும் பல
பட்டங்கள், பதவியுயர்வுகள்
பெற்று வளமாக வாழ வாழ்த்துகின்றோம்.

மூளாய். (34106)(8.6.7)
நா.ஜெயபாலன்,
திருமதி சி.ஜெயபாலன்
நா.பதுஜன்,
நா.பரணிஜா.

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி

[தேசிய பாடசாலை]

### பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்:- கல்லூரி பிரதான மண்டபம்[அருணாசல மண்டபம்]

காலம்:- 17.03.2013 ஞாயிறு மு.ப.9.30 மணி

தலைவர்:- அ.கயிலாயபிள்ளை[கல்லூரி முதல்வர்]

மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நலன் கருதி அனைத்துப் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அ.கயிலாயபிள்ளை
தலைவர்.

(ச/9217)(8.6.7)

கா.சிவஞானசுந்தரம்
செயலாளர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அப்பாப்பிள்ளை
கணேஸ்வரி
திதி.04.03.2013

தோற்றம்
19.04.1945

மறைவு
13.02.2012



எங்கள் அன்புச் சகோதரியே, மைத்துனியே, மாமியே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று
ஆனதம்மா ஆனாலும் உங்கள் பேச்சும்
சிரிப்பொலியும் இன்னும் எங்கள் காதுகளில் ஒலித்த
வண்ணம் உள்ளதம்மா உங்கள் ஆத்மா சாந்தி
அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

12/4, அத்தியடி புது வீதி,யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு

அன்னை மடியில்
23.10.1945



ஆண்டவன் அடியில்
24.02.2011

### அமரர் கமலா தேவி மகாலிங்கம்

(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க ஸப்தமி (04.03.2013 திங்கட்கிழமை)

ஈராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் மறைந்திடுமோ?
புன்னகை சிந்தும் உங்கள் முகம் காண
நித்தம் நித்தம் ஏங்கித் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய அல்லாரை
அறுகம் புலத்து விநாயகனின் பாதம் பணிகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"கமல மகால்"
சிற்றம் பலம் வீதி, மீசாலை (27866) (6.7.11)

கணவர்
குடும்பத்தினர்.

# ரயில் பாதைப் புனரமைப்பு பணிகள் தீவிரம்

சாவகச்சேரி,மார்ச்.20

ரயில் பாதை அமைப்பதற்கான முதற்கட்ட வேலைகள் கொடிகாமத்தில் கடந்த புதன் கிழமை ஆரம்பிக்கப்பட்டது. முதற்கட்டமாக ரயில் பாதை அமைந்திருக்கும் பகுதி கனரக வாகனங்களின் உதவியுடன் சமப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரயில் பாதை அமைப்பதற்கான தண்டவாளங்கள் கொடிகாமம் ரயில் நிலையப்பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரைக்குமான ரயில் பாதை அமைக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தாண்டிக்குளம் வரை ரயில் பாதை செப்பனிடப்பட்டுள்ளது. மாங்குளம் வரை புகையிரதப் பாதைகள் அமைப்பதற்கான துரித வேலைகள் நடை பெற்று வருகின்றன என்பவை குறிப்பிடத்தக்கது. (ஜ-131)

## திருகோணமலை மட்டக்களப்பில் பனம் பொருள் பயிற்சி நிலையம்

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், மார்ச் 5

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பனங் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

திருகோணமலை மாவட்டத்தில் 4 இடங்களில் பயிற்சி நிலையங்கள் இன்று 4 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபையுடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து இந்த பயிற்சி நிலையங்களை நடத்தவுள்ளன.

திருகோணமலை வீரச்சோலை, குச்சவெளிப் பிரதேசத்தில் சமாதான மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான அமைப்பின் நிதி உதவியுடனும் இக்பால்நகர், குச்சவெளி பிரதேசத்தில் கிராமிய மகளிர் அபிவிருத்தி அமைப்பின் நிதி உதவியுடனும் ஜமாலயா பிரதேசத்தில் சமாதான மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான அமைப்பின் நிதி உதவியுடனும் இருதயபுரம் மூதூர் பிரதேசத்தில் கரிதாஸ் கியூடெக் நிறுவனத்தின் நிதி உதவியுடனும் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளை 5 ஆம் திகதி 3 இடங்களில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

மாங்காடு, செட்டிப் பாலயம் பிரதேசத்தில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் நிதி உதவியுடனும் மாவடி, வேம்பு, சித்தாந்தி பிரதேசத்தில் பனை அபிவிருத்திச் சபையின் நிதியிலும் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பயிற்சி நிலையங்களுக்கும் தலா 5 லட்சம் ரூபாவரையில் நிதி உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கைத்தொழில் பயிற்சிகள் 6 மாதம் கொண்டவை. இதில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட பெண்களும், பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ளோரும் பயிற்சி பெற முடியும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## நலன்புரி நிலைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நலன்புரி நிலையங்களில் வாழும் 650 மாணவர்களுக்கு கல்வி உபகரணம் வழங்கும் நிகழ்வு மருதனார்மடம் யாழ்ப்பாண விவசாயக் கல்லூரியில் நேற்று 1.30 மணிக்கு இடம்பெற்றது.

மல்லாகம் கோணல்குளம் நலன்புரி நிலையம் மல்லாகம் நீதவான் நலன்புரி நிலையம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், சுன்னாகம் கண்ணகி நலன்புரி நிலையம், உரும்பிராய் யோகபுரம் நலன்புரி நிலையம் என்பவற்றில் தங்கியுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களையும், ஊனமுற்றோரைக் கொண்டுள்ள குடும்பங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், பூந்தளிர் பெண் தலைமைத்துவ அமைப்பின் தலைவி யூலியஸ் செல்வமலர், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன், பல்கலை விரிவுரையாளர் சூசை ஆனந்தன், கியூடெக் கரித்தாஸ் முன்னாள் இயக்குனர் அருட் தந்தை கி.ஜெயக்குமார், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்களான திருமதி பி.லவீனா, பிரியங்கர போஸ்தா, சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்தக்குருக்கள், வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் எஸ்.சுகிர்தன், வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் ரி.பிரகாஸ், இலங்கை வங்கியின் புன்னாலைக்கட்டுவன் கிளை முகாமையாளர் பி.காந்தரூபன், வடமாகாணக் கடற்தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ங-13)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா சிவகுருநாதன்



(உரிமையாளர் பாநு ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)

சண்டிலிப்பாய் மத்தி, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா சிவகுருநாதன் (அப்பன்) (01.03.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், அச்சுவேலியைச் சேர்ந்த வேதாரணியம் - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், கலாவதியின் அன்புக் கணவரும், பால்ராஜ், பானுஜா (விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகம் - மட்டக்களப்பு), துஷாரதன் (மாணவன் - யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (ரமணன் - கடை சண்டிலிப்பாய்), சிவபாக்கியம், சிவராசா (விநாயகர் ஸ்ரோர் - சண்டிலிப்பாய்), தருமரத்தினம் (சென்றல் மோட்டோர்ஸ் -யாழ்ப்பாணம்), குணராசா (சிவன்மோட்டோர்ஸ் - மானிப்பாய்), விமலாதேவி, கமலாதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவகுமார் (ஆஸ்திரேலியா), மாலதி (சுவிஸ்), ஜெயக்குமார் (சுவிஸ்), ரேவதி (கனடா), தனேஷ்குமார் (தொழில் வழிகாட்டல் அதிகாரி - தீவக கல்வி வலயம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.03.2013) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளை வீதி,
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய். (சி/8769) (10.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.
077 8152 415

## கந்தையா இரத்தினசபாபதி



வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை வடக்கு 5ஆம் வட்டாரம் மணியகாரன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினசபாபதி நேற்று (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சுந்தரலிங்கம், வரதலிங்கம், வசந்தா தேவி, சாரதாதேவி, லலிதாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீரஜனி, மனோகரி, இரத்தினகுமார், சிவநேசன் ஆகியோரின் அன்பு மாமனும் சுஜிந்தன், பவித்ரா, சுஜித்திரா, ஆர்த்தி, அகிலன், பகலவன், கனிநிலா ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, முத்துத்தம்பி, நாகராசா, காந்தம்மா, சின்னம்மா மற்றும் செல்லம்மா ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான நடராசா, தம்பு மற்றும் கந்தவனம், கணேஸ், சண்முகலிங்கம், தேவகி, தியாகேசன், சபாநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரம்.

தகவல்
சுந்தரலிங்கம் (மகன்)

## சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பௌராணிகர்)



மாவடி புலோலிதெற்கு புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை நேற்று (03.03.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும் கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய,கணக்காளர்), இராசையா (லண்டன்), இந்திரா ஆகியோரின் சகோதரரும் வே.வீரபத்திரபிள்ளை (இளைப்பாறிய உதவி- அரச அதிபர்), சத்தியபாமா, விமலா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் சுகுமாரன் (வீதி அபிவிருத்தித் திணைக்களம்), சுபத்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாதசுந்தரம் (சுவிஸ்), அன்பு மலர் (வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் துவாரகன், காருண்யா, சிவாஜினி, சுபாஜினி, கிஷோர், தமிழினி, யாழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாவடி, புலோலி தெற்கு புலோலியில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (04.03.2013) காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

0750496884

தகவல்
சுகுமாரன்.

## [illegible]ியா செல்லும் இலங்கையர்களுக்கு வெளிவிவகார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்.4

இந்தியாவில், பெரும்பாலும் தென்பகுதியில் இலங்கை எதிர்ப்புச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளது குறித்து, புதுடில்லியிலும் சென்னையிலும் உள்ள இலங்கைத் தூதரகங்கள், இந்திய அதிகாரிகளிடம் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம, இந்த விவகாரம் குறித்து இலங்கைத் தூதுவர்கள் புதுடில்லியிலும், சென்னையிலும் உள்ள அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

(ஐ)


## பாராட்டி வாழ்த்துகிறோம்.



யாழ்.மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் முகாமைத்துவ உதவியாளராக கடமை புரியும்

**திரு.இராமச்சந்திரன் நிரூபன்**

அவர்கள் 2013.02.28ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 28வது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்று கொள்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

இவர் மேன்மேலும் பலபட்டங்களைப் பெற்று வாழ்வில் வளமுடன் உயர்வடைய இறைவன் ஆசியினை வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
நானாவித இறைவரிப்பகுதி,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.


# கண்டியில் முஸ்லிம் விடுதி முற்றுகை பொதுபலசேனா அதிரடிப் பாய்ச்சல்

## தலதா மாளிகை படமும் பறிப்பு

கொழும்பு, மார்ச் 4

இஸ்லாத்துக்கு எதிராகப் பிரசாரப் போரை முடுக்கிவிட்டுள்ள பொதுபலசேனாவின் பிக்கு படையணி, கண்டியில் நேற்று முஸ்லிம் நபரொருவருக்குச் சொந்தமான சுற்றுலா விடுதியை முற்றுகையிட்டு அதிரடிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அத்துடன், அங்கிருந்த தலதா மாளிகை படத்தையும் பிக்குகள் அகற்றியுள்ளனர். பொதுபலசேனா படையணியின் இந்தத் திடீர் வேட்டை நடவடிக்கையானது கண்டி முஸ்லிம் வர்த்தகர்களுக்கிடையே பெரும் அச்சத்தையும் - பீதியையும் கிளப்பிவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு தெமட்டகொடையிலுள்ள மாட்டிறைச்சி பரிசோதனை மனையொன்றை பொதுபலசேனா அமைப்பு சுற்றிவளைத்து சோதனை நடத்தியிருந்த நிலையில், நேற்று கண்டியிலும் திடீரென சோதனை வேட்டையில் அப்படையணி இறங்கியுள்ளது.

முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான சுற்றுலா விடுதியில் புனித ஸ்தலமான தலதா மாளிகையின் படம் ஒட்டப்பட்டிருப்பதாகத் தமது அமைப்புக்குத் தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைத்தன என்றும், இதனையடுத்தே நாம் இங்கு விரைந்தோம் என்றும் சம்பவம் தொடர்பில் நியாயம் கற்பிக்கின்றது பொதுபலசேனா அமைப்பு.

பொலிஸாருடன் குறித்த சுற்றுலா விடுதிக்குள் நுழைந்த பிக்குகள், வரவேற்பறையிலிருந்தவரிடம் கடுந்தொனியில் பேசியுள்ளனர். இதனையடுத்து அவர் தான் சொந்தக்காரர் அல்லன் என்றும், உரிமையாளர் வந்துகொண்டிருக்கின்றார் என்றும் கூறினார்.

அதன் பின்னர் அங்கிருந்தவாறு உரிமையாளருக்கு அழைப்பை ஏற்படுத்திய பொதுபலசேனாவின் பிக்கு ஒருவர், அவரை உடன் வருமாறு கட்டளை பிறப்பித்தார். எனினும், குறிப்பிட்ட நேரத்துக்குள் அவர் வராததால் மீண்டும் அழைப்பை ஏற்படுத்திய அந்தப் பிக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் பேசியுள்ளார். அதுமட்டுமன்றி, பொலிஸாரின் முன்னிலையிலேயே அங்கிருந்த தலதா மாளிகை படத்தை பிக்குகள் குழு அகற்றியுள்ளது.

மேலும், அங்கிருந்த இஸ்லாத்தின் புனித நூல்கள் குறித்தும் பிக்குகள் துருவித் துருவி ஆராய்ந்துள்ளனர். இவர்களின் மேற்படி செயல்கள் கண்டிவாழ் முஸ்லிம் மக்களிடையே பெரும் பீதியை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில், அண்மையில் கண்டியில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், எச்சரிக்கும் தொனியில் ஆங்காங்கே சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

அதேவேளை, தொன்மை வாய்ந்த தலதாமாளிகையின் படத்தை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த சுற்றுலா விடுதியின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். எதிர்வரும் ஏழாம் திகதி இவர் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 10.10.1925 விண்ணில் 28.01.2013

**அமரர் விசுவநாதர் கனகரத்தினம்**

(ஓய்வுபெற்ற முகாமையாளர் கிளை13, தெல்லிப்பழை ப.நோ.கூ.ச)

கடந்த 28.01.2013 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நேற்று (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை கனடா மொன்றியலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. அதே நேரம் அராலி மத்தி சண்முகவடிவேல் நாகேஸ்வரி இல்லத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெற்றது. அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலமும் நேரிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(34065)(10.6.7)

அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
0770752313, 0778258730

திருமதி கனகரத்தினம்
குடும்பத்தினர் (கனடா)



## 31ஆம் நாள்நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு
07★09★1948

இறப்பு
02★02★2013

**அமரர் கந்தையா திருஞானம்**

உயர்ந்த பண்பு கொண்ட - எங்கள்உறவல்லவோ நீர் எமக்கு
ஊர் விழித்த வேளையிலே ஊர்க்குருவி போனதையா
எங்களைத் தவிக்க விட்டு எங்கையா சென்று விட்டீர்
ஏங்கித் தவிக்கின்றோம் ஏணியல்லோ நீர் எமக்கு

இன்று (04.03.2013) திங்கட்கிழமை எமது குலவிளக்கின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

29/35, நாவலடி லேன்,
உயரப் புலம், ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்


## சர்வதேச சமுகத்தை ஏமாற்றி விட முடியாது

### தயான் ஜயதிலக்க

கொழும்பு,மார்ச் 4

சர்வதேச சமூகத்தை சுலபமாக ஏமாற்றிவிட முடியாது என ஐக்கிய நாடுகள் அமைப்பின்இலங்கை முன்னாள் வதிவிடப் பிரதிநிதியும், சிரேஷ்ட இலங்கை ராஜதந்திரியுமான பேராசிரியர் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.


சர்வதேச சமூகத்தை இலகுவாக ஏமாற்றிடவிட முடியும் என அரசு நினைப்பதாகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படக் கூடிய சாத்தியம் அதிகளவில் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகத்திற்கு சரியான தகவல்களை எடுத்துச் செல்ல வேண்டியது மிகவும் முக்கியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஜெனிவாவிற்கு சென்றுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினர் சுயாதீனமான இயங்க அனுமதியளிக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரச கொள்கை வகுப்பாளர்களின் வரையறைகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கும் போது, குறித்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் பதிலளிப்பதில் பிரதிநிதிகள் குழு நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## மரண அறிவித்தல்கள்

### கபிரியேல் பர்னாந்து மரியாம்பிள்ளை
### (இளைப்பாறிய அதிபர்)



நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும், குருநகரை வசிப் பிடமாவும் கொண்ட கபிரியேல் பர்னாந்து மரியாம் பிள்ளை (02.03.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பர்னாந்து அருளாசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வேவியின் அன்புக் கணவரும், இரத் தினம் (நெடுந்தீவு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத் தலைவர்), தங்கப்பொன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ் சென்ற எட்வின் மற்றும் செல்வின் இரேனியுஸ் (பணிப் பாளர்), றசில்டா, பபில்டா, மெஸ்வின்( கன டா), ஸ்ரீபன் அசோக்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வதனா (லண் டன்), பிறேமாவதி(நோர்வே), காலஞ்சென்ற ரவி மற்றும் மகேந்திரன்(IOM சாரதி), றஜனி(கனடா), றொமி(லண்டன்) ஆகியோரின் மாமனும் செபமாலை மிக்கேட்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், அருட்தந்தை யூஜின் அமல்ராஜின் (OMI) பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(04.03.2013) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு 42/6 மவுண்கார்மேல் வீதி, குருநகரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து பிறந்த இடமானநெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு (05.03.2013) செவ்வாய் கிழமை காலை 9.30மணியளவில் நெடுந்தீவு மத்தி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

42/6, மவுண் கார்மேல் வீதி, குருநகர்.
10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

### இராசரட்ணம் யோகேஸ்வரி



புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பாண்டியன் தாழ்வு சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் யோகேஸ்வரி நேற்று (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை கலமானார்.

அன்னார் கிளாக்கர் -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசரட்ணத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சேரிகிழக்கு ஒழுங்கை.
பாண்டியன்தாழ்வு.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கமலாம்பிகை பரமானந்தம்



மருதடி புத்தூரைப்பிறப்பிடமாகவும், நவக்கிரி புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை பரமானந்தம் நேற்று(03.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெள்ளையன்- வெள்ளாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாதன்- வைரவி தம்பதியரின் அன்பு மருமகளும், பரமானந்தத்தின் (யா/புத்தூர் மேற்கு வளர்மதி சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம்) அன்பு மனைவியும், பிரியங்கா(கனடா), சாம்பவி, சமந்தி, தாரணி, கவிச்செல்வன், ஆகியோரின் பாசமிகு தாயும், சுகிர்தன்(கனடா), சந்திர காந்தன்(Ceylinco Life) ஆகியோரின் மாமியும், பொன்னம்மா, ராசமணி, தருமாராசா, சிவமலர் ஆகியோரின் சகோதரியும், யோகம், தவமணி (கனடா), திவ்வியராணி, மகாணந்தம் (சுவிஸ்), சச்சிதானந்தம், கருணானந்தம் (சுவிஸ்), உத்தமதேவி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.03.2013) திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிந்துசிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவக்கிரி, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

# பொமர்ஸ் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது ஊரெழு றோயல்



யாழ்ப்பாணம், மார்ச்.4

வதிரி பொமர்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் சமநிலை தவிர்ப்பு சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திய ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் பொலிகண்டி விண்மீன் விளையாட்டுக் கழகமும், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் ஒன்றை ஒன்று எதிர்த்தாடின.

போட்டியில் ஆரம்பத்திலேயே இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் சிறப்பான திறனை இரு அணி வீரர்களும் வெளிப்படுத்தினர். முதல் பாதி ஆட்டத்திலேயே கோலை அடித்து வெற்றியை தமது அணிக்கு பெற்றுக்கொடுப்பதற்காக ஊரெழு வீரர்களும், விண்மீன் வீரர்களும் ஏட்டிக்குப் போட்டியாக பந்தை கோல் கம்பம் நோக்கி நகர்த்திக்கொண்டிருந்தனர்.

ஆயினும் கோல் பெறும் முயற்சிகளை முறியடிப்பதில் இரு அணிகளதும் பின்கள வீரர்கள் குறியாக இருந்தார்கள். பின்கள வீரர்களைத் தாண்டி கோல் அடிப்பது என்பது இரு அணிகளுக்குமே சவாலான விடயமாக இருந்தன. எனவே முதல் பாதி ஆட்டத்தில் எந்தவொரு அணிக்கும் கோல் கிடைக்க வில்லை.

ஆயினும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் தமது ஆட்ட வியூகத்தை இரு அணி வீரர்களுமே மாற்றிக் கொண்டனர். ஒரு புறம் முன்னேறித் தாக்கிக்கொண்டு மறுமுனையில் தடுத்தாடும் உத்தியையும் இரு அணி வீரர்களும் கைக்கொண்டனர். இந்த முயற்சிக்கும் வெற்றி கிடைக்கவில்லை.

ஆட்டத்தின் 38 ஆவது நிமிடத்தில் ஊரெழு றோயல் அணிக்கு கோல் அடிக்கும் சந்தர்ப்பம் ஒன்று வாய்த்தது. 'மூலை உதை' ஒன்று றோயல் அணிக்கு கிடைக்க, அதனை அந்த அணி கோலாக்கி முன்னிலை பெறும் என்றே பலரும் எதிர்பார்த்தனர். எனினும் அந்த எதிர்பார்ப்பை விண்மீன் வீரர்கள் தகர்த்தனர். இதனால் நீண்ட நேரத்தின் பின் கிடைத்த இலகுவான கோல் பெறும் வாய்ப்பை ஊரெழு றோயல் அணி கோட்டைவிட்டது. அதன் பின்னரும் ஆட்டத்தின் வேகம் குறையவில்லை.

எனினும் கோல்களைப் பெறமுடியாது ஆட்டம் சமநிலையிலேயே முடிவுற்றது. இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதன்போது இரு அணிகளும் தலா 3 கோல்களை அடிக்க மீண்டும் சமநிலையே ஏற்பட்டது. அதன் பின்னர் இரு அணிகளுக்கும் தலா ஒரு சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தை மிகச் சரியாகப் பயன்படுத்திக்கொண்ட ஊரெழு றோயல் அணி ஒரு கோல் அடித்து முன்னிலைபெற, விண்மீன் அணி அந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்கியது. இதனால் 4:3 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் அணி வெற்றியீட்டி பொமர்ஸ் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக றோயல் அணியின் கபிலும் தொடர் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த சயந்தனும் சிறந்த கோல் காப்பாளராக விண்மீன் அணியின் டினேஸும் தெரிவானார்கள்.

(ந-23-422)



ஜப்பானிஸ் கொஜுரிய ஸ்போர்ட்ஸ் சங்கத்தினால் இந்தியா புதுச்சேரி மாநிலத்தில் நடத்தப்பட்ட சர்வதேச திறந்த கராத்தே சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணத்தைசேர்ந்த டி.அன்ரோஜ்னேஷ் பிரதம பயிற்றுநர் பிரிவில் காட்டா போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், ப.சாந்தரூபன் 80 கிலோவுக்கு மேற்பட்டவர்களுக்கு இடையிலான குமித்தே போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் கறுப்பு பட்டிக்கான காட்டாப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் ஜே.சுஜன் 65 கிலோவுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கான குமித்தேபோட்டியில் மூன்றாவது இடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் பெற்றுள்ளனர். (ந-23)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சனசமூகநிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் வலிகாமப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை மின்னொளியில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

**இரவு 7 மணி**

மாவை உதயதாரகை வி.க எதிர் உடுவில் ஆலடி சிந்து வி.க

★★★

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகத்தினால் வடமராட்சிப் பகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இன்றைய ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

**மாலை 3 மணி**

றேஞ்சர்ஸ் வி.க. எதிர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.க.

**மாலை 4 மணி**

கொலின்ஸ் வி.க.எதிர் பொலிகை பாரதி வி.க.

(ந-422-23)

# யாழ். மாவட்ட ஹொக்கி யூனியன் கல்லூரி வாகை

சமநிலை தவிர்ப்பு உதைகளை யூனியன் கல்லூரி சரியான முறையில் பயன்படுத்தி 3:2 என்ற கோல்களின் அடிப்படையில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை தோற்கடித்து யாழ். மாவட்ட சம்பியனானது.

வலி.வடக்கு, மார்ச்.4

யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கு இடையே கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஹொக்கி இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லாரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் விறுவிறுப்பாக இடம் பெற்ற நிலையில் முதலில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஒரு கோலைப் பெற்றது. இந்த நிலையில் சளைக்காது விளையாடிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் ஒரு கோலைப் பெற்று ஆட்டத்தைச் சமநிலைப்படுத்தியது.

போட்டி முடிவடையும் நேரம் வரை இரு அணிகளும் மேலதிக கோல்களை அடிக்க எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதனால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

எனவே வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக தலா 5 சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதனை யூனியன் கல்லூரி சரியான முறையில் பயன்படுத்தி 3:2 என்ற கோல்களின் அடிப்படையில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை தோற்கடித்து யாழ். மாவட்ட சம்பியனானது.

மூன்றாம் இடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

குறித்த மூன்று அணிகளும் இந்த வார இறுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள பாடசாலை அணிகளுக்கு இடையேயான தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ந-86)

## தெல்லிப்பழை கோட்ட மட்ட

# 19 வயதுப் பிரிவு வலைப்பந்து யூனியன் கல்லூரி சம்பியன்



வலி.வடக்கு, மார்ச்4

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கோட்டமட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.


தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வீராங்கனைகளின் வேகமான ஆட்டத்துக்கு வயாவிளான் மகா வித்தியாலய வீராங்கனைகளால் ஈடுகொடுக்க முடிய வில்லை. ஆயினும் அவர்கள் தமது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி ஓரளவுக்கு எதிர்ப்புக் காட்டினார்கள். இருப்பினும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் புள்ளிகள் ஏறிக் கொண்டே போனது. எனவே, ஒரு கட்டத்தில் புள்ளிகளைப் பெறுவதை விடவும், யூனியன் கல்லூரியின் புள்ளி பெறும் முயற்சிகளை தடுத்தாலே போதும் என்ற நிலையில் தற்காப்பு ஆட்டத்துக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வீராங் கனைகள் தள்ளப்பட்டனர்.

இதனால் முதல் பாதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 8:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்திலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியே ஆதிக்கம் செலுத்தியது. இருப்பினும் முதல்பாதி ஆட்டத்தைப்போல அதிகளவு புள்ளிகளை யூனியன் கல்லூரியால் பெறமுடியவில்லை. இரண்டாம் பாதி ஆட்டத்தில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வீராங்கனைகளின் ஆட்டம் அனைவரையும் கவர்ந்தது. இரண்டாம்பாதி ஆட்டத்தில் அவர்கள் வெளிப்படுத்திய திறனை முதற்பாதி ஆட்டத்திலும் காட்டியிருந்தால் யூனியன் அணியின் வெற்றியைத் தடுத்திருக்க முடியும். ஆயினும் காலம் கடந்தபின், அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இரண்டாம் பாதி ஆட்டத்தையும் யூனியன் கல்லூரியிடம் 3:2 புள்ளிகள் என்ற நிலையில் இழந்தது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 11:3 புள்ளிகள் என்ற அடிப்படையில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலத்தை வெற்றி கொண்டு தெல்லிப்பழை கல்விக் கோட்ட சம்பியனானது. (ந-86)

# நடால், ஜோகோவிச் சாதனைச் சம்பியன்




டுபாய் பகிரங்க ரென்னிஸில் ஜோகோவிச்சும், மெக்ஸிக்கன் ரென்னிஸில் நடாலும் சம்பியனாகினர்.

ஏ.டி.பி., அந்தஸ்து பெற்ற ஆடவருக்கான ரென்னிஸ் தொடர் டுபாயில் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், செக்குடியரசின் தாமஸ் பெர்டிக்கைச் சந்தித்தார்.

சுமார் ஒரு மணி நேரம் 34 நிமிடம் வரை நீடித்த இறுதிச் சுற்றில் ஜோகோவிச் 7:5, 6:3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றார்.இதன்மூலம் ஜோகோவிச், இந்தத்தொடரின் ஒற்றையரில் 4ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். முன்னதாக 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் அவர் ஹட்ரிக் சம்பியன் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று மெக்ஸிக்கோவில் உள்ள அகாபுல்கோ நகரில், ஆண்களுக்கான ஏ.டி.பி., அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர் நடந்தது. இதில் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் நடால், சக வீரர் டேவிட் பெரரை சந்தித்தார். இதில் ஆரம்பத்திலிருந்து அசத்திய நடால், 6:0, 6:2 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியனானார். (ங)





# மொழிதான் பிரச்சினை

உருது மொழியை அறிந்திராத பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் எப்படி வீரர்களோடு நெருக்கமான தொடர்புகளைப் பேணமுடியும்? எனவே அவர் அந்தப்பதவியிலிருந்து விலக வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் மொய்ன் கான் கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர் தோல்விக்குப் பின்னரே இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு 3 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியிருந்தது. இதன் காரணமாக பாகிஸ்தான் அணிமீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.


இதனையடுத்து பாகிஸ்தானின் பெரும்பாலான வீரர்களுக்கு ஆங்கிலம் புரியவில்லை.எனக்கோ அவர்களின் உருதுமொழி தெரியாது.தொடர்பாடல் பிரச்சினை காரணமாக நான் பயிற்றுவிக்கும் நுட்பங்களை பாகிஸ்தான் வீரர்களால் முழுமையாக உள்வாங்கமுடியவில்லை என்று பயிற்சியாளர் டேவ் வட்மோர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மொய்ன் கான்,

பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராக பாகிஸ்தானியரொருவரையே பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமிக்க வேண்டுமென நான் கருதுகிறேன்.

வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் பாகிஸ்தானின் கிரிக்கெட் கலாசாரத்தைப் புரிந்து நடந்து கொள்வதில்லை.உருதுமொழி தெரியாத வட்மோர் வீரர்களுடன் சரியான முறையில்தொடர்பு கொள்ள முடிவதில்லை.எனவே அவர் உருது மொழியைக் கற்றுக்கொள்வது அவசியம்.

டேவ் வட்மோருக்கு முன்பு இடைக்காலப் பயிற்றுவிப்பாளராகக் காணப்பட்ட மொய்சின் கான் வெற்றிகரமான பயிற்றுவிப்பாளராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். ஆயினும் அவரை அந்தப்பதவியிலிருந்து நீக்கி, டேவிட் வட்மோரை பயிற்றுவிப்பாளராக நியமித்தமை சரியான முடிவு அல்ல என்றார். (ங)





**ஒருமுனையில் இலக்குகள் சரிந்தாலும் எதிர்முனையில், 6 சிக்ஸர்கள் அடித்து மிரட்டிய சிமன்ஸ் அதிரடியாக அரைச்சதம் கடந்தார்.**

# சிமன்ஸ் அதிரடியில் சிதறியது சிம்பாப்வே

சிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது '20/20' போட்டியில், சிமன்ஸ் அரைச்சதம் அடித்துக் கைகொடுக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சென்றுள்ள சிம்பாப்வே அணி, இரண்டு 20/20 போட்டிகளில் பங்கேற்கிறது. முதல் போட்டி நோர்த் சவுண்ட் மைதானத்தில் நடைபெற்றது.நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர், முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

சிம்பாப்வே அணிக்கு சிபாண்டா [13], ஹெமில்டன் [9] இணை மோசமான தொடக்கத்தையே கொடுக்க முடிந்தது. அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர் ''டக்' அவுட்டானார். அடுத்து வந்த எர்வின் [34], வோலர் [49] இணை விரைவாக ஓட்டங்களைக் குவித்தது. நான்காவது இலக்குக்கான இணைப்பாட்டமாக இந்த இணை 60 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டது . எனினும் பின்வரிசை வீரர்கள் ஏமாற்ற, சிம்பாப்வே அணி 20பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மேற்கிந்திய தீவுகள் சார்பில் பெஸ்ட் 3 இலக்குகளைக் கைப் பற்றினார்.

எட்டக்கூடிய சுலபமான இலக்கைத் துரத்திய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சார்லஸ் [26] ஏமாற்றத்தையே அளித்தார். அடுத்து வந்த டெரன் பிராவோ ''டக்' அவுட்டானார். ஒருமுனையில் இலக்குகள் சரிந்தாலும் எதிர்முனையில், 6 சிக்ஸர்கள் அடித்த மிரட்டிய சிமன்ஸ் அதிரடியாக அரைச்சதம் கடந்தார். இவருக்கு டுவைன் பிராவோ நல்ல ஒத்துழைப்புக் கொடுக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணி 16.1 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி பெற்றது. சிமன்ஸ் 63 ஓட்டங்களுடனும், டுவைன் பிராவோ 38 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

ஆட்டநாயகன் விருதை சிமன்ஸ் தட்டிச்சென்றார். [ங]



# விஜய், புஜாரா சதம்

## வலுவான நிலையில் இந்தியா



புஜாரா, முரளி விஜய் ஆகியோரின் அபார சதங்களால் இந்திய அணி ஆஸிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வலுவான நிலையை அடைந்துள்ளது.

ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி ஹைதராபாத்தில் நடந்து வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல்நாள் ஆட்டத்தில் ஆஸி அணி 9 இலக்குகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது எவரும் எதிர்பார்க்காத வகையில் ஆட்டத்தை இடைநிறுத்தி இந்திய அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ஷேவாக்கும் முரளிவிஜயும் முதல் நாள் நிறைவில் இலக்கைப் பறிகொடுக்காமல் ஐந்து ஓட்டங்களை இந்திய அணிக்குப் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. வந்த வேகத்திலேயே பீற்றர் சிடிலிடம் இலக்கைப் பறிகொடுத்து 6 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார் சேவாக். தொடர்ந்து களமிறங்கிய புஜாராவுடன் இணைந்து கொண்ட முரளி விஜய் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் மதியபோசன இடைவேளை வரை 54 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. எனினும் அதற்குப் பின்னர் வேகங்காட்டிய புஜாராவும் விஜயும் ஓட்டக் குவிப்பில் இறங்கினர். பந்து எல்லைக் கோட்டை நோக்கி அடிக்கடி பறக்கத் தொடங்கியது. இவர்கள் இருவரையும் பிரிக்க ஆஸி. அணியின் பந்துவீச்சாளர்களால் நேற்றைய முழுநாளும் முடியவில்லை. இந்த நிலையில் புஜாரா 162 ஓட்டங்களுடனும், முரளி விஜய் 129 ஓட்டங்களுடனும் களத்தில் நிலைத்து நின்றனர். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 294 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டதால் இந்திய அணி இரண்டாம் நாள் ஆட்ட நிறைவில் ஓர் இலக்கு இழப்புக்கு 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்றும் இந்திய அணி இதே வேகத்தில் ஓட்டங்களைக் குவித்தால் இரண்டாவது போட்டியிலும் ஆஸி. அணியை இலகுவாக வீழ்த்த முடியும்.

## மீண்டும் வீழ்ந்தது பார்ஸிலோனா

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் லா லிகா உதைபந்து தொடரின் லீக் ஆட்டமொன்றில் பார்சிலோனா அணியை வீழ்த்தி ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றுள்ளது.



மட்ரிட் நகரில் நடந்த இந்த ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்திலேயே ரியல் மட்ரிட் அணி பார்சிலோனா அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. ரியல் மட்ரிட் அணியின் கரிம் பென்ஜிமா 6ஆவது நிமிடத்தில் முதலாவது கோல் அடித்தார்.

இதற்கு பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி 18வது நிமிடத்தில் கோல் அடித்து பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிவு 1:1 என சமநிலை வகித்தது.


இரண்டாவது பாதியில் அசத்திய ரியல் மட்ரிட் அணிக்கு 82வது நிமிடத்தில் செர்ஜியோ ரமோஸ் தலையால் முட்டி ஒரு கோல் அடித்தார். கடைசி நிமிடம் வரை போராடிய பார்சிலோனா அணியினரால் மேலதிகமாக கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் கடந்த ஐந்து நாள்களில் இரண்டாவது முறையாக ரியல் மட்ரிட் அணி, பார்சிலோனாவை வீழ்த்தியுள்ளது. சமீபத்தில், கோபா டெல் ரே உதைபந்து தொடரின் அரையிறுதிக்கான 2ஆவது போட்டியில் ரியல் மட்ரிட் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தப்போட்டியில் பார்சிலோனா அணியின் மெஸ்சி ஒரு கோல் கூட அடிக்கவில்லை.

இதுவரை விளையாடிய 26 போட்டியில் 22 வெற்றி, 2 சமனிலைகள், 2 தோல்வி உட்பட 68 புள்ளிகள் பெற்றுள்ள பார்சிலோனா அணி முதலிடத்தில் நீடிக்கிறது. அத்லெடிகோ டி மட்ரிட் [56 புள்ளி, 25 போட்டி] 2ஆவது இடத்தில் உள்ளது.

ரியல் மட்ரிட் அணி 55 புள்ளிகளுடன் [26 போட்டி, 17 வெற்றி, 4 சமனிலைகள், 5 தோல்வி] 3ஆவது இடத்தில் உள்ளது.

## பாகிஸ்தான் வெற்றி




இரண்டாவது 20/20 போட்டியில் பாகிஸ்தான் 95 ஓட்டங்களால் வெற்றி

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் தென்னாபிரிக்கா அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட 20/20 சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டி மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில் இரண்டாவது போட்டி நேற்று சென். சூரியன் பார்க்கில் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

பாகிஸ்தான் அணியின் சார்பாக ஜம்ஸெட் 2 பவுண்டரிகள் அடங்கலாக 13 ஓட்டங்களும், அகமட் 2 சிக்ஸர், 6 பவுண்டரி அடங்கலாக 46 ஓட்டங்களும், ஹபீஸ் 4 சிக்ஸர், 9 பவுண்டரி அடங்கலாக 65 பந்துகளில் 86 ஓட்டங்களையும், உமர் அக்மல் 1 பவுண்டரி அடங்கலாக 11 ஓட்டங்களும், அப்ரிடி ஆட்டமிழக்காமல் 3 பவுண்டரி அடங்கலாக 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். ஆட்ட நேர இறுதியில் பாகிஸ்தான் அணி 195 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளை இழந்திருந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா அணி சார்பாக மொரிஸ்,கேலின்வேல்ட் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

196 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா தொடர்ச்சியாக இலக்குகளை இழந்தது தென்னாபிரிக்கா சார்பாக டி வில்லியர்ஸ் மாத்திரமே அதிகூடட்சமாக 2 சிக்ஸர், 4 பவுண்டரி அடங்கலாக 36 ஓட்டங்களை பெற்றார். இதைவிட கேலின்வேல்ட் 3 சிக்ஸர் ஒரு பவுண்டரி அடங்கலாக 22 ஓட்டங்களையும், பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் ஒரு பவுண்டரி அடங்கலாக 13 ஓட்டங்களையும் மாத்திரமே பெற்றனர். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். 12.2 பந்துப்பரிமாற்றங்களில் தனது சகல இலக்குகளையும் இழந்து தென்னாபிரிக்கா 100 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர்குல் 4 இலக்குகளையும், ஹபீஸ் 3 இலக்குகளையும், மொகமட், யுனைஸ் கான் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஹபீஸ் தெரிவுசெய்யப்பட்டார். (ந)

**சல்லிக் கற்கள் விற்பனைக்கு**

கருங்கல் (6x9), சல்லிக் கற்கள்,கிரவல்,கட்டுமண், செங்கல் என்பன வவுனியா,கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களுக்கு தரமான பொருள்கள் குறைந்த விலையில் விநியோகம் செய்து தரப்படும்.



தொடர்புகளுக்கு
0773818799

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## …ளது பணத்தை …விரயமாக்கவோ அல்லது …யிரை ஆபத்தில் இட்டுச் செல்லவோ வேண்டாம்



**பிரெண்டன் ஓ கொணர்**
அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை தொடர்பான அமைச்சர்

இதுபற்றி மிகத் தெளிவாகக்கூற எனக்கு இடமளியுங்கள். மிகவும் நியாயமான ஒரு காரணமின்றி, எந்தவொருவருக்கும் புகலிடம் வழங்க, அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறானவர்கள் இலங்கைக்கு வரும் அடுத்த விமானத்திலேயே மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். எனவே, உங்கள் பணத்தை வீணாக விரயம் செய்ய வேண்டாம். உங்களது உயிரை ஆபத்தில் இட்டுச் செல்ல வேண்டாம்.

ஏற்கனவே இவ்வாறு இங்கு வந்த நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்திலும் இவ்வாறு வருபவர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற மிக நியாயமான காரணம் இல்லையேல், துரிதமாக உங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க நேரிடும். அவ்வாறானவர்களுக்கு பணம் அல்லது வேறு எந்த வகையிலான ஒத்துழைப்புக்களும் கிடைக்க மாட்டாது என்பதைக் கூறவேண்டும். தனது பணத்தை வீண் விரயம் செய்து, உயிரைப் பணயம் வைத்து, கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு வர முயற்சி செய்வது சிறிதேனும் பயனுள்ள ஒரு முயற்சியல்ல. மீண்டும் இலங்கைக்கு வரக்கிடைப்பது மாத்திரமே அதன் ஒரேயொரு பிரதிபலனாகும்.

உங்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல பொய் கூறுவார்கள். பொய் சத்தியம் செய்வார்கள். அவ்வாறு வருபவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை என்று நான் மீண்டும் கூறுகின்றேன். எந்தவித துரித பிரதிபலனும் கிடைப்பதில்லை. எவ்விதமான விசேட கவனிப்புகளும் கிடைக்காது.

மிகவும் ஆபத்தான முறையில் மேற்கொள்ளப்படும் படகுப் பயணங்களில் இருந்து மனிதர்களைப் பாதுகாக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றது.

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை எவ்வாறு மாற்றியுள்ளது?

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ள மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வதேச கொள்கைகளுக்கு அமையாத அனைவரும், துரிதமாக மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள்.

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்று மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வதே கொள்கைகளுக்கு அமையாத … இலங்கைச்

ஒரு ஜன்னல் இருக்கவில்லை. சூரியனைக் கண்களால் காணாது மூன்று வாரங்கள் நாம் நீண்ட தூரம் மிதந்து சென்றோம். உணவும், நீரும் மிகக் குறைந்தளவிலேயே எம்மிடம் இருந்தது. பசியும், வியர்வையும் தாங்க முடியவில்லை. நாங்கள் அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்ததும், சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் என்று எம்மைக் கைது செய்தனர். அவுஸ்திரேலியாவில் எமக்கு தொழில் இல்லை என்றும், வீணாக உயிரைப் பணயம் வைத்து இவ்வாறான ஒரு பயணத்தை மேற்கொள்ள முன்னர், சற்று சிந்திக்க இருந்ததாகவும் அவர்கள் எம்மிடம் கூறினர். நான் ஒரு பொறியில் மாட்டிக்கொண்டேன் என்பது அப்போதுதான் எனக்குத் தெரிய வந்தது. நான் நினைத்தவாறு எதுவுமே நடக்கவில்லை. IOM மூலமாக, எங்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. உயிரைப் பணயம் வைத்து, இவ்வாறான ஆபத்துமிக்க பயணத்தை மேற்கொள்ள நினைக்கவும் வேண்டாம் என்றுதான் நான் கூறுவேன்.”

(இதில் குறிப்பிடப்படும் பெயர் மாத்திரம் மாற்றப்பட்டுள்ளது)

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை ஏன் மாற்றியது?

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற படகுச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, படகுச் சவாரிகளினால், மக்களைக் காப்பாற்ற அவுஸ்திரேலிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதனால் அவர்களுக்கு எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை. உயிரைப் பணயம் வைத்து இங்கு வந்தாலும், அவர்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அவர்களுக்கு கிடைக்கும் ஒரேயொரு விடயம் யாதெனில், கையிலுள்ள பணம் விரயமாவதுடன் ஆழ்கடலில் தமது உயிரை மாய்த்துக்கொள்வதும் மாத்திரமே.

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற படகுச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, படகுச் ச… …ல், மக்களைக் காப்…




### ஹஸிதவின் பயங்கரமான அந்த உண்மைச் சம்பவம்

“எனது பெயர் ஹசித. எனக்கு நன்கு அறிமுகமான ஒருவர் என்னிடம் வந்து "படகு மூலமா அவுஸ்திரேலியா செல்ல முடியும்" என்று கூறினார். சுமார் 20,000 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம் என்றாலும், பணக் கஷ்டம் காரணமாக, படகில் அவுஸ்திரேலியா செல்ல நான் தீர்மானித்தேன். இதற்காக நான் வட்டிக்கு பணம் பெற்றேன். கடன்களை வாங்கினேன். வீட்டுப் பத்திரத்தையும் அடகு வைத்தேன். ஒரு நாள் இரவு சுமார் 50 பேர்கள் கொண்ட எமது குழு படகில் ஏறியது. காற்று வரக்கூட படகில்

அவுஸ்திரேலியாவுக்கு படகில்
போக வேண்டாம்
Australian Government


## கண்ணீர் அஞ்சலி



கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரியா மர அரிவு காலை உரிமையாளர்
**செல்லத்துரை செல்வநாதன்**
அவர்கள் 02.03.2013 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!
**மகாலிங்கம் (வவி) குடும்பத்தினர்.**
(34100)(6.7.11)

## காணிகள் விற்பனைக்கு

நாவற்குழி மகா வித்தியாலயத் திற்கு முன்பாக 150 மீற்றர் தூரத்தில் 25 பரப்பு காணியும், புத்தூர் தெற்கு வேலன்திடல் என்ற நெற் பரப்பு 99 உம் உடன் விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 579 3166
(33937)(45.6.7)

## வேலையாள்கள் தேவை

எமது வர்த்தக நிலையத்தில் கடமையாற்றுவதற்கு கீழ்வரும் வேலையாள்கள் (ஆண்கள்) உடன் தேவை. தங்குமிட வசதி தரப்படும். தங்கி நிற்பவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். தரமான சம்பள ம் வழங்கப்படும்.

1) பில் கிளாக்
2) விற்பனையாளர்
3) சமையல் ஆள்கள்

நேரில் வரவும்
தொடர்பு:
சிறி கண்ணன் ஸ்ரோஸ்
திருநெல்வேலி சந்தி.
0777769231
(34038)(6.7.11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பத்மநாதன் ஆனந்தராசா
(B.com.(Acco x Spec),SLPS 2- II)
எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்து வரும் எமது பாடசாலையின் முதல்வர், இலங்கை அதிபர் சேவையில் தரம் -2- II இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு, நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் பல் துறையிலும் உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ இறையாசி வேண்டுகின்றோம்.
ஆசிரியர்கள், மாணவர்கள்,
கிளி / பரமன்கிராய் அ.த.க. பாடசாலை.
(கி/6774)(46.6.7)

## பணியாளர் தேவை- ஆறுதல் நிறுவனம்

* எழுதுவினைஞர் (பூரண கணினி அறிவுடையோர்)
* எழுது வினைஞர் (கணக்கியல் தேர்ச்சி பெற்றோர்)

வயது 40 இற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்
ஆர்வமும், விருப்பும் உடைய இருபாலாரும் தங்கள் திறமையை காட்டும் ஆவணங்களுடன் நேர்முகத் தேர்விற்காக கீழ்காணும் முகவரிக்கு 09.03.2013 A B Ö Pöo » 9.00 ©o US @ µi ¯öP வருகை தரவும்.

தொடர்புகளுக்கு: 'ஆறுதல்'
இல.172, சேர்.பொன்.இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212219254
(33980)(6.7.11)

# வணக்கம்!



AIA Insurance Lanka PLC (Co.No.PQ 18) இனால் வெளியிடப்பட்டது 03/2013

90 வருடகாலமாக தொடரும் பாரம்பரிய உரிமையுடன் ஆசிய பசிபிக் வலயத்தி
உலகின் மிகப் பெரிய காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றும், ஆசியாவின் முன்னே
இப்போது இலங்கையை புதிய உலகுடன் இணைக்கிறது. வணக்கம், நாம் உங்

மேலதிக விபரங்களுக்கு **0112 310310** ஐ அழைக்கவும் அல்லது உங்களின்

aialife.com.lk

# ம்! Welcome to AIA



லயத்தினுள் பல மில்லியன் உயிர்களுக்குப் பாதுகாப்பளிக்கும்
முன்னோடிக் காப்புறுதி நிறுவனமுமான AIA இன்ஷுவரன்ஸ்,
ம் உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்!

**ங்களின் AIA வெல்த்பிளானரை நாடவும்.**

# யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மிகப்பெரிய இந்திய கல்விக் கண்காட்சி

பிரவேசம் இலவசம்

ON THE SPOT ADMISSIONS

edCIL

# INDIAN Education Fair

விஷேடமாக உயர்தரப்பரீட்சையில் தோற்றியோர் மற்றும் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு ஆர்வமுள்ளவர்களுக்காக

2013 மார்ச் மாதம்

5 மு.ப. 10.30 – பி.ப. 6.30

6 மு.ப. 10.30 – பி.ப. 12.00

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

## இந்திய கல்விச் சந்தை உங்களுக்கு வழங்குவது என்ன?

- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்

ORGANISED BY
edCIL
EdCIL (India) Limited
A GOVERNMENT OF INDIA ENTERPRISE

SUPPORTED BY
Consulate General of India Jaffna

PROFESSIONAL EXHIBITION ORGANISER
LECS
LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

OFFICIAL TV



# Gold Medal Winning Brand in Malaysia

## Year 2011




fujipure
*Breathe in life*

## யாழ்-குடாநாட்டு மக்களுக்கு ஓர் நற்செய்தி

**GLOBAL TECH** இன்று (04 மார்ச் 2013) தனது வாயு சீராக்கல் (எயார் கண்டிஷன்) கிளையை யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்கிறது.

**சுபநேரம்: பி.ப 12.26 - பி.ப 1.56 வரை**

*அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்*

**கிளை அலுவலகம்**
320A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 221 9870
கணேஷ் - 077 2106030 சுதர்ஷன் - 077 2106044

**தலைமை அலுவலகம்**
32, பத்தரமுல்ல வீதி, எத்துள் கோட்டே
தொலைபேசி: 0094 11 5357773 / 4852780 / 4379397

மின்னஞ்சல்: was.gtssl@sltnet.lk இணையத்தளம்: www.globaltech-group.com